விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

32°c - 25°c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 95 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 17, திங்கட்கிழமை 29.02.2016

# கோத்தா, நாமல் அடுத்து கைதாவர்

## இறுதியில் நானும் கைதாவேன் என நேற்று கண்டியில் கூறினார் மகிந்த

கொழும்பு, பெப்ரவரி 29
அரசின் கைது வேட்டைப் பட்டியலில் அடுத்ததாகச் சகோதரர் கோத்தபாயவும், மகன் நாமலுமே உள்ளனர் என்றும், இறுதியாகத் தன்னையும் கைது செய்வார்கள் என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்றுத் தெரிவித்தார்.
அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நான் ஒருபோதும் வெளியேறமாட்டேன் என்றும் அவர் இடித்துரைத்தார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்றுக் கண்டிக்குப் பயணம் மேற்கொண்டு தலதா மாளிகையில் விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார். வழிபாடுகள் முடித்துத் திரும்புகையில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே, மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இதன்போது, அவர் மேலும் பக். 22



## வடக்குக்கு வருகிறார் பொன்சேகா

கொழும்பு, பெப்.29
பிராந்திய அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விரைவில் வடமாகாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
இந்த வாரம் தலதாமாளிகைக்குச் செல்லவுள்ள பக். 22

## விரைவில் மகிந்தவுக்கு எதிராக வழக்கு

கொழும்பு, பெப்.29
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதிஆணைக் குழு திட்டமிட்டுள்ளது.
இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
சுயாதீன தொலைக்காட்சியில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட ஐவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தொடரப்படவுள்ளது. பக். 22

## முச்சந்தி முரளி



குற்றம் உள்ள நெஞ்சு தான் குறுகுறுக்கும் பாருங்கோ...

## 6ஆவது நாளாகவும் தொடர்ந்தது அரசியல் கைதிகள் போராட்டம்

### மேலும் சில கைதிகள் இன்று உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 29
நீண்டகாலமாக விசாரணைகளின்றி தடுத்துவைத்திருக்கும் தம்மை விடுதலை செய்யக்கோரி உணவு தவிர்ப்பை ஆரம்பித்துள்ள கொழும்பு மகசின் சிறையிலுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகள் உடல்நிலை பாதிக்கப்பட்டு சோர்வடைந்த நிலையிலும் நேற்று ஆறாவது நாளாகவும் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.
குறித்த 14 கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவாக மகசின் சிறைச்சாலையில் உள்ள ஏனைய 36 தமிழ் அரசியல் கைதிகள் உட்பட பக். 22

## சுமந்திரனின் யோசனையை நிராகரித்தார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், பெப். 29
யாழ்.நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபையினர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவை நியமிக்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட யோசனையை நிராகரித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், நகர அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பிலான விடயம் ஆராய் எடுக்கப்பட்டது.
இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாழ்.நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பில், கடந்த வெள்ளிக்கிழமை பக். 25

## பலாலி ஆசிரியர் கலாசாலையை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

### யாழ். ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 29
பலாலி ஆசிரியர் கலாசாலையை உடனடியாகத் தற்காலிக இடத்திலாவது மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், பலாலி ஆசிரியர் கலாசாலையின் சொந்த நிலத்தை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும் எனக் கோரியும் இரண்டு தீர்மானங்கள், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று எடுக்கப்பட்டுள்ளன.
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது.
இதில் கல்வி தொடர்பான விடயம் ஆராயப்பட்டபோது, ஆசிரியர் கலாசாலை தொடர்பிலும் விவாதிக்கப் பக். 22

## வீரகெட்டியில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, பெப். 29
வீரகெட்டியவில் வாகனத்தினுள் வைத்து ஒருவர் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
குறித்த சம்பவம் தொடர்பில் தேடுதலில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள பொலிஸார், எனினும் துப்பாக்கிதாரிகள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை எனக் கூறியுள்ளனர்.
வீரகெட்டிய நைல விகா பக். 22

## குடிதண்ணீரால் எம்மினத்தை நாமே அழித்து வருகின்றோம்

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நேற்று மாவை. எம்.பி. விசனம்

யாழ்ப்பாணம், பெப். 29
குடிதண்ணீர்ப் பிரச்சினையில், எமது இனத்தை நாமே அழித்துக் கொண்டிருக்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இணைத் தலைவர்களுள் ஒருவருமான மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இறுதி விடயமாக, இரணைமடுக் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இது தொடர்பில் இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டப் பொறியியலாளர் பாரதிதாசன் கருத்துத் தெரிவிக்கையில், எமது அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் இது பக். 23

## ஐ.நா. அறிக்கையாளர்கள் இருவர் ஏப்ரலில் கொழும்புக்கு வருவர்



கொழும்பு, பெப்.29
ஐ.நாவின் விசேட அறிக்கையாளர்கள் இருவர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.
நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களின் சுதந்திரம் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் மொனிக்கா பின்ரோவும், சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரமான, இரக்கமற்ற மற்றும் இழிவுபடுத்தும் செயல் அல்லது தண்டனை குறித்த சிறப்பு அறிக்கையாளர் ஜுவன் மெண்டிஸ் ஆகியோரே ஏப்ரலில் இலங்கை பக். 23

## கொப்பேக்கடுவவும் டக்ளஸும் இணைந்து எனது 3 பிள்ளைகளையும் கைது செய்தனர்

### அவர்களை மீட்டுத் தாருங்கள் என்று தாயார் ஒருவர் நேற்றுச் சாட்சியம்

யாழ்ப்பாணம், பெப்.29
1990 ஆம் ஆண்டு கொப்பேக்கடுவவும் டக்ளஸ் தேவானந்தாவும் இணைந்து கைது செய்த 600 பேரில் இருந்த எனது மூன்று பிள்ளைகளும், பெறாமக்கள் மூவரையும் மீட்டுத்தாருங்கள் என அல்லைப்பிட்டியைச் சேர்ந்த தாயார் சூசைதாஸ் யேசுரட்ணம் சாட்சியமளித்தார்.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்று வேலணை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்த அமர்வில் சாட்சியமளிக்கும் போதே சூசைதாஸ் யேசுரட்ணம் பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்காது முடிந்தது யாழ். ஒருங்கிணைப்புக் கூட்டம்

## சகல விடயங்களும் ஆராய்ந்து முடிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 29

பல்கலைக்கழகத்தினர், இலங்கைப் போக்குவரத்துச் சபையினர், தனியார் போக்குவரத்துச் சபையினர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகள், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுப் பங்கெடுக்கவில்லை. இந்தக் கூட்டத்தில் பங்கெடுக்காத அதிகாரிகள் தொடர்பில் அவர்களிடம் விளக்கம் கோருமாறு, யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் இணைத் தலைவர்களுள் ஒருவரான முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பணித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்றது. அன்று பல்வேறு விடயங்கள் ஆராயப்படாத நிலையில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. அதனடிப்படையில் கடந்த கூட்டத்தின் எஞ்சிய விடயங்களை ஆராய்வதற்காக நேற்றுக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

**அமைச்சர் 'அவுட்'**

இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்ட நால்வரில், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மட்டும் பங்கேற்கவில்லை. ஏனைய இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, இ.அங்கஜன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். அவர்களின் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது.

**சீறிய சீ.வி.கே**

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர், மாவட்ட செயலக கேட்போர் கூடத்துக்கு வருகைதந்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், தனக்குரிய ஆசனம் தவறாக ஒதுக்கப்பட்டிருந்தமை தொடர்பில், அதிகாரிகளுடன் முரண்பட்டார். ஒழுங்குமுறையில் தனக்குரிய ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்க, அதிகாரிகள் அவ்வாறுதான் ஒதுக்கப்பட்டிருந்தது. மண்டபத்துக்கு முன்னதாக வந்த மக்கள் பிரதிநிதிகள் தமக்கு ஏற்றவாறு இடங்களில் அமர்ந்ததால் இந்த நிலை ஏற்பட்டது என்று தெளிவுபடுத்தினர்.



**பேச்சை சுருக்குங்கள்**

அரச அதிபர் வரவேற்புரை நிகழ்த்தினார். இதன் போது இயன்றளவு பேச்சைச் சுருக்குங்கள் என்று மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டார். இல்லாவிடில் இன்றைய கூட்டத்திலும் ஆராய்ந்து முடிக்க முடியாமல் போய்விடும் என்று குறிப்பிட்டார். அரச அதிபரின் கருத்துக்கு சகலரும் மதிப்புக் கொடுத்தனர். இதனால் அதிகாரிகள் விரைவாக தங்கள் விடயங்களை வெளிப்படுத்தினர். நேற்று எஞ்சிய சகல விடயங்களும் ஆராய்ந்து முடிக்கப்பட்டது.

**வெற்றுக் கதிரைகள்**

ஞாயிற்றுக்கிழமையான நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பெருமளவான அதிகாரிகள் கலந்து கொண்டனர். இருப்பினும் ஒரு சில அதிகாரிகள் மாத்திரம் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறான முக்கிய கூட்டத்தில் அதிகாரிகள் கலந்து கொள்ளாமல் விட்டது தவறு. இவ்வாறு அவர்கள் கலந்து கொள்ளாமைக்கான காரணத்தைக் கேட்டறியுமாறு மாவட்ட அரச அதிபருக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் பணித்தார்.

**அவமானப்படுத்த வேண்டாம்**

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அ.அஸ்மின், இ.ஆனோல்ட் இருவரும், யாழ்ப்பாணப் பிரதேச செயலாளருக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இணைத் தலைவர்களுள் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் அதற்கு கடுமையான கண்டனத்தை தெரிவித்தனர்.

(ற-5-ரி5)

## இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் எனது மகன் தவறவிடப்பட்டார்

அச்சுவேலி, பெப்.29

எமது குடும்பம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உள்ளே போகும் போது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதால் எங்களை விட்டு மகன் பத்மசீலன் தவறிவிட்டார். அவர் 2013 ஆம் ஆண்டு கடிதம் ஒன்றை வெலிக்கந்தை பொலன்னறுவையில் இருந்து அஞ்சல் மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தங்களில் பலரை வெலிக்கந்தையில் வைத்திருப்பதால் மீட்பதற்கு முயற்சி எடுங்கள் எனக் கூறியிருந்தார். எனவே மகன் பாதுகாப்புத் தரப்பில் உள்ளார் அவரை மீட்டுத் தாருங்கள் இவ்வாறு அவரது தந்தையான புத்தூரைச் சேர்ந்த எஸ்.தம்பித்துரை சாட்சியமளித்தார்.

காணாமற்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அமர்வு கோப்பாயில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் புத்தூரைச் சேர்ந்த எஸ்.தம்பித்துரை தொடர்ந்து சாட்சியமளிக்கையில், 2009 ஆம் ஆண்டு மே மாதம் காணாமற்போன எனது மகன் பத்மசீலன் வெலிக்கந்தையில் இருப்பதாகவும், தன்னை மீட்குமாறும் கடிதம் மூலம் அனுப்பியுள்ளார்.

நான் பல இடங்களுக்கு அலைந்து அலுத்துப் போனேன். குடும்பம் பொருளாதாரக் கஷ்டமான நிலையில் உள்ளது. என்னால் ஒன்றுமே செய்யமுடியாது, இத்தகைய விசாரணைகளில் எனக்கு நம்பிக்கையில்லை. ஜனாதிபதி ஆணைக்குழு என அழைப்பாணை கிடைத்திருப்பதால் இறுதிச் சந்தர்ப்பமாக உங்கள் முன்வந்துள்ளேன் -என்றார்.

எனது மகன் அனுப்பிய கடிதம் விசாரணைக்குரிய கோவையில் உள்ளது எனக் கூறியதும், ஆணைக்குழுவின் தலைவர் பரணகம கடிதத்தின் மொழிபெயர்ப்பை கேட்டறிந்து குறிப்பு எடுத்துக் கொண்டார்.

விசாரணையின்போது, பரணகம இந்தக் கடிதம் ஒரு முறையான ஆவணம் ஆகையால் மேல் நடவடிக்கைக்குச் சாதகமாக இருக்கும். உங்கள் வீட்டுக்கு அதிகாரிகள் வரும்போது கடிதம் தொடர்பான விவரத்தையும் குறிப்பிட்டு முறைப்பாட்டை பதிவு செய்யுங்கள் எனக் கேட்டுக்கொண்டார். கடிதத்தின் சாராம்சத்தை அறிந்து கொள்வதற்கு ஊடகவியலாளர்கள் முயன்ற போதும், தனிப்பட்ட பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டுக் கூறமுடியாது என தம்பித்துரை மறுத்து விட்டார்.

(ஐ-4,11)



திருகோணமலை மனையாவெளி கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இராட்சதத் திருக்கை மீன் ஒன்று சிக்கியுள்ளது. சுமார் ஆயிரத்து 500 கிலோ கிராம் நிறையுடைய இந்த இராட்சதத் திருக்கை மீன் அப்பகுதி மீனவர் ஒருவரது வலையில் பிடிபட்டுள்ளது. கடந்த வெள்ளி மாலை 6 மணி அளவில் கடலில் வீசிவிடப்பட்ட தனது வலையை சனிக்கிழமை காலையில் எடுக்கச் சென்ற குறித்த மீனவரான ராஜேந்திரத்தினது வலையில் ராட்சத மீன் அகப்பட்டிருந்தது. (ற)

## செங்கை ஆழியான் காலமானார்

செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் அழைக்கப்படும் ஈழத்து பிரபல எழுத்தாளர் கந்தையா குணராசா நேற்றுக் காலமானார்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக்கல்வியையும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உயர்நிலைக் கல்வியையும் இவர் கற்றார்.

புதினங்கள், சிறுகதைகள், புவியியல், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை என பல் துறைகளிலும் விளங்கிய இவர் முன்னாள் உதவி அரச அதிபராகவும், மாநகரசபை ஆணையாளராகவும், பல்கலைக்கழக பதிவாளராகவும் பதவி வகித்துள்ளார்.

கடந்த 2 வருட காலமாக நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்த இவர் நேற்று தனது 75 ஆவது வயதில் உயிரிழந்தார்.

(ற-ஐ-ரி)

## இந்தோனேசியாவில் கைதானவர் என்ன ஆனார் எனத் தெரியவில்லை

### சகோதரி ஆணைக்குழு முன்பாக சாட்சியம்

ஆஸ்திரேலியாவுக்கு கப்பலில் சென்ற போது இந்தோனேசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டார் என்று கூறப்படும் தம்பியை மீட்டுத் தருமாறு அவரது சகோதரி ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்தார்.

ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் நோக்கில் கொழும்பில் இருந்து 2009-10-13 அன்று கப்பலில் சென்றவேளையில் இராசையா-ஆனந்தீபன் என்னும் எனது சகோதரனை இந்தோனேசிய நாட்டுப் பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என 2009-10-20 ஆம் திகதி இந்தோனேசிய இணையத்தளங்களில் புகைப்படத்துடன் செய்தி வெளிவந்தது. அந்தப் புகைப்படத்தில் எனது தம்பியின் புகைப்படமும் இருந்தது.

அவ்வாறு பிரசுரிக்கப்பட்டுள்ள புகைப்படத்துடன் எனது தம்பியுடன் அருகில் இருந்த ஒரு சிறுவன் ஒருவனை சில காலம் கழித்து இந்தியப் பொலிஸார் விசாரணை மேற்கொள்வது போன்ற புகைப்படமும் வெளிவந்தது.

குறித்த புகைப்படத்துடன் இது தொடர்பான ஓர் ஆக்கம் உள்ளூர் பத்திரிகையிலும் வெளிவந்திருந்தது.

அதனால் இந்திய இளைஞர்களை இந்தியாவிடமும், இலங்கை இளைஞர்களை இலங்கை அரசிடமும் இந்தோனேசிய அரசு ஒப்படைத்துள்ளது என்று நம்புகின்றோம்.

இதனால் இலங்கை அரசிடம் கையளித்ததாக நம்பப்படும் எனது தம்பியை மீட்டுத் தாருங்கள் எனக் கோருகின்றேன் என சகோதரி ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக புகைப்படங்களுடன் சாட்சியமளித்தார். (ற-ஐ-101)

## தூக்கில் தொங்கிய நிலையில் மாணவி மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.29

பாடசாலை மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் அவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரி ஒன்றில் கற்கும் மாணவியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்.பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். நீதிமன்றப் பணிப்புக்கு அமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி [illegible]குமார் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தைப் பெற்றோரிடம் ஒப் படைத்தார். (ற-ஐ-4,86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணை அறிக்கைகளில் உள்ளவை உத்தேச அளவுகளே

## ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவிப்பு

அச்சுவேலி, பெப்.29

விசாரணை அறிக்கைகளில் உத்தேச அளவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளனவே தவிர, திட்டவட்டமான எண்ணிக்கைகளோ பட்டியல்களோ முன்வைக்கப்படவில்லை. என்னால் வெளியிடப்பட்ட நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2 ஆவது அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட 40 ஆயிரம் பேர் என்பது உத்தேச எண்ணிக்கையே. திட்டவட்டமான எண்ணிக்கை அல்ல - இவ்வாறு கூறினார் காணாமற்போனவர்களைக் கண்டறியும் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம.

வலி.கிழக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் காணாமற்போனவர்களைக் கண்டறியும் விசாரணையின் போது பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

என்னால் வெளியிடப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது அறிக்கையில் 2009 ஆம் அண்டு ஜனவரி தொடக்கம் 2009 மே 19ஆம் திகதி வரையான காலப்பகுதி விசாரணையின் தகவல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அறிக்கைகளை தெளிவாக வாசித்து விளங்க வேண்டும். மேலோட்டமாக வாசித்து விட்டு குழப்பமான கருத்துக்களை வெளியிடக்கூடாது. இரண்டாவது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் 40ஆயிரம் என்பது உத்தேச அளவே தவிர திட்டவட்டமான அறிவிப்பு அல்ல.

விசாரணையின்போது ஒருவர் தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்ட முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. இரட்டை முறைப்பாடுகள், மூன்று முறைப்பாடுகளும் வேறு வேறு இடங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தாய், மனைவி, சகோதரர் என்ற வகையில் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

எனவே காணாமற்போனவர்கள், இறந்தவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் என்ற வகையில் பட்டியல்படுத்தி துல்லியமான தகவல்களை வெளியிடுவதில் இடர்பாடுகள் உள்ளன. துல்லியமான தகவல்களைக் கண்டறிவதில் காலதாமதம் ஏற்படலாம்.

ஆனால், காணாமற்போனவர்களைக் கண்டறியும் விசாரணையின் போது 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து காணாமற்போனவர்களின் தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் சில உரிய ஆதாரங்களுடனும் சில மேலோட்டமான தகவல்களுடனும் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் துல்லியமான எண்ணிக்கையை கண்டறிவதில் இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றார்.

(ற-ஜ-11)

## சொத்து விவரங்களை வெளியிடும் சட்டத்தில் திருத்தம்

சொத்து விவரங்களை வெளியிடும் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

திடீரென கோடீஸ்வரர்களான அரசியல்வாதிகள், அரச அதிகாரி கள் போன்றவர்களின் சொத்து விவரங்களைப் பகிரங்கப்படுத்தும் வகையில் சொத்து விவரங்களை வெளிப்படுத்தும் சட்டத்தை திருத்தி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது காணப்படும் சட்டத்தின் அடிப்படையில் சொத்து விவ ரங்களை வெளியிட்டாலும் அதனை மக்களினால் பார்வையிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## எரிவாயு கசிந்து தீ; கணவன், மனைவி வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், பெப்.29

சமையல் எரிவாயுவில் கசிவு ஏற்பட்டு தீ பற்றியதால் கணவனும் மனைவியும் தீக்காயத்துக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா-கருவேப்பங்குளம் பகுதியில் நேற்றுப்பிற்பகல் 2 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்த இருவரும் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சமையலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது எதிர்பாரத விதமாக எரிவாயு கசிந்ததால் தீவிபத்து ஏற்பட்டு மனைவியின் உடலில் தீக்காயம் ஏற்பட்டுள்ளது. அவரைக் காப்பாற்ற முற்பட்ட, கணவனும் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-4)

## கட்டணம் செலுத்தப்படாததால் இணைய இணைப்பு துண்டிப்பு

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,பெப்.29

பாடசாலை மாணவர்களுக்கான 'ஸ்கூல் நெட்' எனப்படும் இணையத்தள வசதிக்கான கட்டணங்கள் செலுத்தப்படாததால் நாடெங்கிலுமுள்ள சுமார் 2 ஆயிரத்து 700 பாடசாலைகளில் இணையத்தளத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இணையத்தள வசதிக்காக ஒவ்வொரு பாடசாலையும், மாதாந்தம் 7 ஆயிரம் ரூபா முதல் 9 ஆயிரம் ரூபா வரை கட்டணமாகச் செலுத்த வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொகை அசாதாரணமானது. மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபாவே நியாயமான கட்டணம் எனவும் அண்மையில் கல்வியமைச்சர் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆயிரத்து 500 ரூபா கட்டணத்துக்கு அமைவாக புதிய ஒப்பந்தமொன்றுசெய்து,கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்திருந்த போதிலும் அது நிறைவேறவில்லை.

அத்துடன், மாதாந்தம் 7 ஆயிரம் தொடக்கம் 9 ஆயிரம் ரூபா வரை கட்டணம் செலுத்துவதற்காக செய்யப்பட்டிருந்த பழைய ஒப்பந்தம் மோசடியானது எனவும், அது தொடர்பில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கல்வியமைச்சர் தெரிவித்திருந்தார். எனினும் அந்த விசாரணையும் நடைபெறவில்லை.

எவ்வாறாயினும் இந்த இணையத்தளத் தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதால் லட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, இவ்விடயத்தில் கல்வியமைச்சு உடனடியாகத் தலையிட்டு உரிய தீர்வுகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

(ற-ஜ-4)

## அடியார்கள் வழிபட வசதியாக ஆலயக் கதவைத் திறந்து விடுக

### மானிப்பாய் கிழக்கு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.29

மானிப்பாய் கிழக்கிலுள்ள சாத்தாவத்தை வைரவர் ஆலயத்தின் வெளிக்கதவு எந்த நேரமும் பூட்டப்பட்ட நிலையில் இருப்பதால் அடியவர்கள் உள்ளே சென்று வழிபாடு செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர்.

இந்த நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள அடியவர்கள், கடந்த காலங்களைப் போல் ஆலயத்துக்கு உள்ளே சென்று வணங்குவதற்கு வசதியாக வெளிக்கதவைத் திறந்து விடுமாறு கிராம உத்தியோகத்தர் ஊடாக சண்டிலிப்பாய் பிரதேச செயலரைக் கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினத்தில், மானிப்பாய் மத்தி சந்தைக்கு முன்பாகச் செல்லும் முத்துத்தம்பி வீதியில் அமைந்துள்ள, சாத்தாவத்தை வைரவர் ஆலயத்தின் வெளிக் கதவு எந்த நேரமும் உள்ளே செல்வதற்கு வசதியாக காலம் காலமாகத் திறந்திருந்தது. இதனால் அடியவர்கள் இரவு- பகலாக ஆலயத்துக்குச் சென்று வந்தனர்.

தற்போது குறித்த ஆலயத்துக்கு உரிமை கோரிவந்த ஒருவர், மாலை நேரத்தில் இடம் பெறும் பூஜையின் போது மட்டும் சுமார் பதினைந்து நிமிடங்கள் திறந்து விட்டு மீண்டும் வெளிக் கதவைப் பூட்டி விடுகின்றார். இதனால் அடியவர்கள் ஆலயத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த இரு மாதங்களாக இரவு-பகலாக மேற்படி ஆலயத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் ஆலயத்தைச் சுற்றி வசிக்கும் மக்கள் கடந்த காலங்களைப் போல் எந்த நேரமும் ஆலயத்துக்குச் செல்வதற்கு வசதியாக பூட்டியிருக்கும் வெளிக் கதவைத் திறந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கிராம உத்தியோகத்தர் ஊடாக சண்டிலிப்பாய் பிரதேச செயலரைக் கோரியுள்ளனர். (ற-ஜ-115)

துயர் பகிர்கின்றோம்



எமது அலுவலகத்தில் கடமையாற்றும் திரு செ.சிவா (கிராம அலுவலர்) அவர்களின் அன்புத் தந்தை

**இராமலிங்கம் செல்லத்துரை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம்,
தீவகம் தெற்கு, வேலணை.

பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

(69614) (10.17.20)

Galaxy Star
வெற்றி வாரம் 038 திகதி 28.02.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
11 14 18 41 50
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,013,300/-

இம் முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 28.02.2016 வெற்றி வாரம் 1948 ஊதா
வெற்றி இலக்கங்கள்
06 11 20 26
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி
ரூ.4,878,440/=

ஷாம்சன் அவர்களின்
SPOKEN ENGLISH
இளைஞர் யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள்
அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.
"அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.03.2016 சனிக்கிழமை
1. காலை 10.00-12.00 2. பி.பகல் 01.00-03.00 3. மாலை 03.00-05.00
பாடப்புத்தகங்கள் சான்றிதழ் மற்றும் Video DVD என்பன முழுவதும் இலவசம்.
05.03.2016 இற்குமுன் அலுவலகத்தில் பதிவுசெய்தல்வேண்டும்.
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேருக்குமட்டுமே அனுமதி உண்டு.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் சிறந்தமுறையில் இயங்கிக்கொண்டிருக்கும் திருமண மண்டபத்துக்கு (சைவம்/அசைவம்) பின்வரும் பணியாளர்கள் தேவை.
1). பெண் வரவேற்பாளர்
2). மண்டப உதவியாளர்கள் (ஆண்/பெண்)
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-
கஜன் திருமண மண்டபம்
இல.131, ஸ்ரேசன் வீதி,
பொற்பதிச் சந்தி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். யாழ்ப்பாணம்.
குறிப்பு:-
விண்ணப்பங்களில் பூரண முகவரி மற்றும் பாவனையில் உள்ள தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடவும்.
கடிதத் தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவி நிலையைக் குறிப்பிடவும்.
விண்ணப்ப முடிவுதிகதி:- 10.03.2016
(69700)(10.17)

அறிவித்தல்
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் விசேட பொதுக்கூட்டம்
கழகத்தின் நோக்கங்களில் ஒன்றான சமூக மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டும் கழக செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கிலும் கழகத்துக்குச் சொந்தமான காணியில் கட்டடம் ஒன்றை அமைப்பது தொடர்பாக திட்டமிடவும் அதற்கென ஒரு விசேட சிறப்பு குழுவினை அமைக்கும் நோக்குடன் மேற்படி விசேட பொதுக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கருத்துக்களையோ அல்லது தீர்மானங்களையோ தர விரும்புவோர் எதிர்வரும் 05.03.2016 இற்கு முன்னதாக எழுத்தில் செயலாளரிடம் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
விசேட கூட்டம் நடைபெறும் திகதி - 13.03.2016
நேரம் - பிற்பகல் 05 மணி
இடம் - கழக மைதானம் (திக்கமுனை)
செயலாளர், பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.29
தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடங்களின் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை உடன்பட்ட காலத்தினுள் நிரப்புவதற்கு விசேட நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசும் மாகாண சபைகளும் இணைந்து இதனை முன்னெடுக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்தல், ஆசிரியர்களை ஆள்சேர்ப்புச் செய்தலும் ஆசிரியர்தொழில்சார் அபிவிருத்தியும், விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் தொடர்பாக்கக் கலந்துரையாடல் ஒன்று அலரிமாளிகையிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

அதில் கூறப்பட்டதன்படி தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளால் அறிக்கையிடப்பட்ட தற்போது காணப்படும் வெற்றிடங்கள் இனங்காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது.

வடக்கில் மாகாணப் பாடசாலைகளிலுள்ள கணித பாடத்துக்கு 201 ஆசிரியர்களும், விஞ்ஞான பாடத்துக்கு 227 ஆசிரியர்களும், ஆங்கில பாடத்துக்கு 141ஆசிரியர்களும் மற்றும் வடக்கில்தேசியபாடசாலைகளில்கணித பாடத்துக்கு தமிழ் மொழி மூலத்தில் 50 ஆசிரியர்களுக்கும், சிங்கள மூலத்தில் 57 ஆசிரியர்களுக்குமாக நாட் டில் 938 பேருக்கு வெற்றிடம் நிலவுகிறது.

வடமாகாண பாடசாலைகளிலுள்ள விஞ்ஞான பாடத்துக்கு 227 ஆசிரியர்களுக்கும் , தேசிய பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்துக்கு தமிழ் மொழி மூலத்தில் 15 ஆசிரியர்களுக்கும், சிங்கள மொழி மூலத்தில் 49 பேருக்குமென நாடளாவிய ரீதியில் 646 வெற்றிடங்கள் நிலவுகிறன.

மாகாணப் பாடசாலைகளில் ஆங்கில பாடத்துக்கு 141பேருக்கும், தேசிய பாடசாலைகளில் 60 பேருக்குமென நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 28 பேருக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன. அதன்படி 5 ஆயிரத்து 315 பேருக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் பிரதமர் அலுவலகத்தில் அமைந்துள்ள தேசிய செயற்பாடுகள் கூடமானது, மாகாண பாடசாலைகளில் மாகாண சபையாலும் தேசிய பாடசாலைகளில் கல்வி அமைச்சாலும் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டத்தைக் கண்காணிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்காக உடன்பட்ட காலவரையறையாக எதிர்வரும் ஜூன் 6 ஆம் திகதி என்றும் வரையறுக்கப்பட்டுள் ளது.

இந்தமுன்னெடுப்பைவினைத்திறனான முறையில் கண்காணிப்பதற்காக தேசிய செயற்பாடுகள் கூடமானது பாடசாலைகள் அபிவிருத்தி சமூகங்கள், பழைய மாணவர் சங்கங்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் , ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மற்றும் ஏனைய சமூக நிறு வனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த தேசிய முன்னெடுப்பின் நடைமுறைச் செயற்பாடுகள் தொடர்பாக தேசிய செயற்பாடுகள் கூடத்துக்குத் தங்களது கருத்துக்களை மக்கள் தெரிவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4)

**தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய**
**வருடாந்த உபயகாரர் பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்**

கூட்டம் 13.03.2016 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் உபயகாரர் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

செயலாளர்.
(69696)(1.17.18)

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

**பழைய மாணவர்களுக்கான பொதுக்கூட்டம்**

கல்வி அமைச்சின் 2013/7 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திக் குழுவுக்குப் பழைய மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 13.03.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். எமது கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

29.02.2016 -அதிபர்-
(C/29550)(10.17.18.20)

**பதவி வெற்றிடங்கள்**

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விவரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் ரூபா 20/= செலுத்தி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

01. இயந்திர இயக்குநர்
02. வெட்டுனர்
03. கட்டுனரும், இலக்கமிடுபவரும்
04. பகல்நேர காவலாளி

**விண்ணப்ப முடிவு திகதி:- 15.03.2016**
**அச்சக வேலை பயிலவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை
வீரசிங்கம் கட்டடத் தொகுதி.
இல.12. கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம். செயலாளர்.



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ் 100% சுத்தமானது**
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PAKED BY : Royal Industries
*T.P: 077 727 7670 colombo - 13*
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

**கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு**
**கேள்வி விலை கோரல்**

மேற்படி முல்லைத்தீவில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்திற்கு ஓடுபாதை, கூரை (கனப்பி) வேலைசெய்வதற்கான கேள்வி விலைகோரல் பொருத்தமான ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| விவரம் | மீளளிக்கப்படாத வைப்பு | மீளளிக்கப்படும் வைப்பு |
|---|---|---|
| கூரைவேலை மின்னிணைப்பு, அலுமினியப்பிற்றிங் | 1500.00 | 50000.00 |
| ஓடுபாதை | 1500.00 | 50000.00 |

மேற்படி வேலைக்கான விவரங்களைக் கொண்ட விண்ணப்பப்படிவத்தினை சங்க தலைமைக்காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்று, தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை **தலைவர், கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு 16.03.2016 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர், மூடிய கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''எரிபொருள் நிலையத்தின் ஓடுபாதை, கூரைவேலை கூறுவிலை என'' குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமைக்காரியாலய அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இரத்தினராசா மயூரன்
தலைவர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்.
முல்லைத்தீவு.

(சி.29540) (13.18)

## பீட்ரூட் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்



யாழ்ப்பாணம்,பெப்.29
யாழ்.மாவட்டத்தில் உருளைக் கிழங்கின் விலையை விட பீட்ரூட்டின் விலை அதிகரிப்பால் விவசாயிகள் பீட்ரூட் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த முறை யாழ். மாவட்டத்தில் பீட்ரூட் 80 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

பீட்ரூட் கிலோ ஒன்று 80 ரூபாவிலிருந்து 90 ரூபாவுக்குக் குறையாத விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. உருளைக்கிழங்கின் விலை கிலோ 50 ரூபாவிலிருந்து 60 ரூபாவரையில் குறைவடைந்துள்ளது. அதையடுத்து விவசாயிகள் பீட்ரூட் செய்கையில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

உருளைக்கிழங்கை உற்பத்தி செய்யும்போது உற்பத்திச் செலவும் அதிகமாகவுள்ளது. அறுவடைக்காலத்தில் அதன் விற்பனை விலையும் குறைவாகவே காணப்படும். அதேவேளை பீட்ரூட்டை உற்பத்தி செய்யும் போது அதன் உற்பத்தி செலவு குறைவாகவே காணப்படுகிறது. ஆயினும் விற்பனை விலையும் அதிகரித்து இருப்பதால் பீட்ரூட் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு வருமானம் அதிகரிப்புக்கு வகை செய்துள்ளது.

தம்புள்ள மத்திய சந்தை மற்றும் கொழும்பு புறக்கோட்டை சந்தை ஆகியவற்றில் பீட்ரூட் ஒரு கிலோ 80ரூபாவிலிருந்து 90 ரூபாவுக்குக் குறையாத விலையில் விற்பனை செய்யப்படுவதோடு உள்ளூரிலும் பீட்ரூட்டின் விலை அதே விலைக்கு குறையாமல் விலை போவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பீட்ரூட் செய்கையைப் பொறுத்தவரை காலபோகம் சிறுபோகம் என்ற கால வரையறை இல்லாமல் எல்லா மாதங்களிலும் யாழ். மாவட்டத்தில் செய்கை பண்ணப்படுவது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நாற்று மேடையில் 28, 35 தினங்கள் பராமரிக்கப்பட்ட பின்னர் நடுகை செய்து 45, 50 தினங்களில் அறுவடை செய்யப்படுவதால் உருளைக்கிழங்குடன் ஒப்பிடுகையில் உற்பத்திச் செலவு 30 வீதத்துக்குக் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-ரி,11)

## சிவராத்திரியை முன்னிட்டு நல்லூரிலிருந்து யாத்திரை

யாழ்ப்பாணம், பெப்.29
சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளைமறுதினம் புதன் கிழமை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்குப் புனித திருத்தல பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது என்று புனித திருத்தல பாதயாத்திரிகர் சேவா சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பாத யாத்திரை நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் காலை 7 மணிக்குச் சிவநாம பஜனையோடு ஆரம்பமாகும். செம்மணி, நாவற்குழி, கேரதீவு, பூநகரி, 4 ஆம் கட்டை, செம்பன்குண்டு, பல்லவராயன் கட்டு, ஜெயபுரம், சோலை, நாகபடுவான், 19 ஆம் கட்டை, முழங்காவில், வெள்ளாங்குளம், இலுப்பைக்கடவை, கட்டாடிவயல், ஆத்திமோட்டை, பாப்பா மோட்டை ஊடாக மன்னார் திருக்கேதீஸ்வரம் வரை இந்தப் பாதயாத்திரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## கைக்குண்டுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,பெப்.29
திருட்டு முயற்சியில் ஈடுபட்ட வேளையில் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்ட இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். கடந்தவெள்ளிக்கிழமை மாலை கடமைக்குச் சென்ற திரும்பிய யுவதியின் தங்கச் சங்கிலியை மீசாலை வடக்கு தட்டான்குளப் பிள்ளையார் கோவில் வீதியில் வைத்து அறுக்க முற்பட்ட வேளையில், அயலவர்களால் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இளைஞரிடம் கைக்குண்டு இருந்தமை கண்டுபிடிக்கப் பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்ந்த மக்களின் தேவைகள் புனர்வாழ்வு அமைச்சுக்கு முன்மொழிவு

யாழ்ப்பாணம், பெப்.29
பொன்னாலை, பாண்ட வெட்டை, கல்விளான் போன்ற மீள்குடியமர்வுப் பிரதேச மக்களின் அடிப்படை முன்னுரிமை தெரிவுகள் முன்னிலைப்படுத்தப்பட்டு அதன் முன்மொழிவுகள் வலி.மேற்கு பிரதேச செயலாளர் ஊடாக இணைத் தலைவர்களுக்கும், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் மீள்குடியமர்வுக் கிராமங்களில், சுகாதாரம், கல்வி, உட்கட்டுமானம், வீடுகள், மலசலகூடம், வீதி அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தி, மயானம் போன்ற 16க்கும் மேற்பட்ட அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் பல துன்பங்களின் மத்தியில் வாழ்கின்றனர்.

2012 நவம்பர் மாதம் 5 ஆம் திகதி மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டபோதும், இதுவரையில் மக்களது தேவைகள் எவையும் அரசால் பூர்த்தியாக்கப்படவில்லை எனவும், அடிப்படை உட்கட்டுமான வசதி எதுவும் அற்ற வெறுமையான வாழ்க்கை வாழ்வதாக கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

அதையடுத்து வலி.மேற்குப் பிரதேச சபை மீள் குடியேற்ற மக்களின் தேவைகளை ஒவ்வொன்றாக மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டத்தின் ஊடாகப் பெற்று அதன் விவரங்களை 16 துறைகளில் முன்மொழிந்துள்ளது.

குறித்த விவரங்கள், கிரம அலுவலர்பிரிவு, நடைமுறை நிறுவனம், மதிப்பீடு, பயனாளிகள் தொகை மற்றும் முழுமையான விவரங்களை உள்ளடக்கிய தான முன்மொழிவு பத்திரங்களே தொகுக்கப்பட்டு வலி. மேற்குப் பிரதேச செயலாளர் ஊடாக அரச அதிபருக்கும், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், இணைத் தலைவர்கள் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ற-ஐ-50)

## தென்மராட்சியில் ஏழிசை மாலை

சாவகச்சேரி,பெப்.29
தென்மராட்சிக் கல்வி வலய இசையாசிரியர்கள் மாணவர்கள் இணைந்து வழங்கும் ஏழிசை மாலை-12 இசை நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30மணிக்குக் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கு.ரவீந்திரா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி திருமதி துஷ்யந்தி மிகுந்தனும், சிறப்பு விருந்தினராக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஓய்வுநிலை அதிபர் த.கந்தையாவும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்களால்தேவாரம், கிறீஸ்தவ கீதம், ஏழிசை மாலை கீதம் ஆகியவை இசைக்கப்பட்ட பின்னர் கல்லூரி இசை ஆசிரியை திருமதி பு.நகுலேஸ்வரனின் இசைக்கச்சேரி இடம் பெறும்.

கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவன் மோ.சாதுஜனின் தனியிசையும், அல்லாரை அ.த.க.பாடசாலை இசையாசிரியை திருமதி த.குணசேகரம் விடத்தல்பளை கமலாசனி வித்தியாலய இசையாசிரியை திருமதி உ.சிவபாலன் ஆகியோரின் இருவர் இசையும், தென்மராட்சி கல்வி வலய தமிழ் மரபுக் கலாலய மாணவர்களின் மிருதங்க இசையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் பாடலும் , மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்களின் குழுப் பாடலும் இடம்பெறவுள்ளது. (ற-ஐ-9)

## சாரதியின் சாதுரியத்தால் தவிர்க்கப்பட்டது ரயில் விபத்து

சாவகச்சேரி, பெப்.29
மீசாலை புத்தூர்ச் சந்திக்கு அருகில் உள்ள பாதுகாப்பு அற்ற ரயில் கடவையில் நேற்று முன்தினம் அதிகாலை இடம் பெறவிருந்த விபத்து சாதுரியமான செயலால் தவிர்க்கப்பட்டது.

கொழும்பு நோக் கிச் சென்று கொண்டிருந்த கடுகதி ரயில் சாவகச்சேரி ரயில் நிலையத்தை விலகிச் சென்ற நிலையில், திருமலையிலிருந்து சிமெந்து ஏற்றி வந்த பாரஊர்தி ஒன்று மீசாலை புத்தூர்ச் சந்திக்கு அருகில் மீசாலை மத்திய வீதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றுக்குச் சிமெந்தை இறக்குவதற்காக ரயில் கடவையைக் கடந்தது.

பாரவூர்தி தண்டவாளத்தை அரைவாசிப் பகுதி கடந்த நிலையில் நின்றுவிட்டது. அந்த நிலையில் சமிக்ஞை ஒலி , ஒலிக்கத் தொடங்கியது. அப்போது தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற மாணவர்கள், சுக்குரல்எழுப்பி ரயில் வருவதை பாரவூர்தியின் சாரதிக்கு தெரியப் படுத்தியுள்ளனர். உடனே சாரதி பாரவூர்தியி இருந்து குதித்து ரயில் பாதையில்வந்து ரயில் சாரதிக்கு சைகை மூலம் ரயிலை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியதை அடுத்து ரயில் நிறுத்தப்பட்டது.

பின்னர் பாரவூர்தியின் அங்கிருந்தவர்களால் நகர்த்தப்பட்டு ரயில் செல்ல வழி ஏற்படுத்தப்பட்டது. (ற-ஐ-131)

## தென்மராட்சிக்கு ஒதுக்கப்பட்ட விசேட நிதியை பெற்றுத்தரவும்

### பிரதேச செயலர் கோரிக்கை

சாவகச்சேரி, பெப்.29
அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு விசேட நிதியாக ஒதுக்கப்பட்ட நிதியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இணைத் தலைவர்களைத் தென்மராட்சிப் பிரதேச செயலர் கோரியுள்ளார்.

கடந்த வாரம் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தில், பிரதேச செயலகத்துக்கென 5 வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கான மதிப்பீட்டைத் தயாரித்து அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் 5 வேலைத் திட்டங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் உரிய நிதி கிடைக்காததால் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே இந்த நிதியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

விசேட நிதியில் மேற்கொள்ள கொடிகாமம் வைத்தியசாலை புனரமைப்பு, மிருசுவில் வடக்குத் தொடக்கம் மிருசுவில் தெற்கு, நாவற்காடு, மாசேரி இடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி, தாவளை - இயற்றாலை ஆகிய 7 கிராம அலுவலர் பிரிவு ஊடாக முள்ளி வரை உவர் நீர்த் தடுப்பணை அமைத்தல், சாவகச்சேரி வைத்தியசாலையில் குருதி காப்பகம் அமைத்தல், மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக்கழக மதில் புனரமைத்தல், கைதடி கல்லாகம் - நேவையூர் வீதி - மட்டுவில் நாவலடி - வேவில் வீதி ஆகியவை அமைத்தல் என 36 மில்லியன் ரூபாவுக்கான வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியையே பெற்றுத் தர வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்திருந்தார். (ற-ஐ-9)


**விற்பனைக்கு**

ஒரு வயது நிரம்பிய ஜேமன் செப்பேட் ஆண், பெண் நாயும், பொக்சர் ஆண் நாயும், பொக்கட்ஸ் பெனியர் ஆண், பெண் நாயும் பொமேரியன் ஆண், பெண்நாயும் 45 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண்குட்டிகளும் சில்க்கி, மணித்தாரா என்பன விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு: மயூரன் பாம் சென்ரர்,
நீர்வேலி கந்தசாமி கோயில் பின் வீதி.
தொ.பே. 077 015 8690 (69692) (13.18)

**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
The Jaffna Education Centre
("செல்வா" தியேட்டருக்கு முன்பாக மேல்மாடியில்)
Spoken English with Grammar
சிங்களம்,ESOL, IELTS
ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம் - 01.03.2016
ஆசிரியை - இ.லோகநாயகி
T.P.No: 076 669 8953
பெண்களுக்கு விடுதி வசதியுண்டு.

**மணமகள் தேவை**

இந்து குடும்பம் 13.08.1979 இல் பிறந்த, நட்சத்திரம் அச்சுவினி, யாழ். பல்கலைக்கழகத்தில் B.Sc, Londan இல் M.Sc முடித்த மணமகனுக்கு இலங்கையில் பிறந்த Londan PR உள்ள மணமகள் தேவை. (69694) (13.18)
தொ.பே. 078 303 5181

84 ஆவது பிறந்த தின வாழ்த்தும் (29.02.1932)
56 ஆவது திருமண ஆண்டு நிறைவுநாளும் (01.02.1960)
உயர்திரு வே.சின்னராசா
(ஓய்வுநிலை M.L.T. யாழ்.போதனா வைத்தியசாலை)
திருமதி சின்னராசா காந்திமதி தம்பதிகள்
வல்வெட்டி வேவில் வீரகத்தி விநாயகர் அருளாலும்,
புதுப்பிள்ளையர் லக்ஷ்மி நாராயணன்
அருளாலும் சிறப்புற்று வாழ
வாழ்த்துகின்றோம்






வாழ்த்துவோர்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார்,
உறவினர்கள்,
நண்பர்கள்.
வல்வெட்டி மத்தி,
வல்வெட்டித்துறை.
(659..) (13..)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை அரியதுரை**

தோற்றம்
01.08.1926

மறைவு
21.02.2014

திதி:ஸப்தமி

எங்கள் அனைவரையும் - எம்
அன்புத் தாயான புவனேஸ்வரியுடன் சேர்ந்து
பாசத்துடனும் நேசத்துடனும் பண்பாக வளர்த்த
எமது அன்புத் தந்தைக்கு கோடான கோடி நன்றிகள்...

என்றும் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வேலப்பர் வீதி,
அரியாலை.

(69704)(14,18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
29 . 11 . 1961

உதிர்வு
28 . 01 . 2016

### அமரர் அப்பாக்குட்டி இராஜதுரை

கடந்த 28.01.2016 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அப்பாக்குட்டி இராஜதுரை அவர்களின் சபிண்டீ கரணக்கிரியைகள் இன்று (29.02.2016) திங்கட்கிழமை முற்பகல் 11மணியளவில் சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(69695)
(14,18)

குடும்பத்தினர்.
077 962 6724

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20 . 02 . 1939

மறைவு
13 . 03 . 2015

### அமரர் சங்கரப்பிள்ளை கனகராசா

திதி : ஸப்தமி

இன்னல்கள் நெருங்கிடாமல்
இமைக்குள் வைத்து எமைக் காத்து
மெழுகாக உமை உருக்கி – எம்
வாழ்வில் ஒளியேற்றிய நீங்கள்
இல்லாமல் போனதாக நினைக்கவில்லை
இன்னும் நாங்கள்....
இன்னொரு பிறவி எடுத்து வந்தால்
உங்கள் பிள்ளைகளாகவே நாம் பிறந்தால்
மெழுகாக உருகிடுவோம் – உமை
ஒளியூட்டி எழில் காண்போம்.

" அருணோதயம் "
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(69673)
(14,18)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**கறுவல் இரத்தினம்**

தோற்றம்
17.03.1932

மறைவு
30.01.2016

கடந்த 30.01.2016 கந்தன் அடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் கறுவல் இரத்தினம் அவர்களது வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், இன்று (29.02.2016) திங்கட் கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். எம் அன்புத் தெய்வத்தின் மறைவின் போது உதவி ஒத்தாசை வழங்கியோருக்கும், மரணச்சடங்கில் நேரில் கலந்தும், வேறுவழிகளில் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பாக
மகள்
மலர் செல்வராஜா

149/31, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

## மரண அறிவித்தலும் தசாககிருகயக்ஞ அழைப்பும்

### திருமதி குமாரசாமிக்குருக்கள் நீலாயதாட்சியம்மா



அராலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இந்திரகுருக்களின் மகளும் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த (புதுக்கோயில்) பிரதமகுரு அமரர் இராஜரத்தினக் குருக்கள் குமாரசாமிக்குருக்களின் மனைவி திருமதி குமாரசாமிக்குருக்கள் நீலாயதாட்சியம்மா 25.02.2016 வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கிரியைகளில் கலந்து கொள்ள முடியாது மறு நாள்களில் வந்து தமது கவலையைத் தெரிவித்துக் கொண்ட எமது அன்புள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு
எதிர்வரும்

05.03.2016 - சனி - தசாகம் - 10.00 மணிக்கு
06.03.2016 - ஞாயிறு - ஏகோதிஷ்டம், மாசியம், இடபம் - 10.00 மணிக்கு
07.03.2016 - திங்கள் - சபிண்டீகரணம் - 10.00 மணிக்கு
09.03.2016 - புதன் - கிருகயக்ஞம் - 10.00 மணிக்கு

ஆகிய கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதுக்கோயிலடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(69644)
(14.18.20)

தகவல்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப்பேரர்கள்.

## முதலாம் ஆண்டு சிரார்த்த தின அழைப்பு



கடந்த வருடம் 12.03.2015
இறைவனது திருவடி சென்றடைந்த
எங்கள் குடும்ப ஒளி விளக்கு
அமரர் திருமதி
**நவமீனா (வனிதா) ஞானசேகரம்**

தோற்றம்
31.07.1965

மறைவு
12.03.2015

அமுதமாக பாசத்தை எமக்குத் தந்துவிட்டு
அரை நொடியில் எம்மைத் தவிக்கவிட்டு
காலனவன் விரித்த வலையில்விழுந்து விட்டாயே! அம்மா.....
எம் ஆயுள் உள்ளவரை அழியாது உங்கள் நினைவு
ஆண்டொன்று கடந்தாலும் எம்முடனே இருப்பாய் அம்மா

அன்னாரின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு இன்று (29.02.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 5 ஆம் வட்டாரம் சோலாவத்தை வேலணையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

5 ஆம் வட்டாரம்,
சோலாவத்தை, வேலணை.

குடும்பத்தினர்.
(69651) (13.18)

## தென்மராட்சியில் தமிழ் மரபு கலாலயம்

சாவகச்சேரி,பெப்.29
தென்மராட்சிப் பிரதேசத்தில் கலைகளை மேன்மேலும் வளர்ப்பதற்காக 'தமிழ் மரபுக் கலாலயம்' என்னும் அமைப்பு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அமைப்பின் தலைவராக பேராசிரியர் க.கந்தசாமியும், செயலாளராக க.மோகனராஜலிங்கமும், பொருளாளராக க.அருந்தவபாலனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
அமைப்பின் காப்பாளராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
அமைப்பால் முதற்கட்டமாக பாடசாலை மாணவர்களுக்கிடையே கலையை வளர்க்கும் நோக்கில் இலவச மிருதங்கம் மற்றும் வயலின் வகுப்புக்களை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த வகுப்புகள் பிரதி வெள்ளி, சனி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது என்று அமைப்பின் செயலாளர் க.மோகனராஜலிங்கம் தெரிவித்தார்.
தென்மராட்சி தமிழ் மரபுக் கலாலயத்தில் பயிற்சி பெற்ற மாணவர்களின் முதல் நிகழ்வு இன்று கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ற-ஜ-9)

## போராட்டம் பிற்போடப்பட்டது

துணுக்காய் கல்விவலயத்தில் கல்வி அமைச்சால் இன்று திங்கட்கிழமை நடத்தப்பட விருந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதால், இன்று மேற்கொள்ள விருந்த கண்டன ஆர்ப்பாட்டமும் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.
துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வடமாகாண முதலமைச்சருக்கும் தெரிவிக்கப்பட்டது என்று தெரிவிக்கும் சங்கம் இன்றுநடைபெற விருந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதால் தமது போராட்டமும் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தது.
(ற-ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய், தந்தை பிரச்சினையில் சிக்கித் திண்டாடும் சிறுமி

யாழ்ப்பாணம், பெப். 29
கணவன், மனைவிக்கிடையே ஏற்பட்ட தகராறால் இருவரும் பிரிந்துள்ளநிலையில்மனைவியின் வீட்டுக்குச் சென்ற கணவன் மூத்த மகளை இழுத்துச் சென்றுள்ளார். அதனைத் தடுக்க முற்பட்டதால் காயமடைந்தனர் என்று கூறி மனைவியும் மற்றொரு பிள்ளையும் சிகிச்சை பெறுகின்றனர்.
இந்தச் சம்பவம் தென்மராட்சியில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த இருவரும் வைத்திய சாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கணவன் மனைவி இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். ஆண் பிள்ளை தந்தையுடனும் இரு பெண் பிள்ளைகள் தாயாருடனும் வாழ்ந்து வருகின்றனர்.
இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை வீட்டுக்குள் புகுந்த கணவன் அங்கிருந்த மனைவியைத் தாக்கிவிட்டு 13 வயது மூத்த மகளை இழுத்துக் கொண்டு செல்ல முயற்சித்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.
தடுக்க முற்பட்ட தாயையும் மற்றப் பிள்ளையையும் மோசமாகத் தாக்கிவிட்டு மூத்தமகளை வீதியில் இழுத்துச் சென்றுள்ளார் என்றும் காயமடைந்தவர்களால் கூறப்படுகின்றது. அது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,9)

## ஆயுள்வேத வைத்திய சபையால் வடக்கில் நடமாடும் சேவைகள்

யாழ்ப்பாணம்,பெப். 29
ஆயுள்வேத வைத்தியர்களின்நலன்கருதிஆயுள்வேத வைத்திய சபையால் நடமாடும் வேலைத்திட்டம் ஒன்று வடமாகாணத்தில் 5 மாவட்டங்களை உள்ளடக்கி 4 நாள்கள் நடைபெறவுள்ளது என்று வடமாகாண சுதேசமருத்துவத்திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி சி.துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.
நாளை முதலாம் திகதி செவ்வாய்க் கிழமை மன்னார் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலும், 2ஆம் திகதி புதன் கிழமை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலும், மூன்றாம் திகதி வியாழக்கிழமை கைதடி சித்த போதனா வைத்தியசாலையிலும், எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா பிரதேச செயலகத்திலும் இந்த நடமாடும் வேலைத்திட்டம் நடைபெறும்.
பதிவு செய்யப்பட்டுள்ள வைத்தியர்கள் வைத்திய சான்றிதழ் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளல், வைத்திய அடையாள அட்டைப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளல்,மேலதிகதகைமைபடிவங்களைப்பெற்றுக்கொள்ளல், சான்றிதழ் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளல், பதிவைப் புதுப்பித்துக் கொள்ளல் உள்ளிட்டவை இந்த நடமாடும் வேலைத்திட்டத்தில் செய்து கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)

# 16,213 அங்கவீனர்களில் 4,003 பேருக்கே உதவி

யாழ்ப்பாணம்,பெப்.29
வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 16 ஆயிரத்து 213 பேர் அங்க வீனர்களாக உள்ளபோதும், 4 ஆயிரத்து 3 பேருக்கு மட்டுமே மத்திய அரசின் உதவிகள் கிடைக்கின்றன.
மாவட்டச் செயலகங்களின் புள்ளி விவரங்களிலேயே இந்தத் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
வடக்கு மாகாணத்தில் அதிக எண்ணிக்கையான அங்கவீனர்கள் வாழும் மாவட்டமாக யாழ்.மாவட்டம் காணப்படுகின்றது. இங்கு 6 ஆயிரத்து 491 பேர் வாழ்கின்றனர். இவர்களில் 2 ஆயிரத்து 10 பேருக்கு அரசின் மூவாயிரம் ரூபா பணக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.
3 ஆயிரத்து 15 அங்கவீனர்களைக் கொண்ட வவுனியா மாவட்டத்தில் 425 பேருக்கு மட்டுமே குறித்த பண உதவி வழங்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 672 அங்கவீனர்கள் உள்ளனர். அவர்களில் 474 பேருக்கு குறித்த உதவிப் பணம் வழங்கப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 413 அங்கவீனர்கள் உள்ள நிலையில் 672 பேருக்கு மூவாயிரம் ரூபா உதவிப் பணம் வழங்கப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 622 அங்கவீனர்கள் உள்ள நிலையில் 422 பேருக்கு உதவிப்பணம்வழங்கப்படுகின்றது.
இலங்கையில் இடம்பெற்ற போரின் காரணமாகவே நாட்டில் அதிக எண்ணிக்கையானோர் அங்கவீனர்களாக மாறியுள்ளனர். வடக்கு, கிழக்கு பகுதியில் வாழும் மக்களே இவ்வாறான பெரும் பாதிப்புக்களை சந்தித்துள்ளனர். (ற-ஜ-101)

## விபத்தில் கொல்லப்பட்டவருக்கு ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் இழப்பீடு

### சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரமும் இரத்து

யாழ்ப்பாணம், பெப்.29
விபத்தை ஏற்படுத்திக் குடும்பஸ்தரின் சாவுக்குக் காரணமான தனியார் பஸ் சாரதி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இழப்பீடாகச் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிமன்று; சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரத்தையும் இரத்துச் செய்தது.
அல்வாயைச் சேர்ந்த சாரதிக்கே யாழ். நீதிமன்று கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு தீர்ப்பளித்தது.
அத்துடன் நீதிமன்று அபராதமாக 22 ஆயிரத்து 500 ரூபா விதித்தது. இவை மட்டுமன்றி உயிரிழப்பை ஏற்படுத்திய குற்றத்துக்காக குறித்த சாரதிக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்த நீதிவான் அதனை 5 வருடங்களுக்கு ஒத்தி வைத்தார்.
பருத்தித்துறை வீதியில் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாக இருந்த மஞ்சள் கடவையில் வீதியைக் கடந்தபோது, 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த விபத்து இடம்பெற்றது.
இதில் இராச வீதி, நீர்வேலியைச் சேர்ந்த அருளம்பலம் இரத்தினசிங்கம் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார். ஆசிரியர் கலாசாலைக்கு ஆசிரியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் குறித்த குடும்பஸ்தரை மோதியது.
விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது. அவருக்கு எதிராக பொலிஸார் 6 குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வழக்குத் தொடர்ந்தனர். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.
இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்ட சாரதி, தன் மீதான குற்றங்களை ஒப்புக்கொண்டார்.
அதையடுத்து விபத்தில் கொல்லப்பட்ட குடும்பஸ்தரின் குடும்பத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இழப்பீடாகச் செலுத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டது.
அத்துடன் சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யுமாறும் மோட்டார்போக்குவரத்து ஆணையாளருக்கு நீதிமன்று கட்டளையிட்டது. (ற,ஜ-4,103)

## பொலிஸுக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.29
வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தின் பாதுகாப்புச் சுவரை புல்டோசர் மூலம் இடித்தழித்துள்ளதுடன், தேவாலயக் காணியையும் பொலிஸார் ஆக்கிரமித்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டியுள்ள தேவாலய நிர்வாகத்தினர் பொலிஸாருக்கு எதிராக இணக்க சபையை நாடியுள்ளனர்.
தேவாலயத்தின் அருகில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. பொலிஸ் நிலையத்தின் பாவனைக்காக தேவாலயத்தின் எந்தவிதமான அனுமதியுமின்றி, தேவாலயத்தின் பாதுகாப்புச் சுவர் புல்டோசர் மூலம் இடித்தழித்துள்ளதுடன், தேவாலய வளவையும் ஆக்கிரமித்து ஒரு கட்டடத்தை அனுமதியற்ற முறையில் அமைத்தும் வருகின்றனர். குறித்த கட்டடத்தை அகற்றி தேவாலயத்துக்குச் சொந்தமான காணியை ஆலயப் பயன்பாட்டுக்கு வழங்க ஆவன செய்ய வேண்டும் என இணக்க சபையில், முறையிட்டுள்ளனர். (ற-ஜ-101)

# ஏனைய மாகாண அலுவலகங்கள், திணைக்களங்களுக்கு முன்மாதிரியாக மாற வேண்டும் வடக்கு மாகாணம்

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 29
வடபகுதியில் இயங்கிய அனைத்து அலுவலகங்களும் ஏனைய மாகாணங்களில் இயங்கிய அலுவலகங்களுக்கும், திணைக்களங்களுக்கும் முன்மாதிரியாக விளங்கிய காலமொன்று இருந்தது. ஆனால் இன்று எம்மைக் கையாலாகாதவர்களாக மாற்றி விட்டனர். எந்தவொரு விடயமாயினும் மற்றைய மாகாணங்களைக் கேட்டுப் பாருங்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். நாம் சேவையில் இணைந்தபின் கற்றலை அடியோடு மறந்து, பொருள்ஈட்டல், குடும்பமேன்மை என்பவற்றில் கவனம் செலுத்தியதே இதற்கான காரணம். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.- இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆலோசனைக்குழு ஆரம்பித்தலும், இணையத்தள ஆரம்ப நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை, மு.ப 9.30 மணிக்கு, யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
சில மாதத்துக்கு முன்னர் யாழ் மாநகர சபை ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் நேரடியாகக்கேட்டு அறிந்து கொண்டேன். அவை சம்பந்தமாக முடிந்தளவு உடனடித் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. முன்னதாக 700க்கும் மேற்பட்டவர்கள் எந்தவித நியமன ஒழுங்கு முறைகளும் பின்பற்றப்படாது வேலைக்கு உள்வாங்கப்பட்ட பின்னர் நாம் வடமாகாணத் தேர்தலில் வெற்றியீட்டியதும், நியமனம் செய்யப்பட்டவர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டார்கள். இதற்கும் எமக்கும் தொடர்புகள் இல்லை. எனினும் எந்தவித மாற்றுக் கருத்தும் இன்றி இந்த ஊழியர்களையும் உள்வாங்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். இவற்றில் ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்பட முடியாதது.
வடமாகாணம் மற்றைய மாகாணங்களுக்கு உதாரணமாக இருந்த நிலைக்கு மீண்டும் உயர்வு பெற வேண்டும். நாம் அனைவரும் வடமாகாணத்தைக் கட்டி எழுப்புவதில் ஏதோ ஒரு பங்கை வகிக்கின்றோம் என்ற எண்ணம் எம்மிடையே மேலோங்க வேண்டும். இன்று யாழ். மாநகர சபையின் நிர்வாக அலகுகளில் காணப்படும் குறைபாட்டைக் கண்டுகொள்வதற்கு ஆலோசனைக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை சிறப்பான விடயம். ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களும் துறை சார்ந்தவர்களாக காணப்படுகின்றனர்.
இந்த 11 அங்கத்தவர்களின் தெரிவும், முறையாக தெரியப்பட்ட 42 விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்ததன் மூலம் பெறப்பட்டுள்ளன. எனவே இருதரப்பும் இணைந்து சிறப்பானதொரு சேவையை வழங்கி மாநகர சபையின் செயற்பாட்டில் தடைப்பட்டுள்ள விடயங்களில் உடனடிக் கவனம் செலுத்துதல் வேண்டும்.
இன்று மாநகரசபையில் இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டு தேவையான தகவல்களை வெளியிடவும் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளவும் வழி அமைத்துகொடுக்கப்பட்டுள்ளது. இதில் பொதுமக்கள் குறைகேள் ஒழுங்கு மற்றும் பொதுமக்கள் அபிப்பிராயம் என பகுதிகள் ஆக்கப்பட்டிருப்பதுடன் அவற்றில் உப பிரிவுகளும் ஆக்கப்பட்டுள்ளன என அறிகின்றேன்.
பொதுமக்கள் பட்டயப் பகுதி ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. மேலாக இந்த இணையத் தொடர்புகள் மும்மொழிகளிலும் வழங்கப்படக்கூடியதாக அமைக்கப்பட்டிருப்பது மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு உகந்ததாக அமைய முடியும்.
- என்றார். (ற-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ முகாம், பொலிஸ் நிலைய கழிவு நீரால் பெரும் சுகாதார சீர்கேடு

கிளிநொச்சி, பெப்.29

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு அருகில் உள்ள இராணுவ முகாம் மற்றும் பொலிஸ் நிலையத்தில் இருந்து வரும் கழிவு நீர் வீதியில் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகின்றது. அதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது. - இவ்வாறு பிரதேச மக்கள் அதிகாரிகள் முன்னிலையில் குற்றம் சுமத்தினர்.



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

கழிவு நீர் தேங்கி நிற்பதால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. மக்கள் வீதியில் பயணிப் பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அழகிய கிளிநொச்சியை அசிங்கமாக்குவதற்குச் சிலர் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர் என்று பிரதேச மக்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவினர் சுட்டிக்காட்டினர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர், அவை பொது மக்களுடைய கழிவுகள் அல்ல. இராணுவம், பொலிஸாருடையவை. அதனால் தான் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என்று குறிப்பிட்டார்.

அதன்போது குறித்த பிரச்சினை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு எழுத்து மூலமாகத் தந்தால் இராணுவத்தினரிடம் கூறி நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு முதல்வர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு அருகில் உள்ள 57 ஆவது பிரிவு இராணுவ முகாம் மற்றும், கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தின் கழிவு நீர் வீதிக்கு விடப்படுகின்றது. கழிவு நீர் மாதக்கணக்காகத் தேங்கிப் பெரும் துர்நாற்றம் வீசுகின்றது.

சுகாதார வாரம், டெங்கு வாரம் என்றால் வீடுகளுக்கு ஓடிச் சென்று பார்வையிடும் இராணுவம் முதலில் தங்களது முகாம்களைச் சுத்தம் செய்வதோடு தமது முகாமினால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்த முன்வரவேண்டும்.

தனியார் வீடுகளில் சிறு நீர்த் தேக்கத்துக்கே நுளம்புப் பெருக்கத்துக்குக் காரணமாக இருந்தார் என வழக்குத் தாக்கல் செய்யும் சுகாதாரத் திணைக்களத்தினர், அதன் ஊழியர்கள் படையினர் என்றதும் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர். அவ்வாறு எனில் சட்டம் பாமர மக்களை மட்டுமா கட்டுப்படுத்தும்? என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பினர்.

அரச சம்பளம் பெறும் படையினரின் இந்தச் சீர்கேட்டை அதிகாரிகள் உடன் கட்டுப்படுத்த முன்வர வேண்டும். அருகில் மாவட்டச் செயலகம் உள்ளபோதும் செயலக அதிகாரிகள் கூட இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ஏற்கனவே பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இது தொடர்பாக நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பிரஜைகள் குழுவினர், குறித்த கழிவு நீர் தொடர்பான விடயங்கள் அடிக்கடி பத்திரிகைகளிலே வருகின்ற போதும், இதுவரையில் எந்த ஒரு அதிகாரியும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. எல்லோரும் அழகிய கிளிநொச்சியை அழுக்கானதாக மாற்றுவதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றார்கள் என்று தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கரைச்சி பிரதேச சபைச் செயலாளரைப் பதில் வழங்குமாறு முதலமைச்சர் கேட்டுக் கொண்ட போது அதற்குப் பதிலளித்த பிரதேச சபைச் செயலாளர், இதுஎங்களுடைய மக்களால் செய்யப்படுவதில்லை. இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்களினாலேயே குறித்த பிரச்சினை உள்ளது. எனவே தான் எங்களால் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என்று தெரிவித்தார்.

பிரதேச சபைச் செயலாளருடைய கருத்துக்குப் பதிலளித்த மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரும் வடக்கு முதலமைச்சருமாகிய க.வி. விக்னேஸ்வரன், குறித்த கழிவு நீர் இராணுவம் முகாம் மற்றும் பொலிஸ் நிலையத்தில் இருந்து வருவதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி இணைத் தலைவர்களுக்கு எழுத்து மூலமான கடிதம் தருமாறும் தாம் இராணுவத்தினருடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ற-ஐ-4,21,101)

## உலக உணவுத் திட்டத்தின் மதிய உணவு வரப்பிரசாதம்

வவு. தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா,பெப்.29

உலக உணவுத்திட்ட நிறுவனம்மூலம் வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகள் பலவற்றிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் செயற்றிட்டமானது ஒருவரப்பிரசாதமே என வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார்.

பாடசாலைமாணவர்களுக்கு உலக உணவு வழங்கும் தினம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படவுள்ளநிலையில், அது தொடர்பில் வடமாகாண கல்வித் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கை சம்பந்தமான விளக்கக் கூட்டம் வவுனியாதெற்குகல்விவலயத்தில் நேற்று முன்தினம் வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன்சோமராஜா தலைமையில்நடைபெற்றது. இதன் போது கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பலவருடங்களாக வடமாகாணத்தில் உலக உணவுத் திட்டநிறுவனம்மூலம் மாணவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. பசியோடு பாடசாலை வரும் மாணவர்களுக்கு இந்த உணவு எவ்வளவு உதவுகிறது.

கற்றல் செயற்பாட்டுக்கும் உடல்வளர்ச்சிக்கும் பெரிதும் பங்காற்றுகிறது. இதனை உணர்ந்து ஒவ்வொரு பாடசாலை அதிபரும் மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்றிட்டத்துக்கு தியாக மனப்பாங்குடன் பணியாற்ற வேண்டும்.

பாடசாலைச் சமையலுக்கு தொண்டர்கள் அல்லது பெற்றோர்கள் சமைக்க வராவிட்டால் ஏதோ ஒரு வகையில் ஆசிரியர்களாவது சமைப்பதற்கும் தயங்கக் கூடாது. எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி உணவு வழங்கப்படும். சகல பாடசாலைகளிலும் சிரமதானம் செய்து உலக உணவுத் திட்ட நிறுவனம் மூலம் வழங்கப்படும். உணவின் முக்கியத்துவம் குறித்த கலை நிகழ்வுகள் மற்றும் உரைகள் நிகழ்த்தப்பட வேண்டும். பாடசாலையில் சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதிபர்கள் பொறுப்புடன் செயற்பட்டால் மாணவர்களுக்குப் போசாக்கான உணவை தினமும் வழங்குவதோடு கல்வியின் வளர்ச்சியைப் பலமடங்காக்க முடியும் என்பதை உணருங்கள்.- என்று அவர் தெரிவித்தார். (ற-ஐ-402)

## காணிகளை மீளத் தருவதாகக் கூறி ஏமாற்றிவிட்டது பாதுகாப்பு அமைச்சு

வட்டுவாகல் மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,பெப்.29

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கடற்படைமுகாமை அகற்றி, பொதுமக்களின் காணிகளைக் கையளிப்பது தொடர்பில் இந்த மாதம் 15 ஆம் திகதி பதில் வழங்குகின்றேன் என்று கூறிய பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் எம்மை ஏமாற்றிவிட்டார் என்று விசனம் தெரிவித்துள்ளனர் காணி உரிமையாளர்கள்.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் 35 பேருக்குச் சொந்தமான தனியார் காணிகள் 541 ஏக்கரையும், அரச காணிகள் 56 ஏக்கரையும் கையகப்படுத்திக் கடற்படையினர் முகாம் அமைத்துள்ளனர். தமது காணிகளை மீள ஒப்படைக்குமாறு கோரி உரிமையாளர்கள் கடந்த ஆறு ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வருவதுடன், பல போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

அதையடுத்து அது குறித்து ஆராய்ந்து காணிகளைக் கையளிப்பது தொடர்பில் கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் , மற்றும் மாவட்டஅரசஅதிபர்தலைமையில் காணி உரிமையாளர்கள் அனைவரும் மாவட்டச் செயலகத்துக்கு அழைக்கப்பட்டு நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டிருந்தனர்.

அதன்பின்னர் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் காணிகளின் விவரங்களை உரிமையாளர்கள் ஜனவரி மாத இறுதிக்குள் கையளிப்பின் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி உரிய பதில் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளரின் கூற்றுக்கு அமைய, சகல ஆவணங்களும் பிரதேச செயலாளர் ஊடாக கடந்த மாதமே அனுப்பி வைக்கப்பட்டு விட்டன. இருப்பினும் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார் என்று காணி உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த மாதம் 15 ஆம் திகதிக்குள் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த போதும் மாதம் நிறைவடையும் இன்று வரைக்கும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

குறித்த நிலங்கள் தொடர்பில் கடந்த மாதம் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் தீர்மானத்துக்கமைய உரிமையாளர்கள் அதன் விவரங்களை ஜனவரி 30 இற்கு முன்பு பிரதேச செயலரிடம் சமர்ப்பித்தனர். அவை உடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அதற்கான பதில் இந்த மாதம் 15ஆம் திகதி வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் அது இன்றுவரை கிடைக்கவில்லை . அதனாலேயே காணி உரிமையாளர்களுக்கு எம்மால் பதில் அளிக்க முடியவில்லை -என்றார். (ற-ஐ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டர் ஆசிரியர்களின் விவரங்கள் பதிவு

கிளிநொச்சி,பெப்.29

கிளிநொச்சி வலயத் தொண்டர் ஆசிரியர் பட்டியலில் விடுபட்டவர்களது பெயர்விவரங்களைப்பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பி.ப 3 மணிவரை கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே வெளியிடப்பட்ட பட்டியலில் விடுபட்ட, 01-07-2013க்கு முன்னர் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் தொண்டராசிரியராகப் பணியாற்றத் தொடங்கி இன்று வரை பணியாற்றிக் கொண்டிருப்போரது பெயர் விவரங்களே பதிவு செய்யப்படவுள்ளன என்று வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இவ்வாறு பட்டியலில் பெயர்விடுபட்டவர்கள் சகல ஆவணங்களுடனும் வருகைதந்து பதிவுசெய்து கொள்ளலாம். எனவும் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விடுபவர்களுக்கு பிறிதொரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ)

# பனை தறிப்பதற்கான அனுமதி இனிப் பிரதேச செயலர்களிடம்

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி,பெப்.29

கிளிநொச்சி மாவட்டத்தில் பனைமரம் தறிப்பதற்கோ, வெளியில் ஏற்றிக் கொண்டு செல்வதற்கோ நாளை செவ்வாய்க் கிழமை தொடக்கம் வன இலாகாத் திணைக்களத்திடம் இருந்து எந்த அனுமதியும் வழங்கப்பட மாட்டாது. ஏற்கனவே வழங்கப் பட்டிருந்த அனுமதிகள் யாவும், இரத்து செய்யப்பட்டுள்ளன. இனிமேல் அவற்றுக்கான அனுமதிகளைப் பிரதேச செயலர்கள், கிராமசேவையாளர்களே வழங்குவர்.- இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் இது நடைமுறைக்கு வருகிறது என்றும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் பனைமரங்கள் கடத்தப்படுவதை இனம் காண்பதற்கே இந்த நடவடிக்கை எனவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட பல பகுதிகளில் பனை மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்படுகின்றன. அவற்றைப் பனை அபிவிருத்திச் சபையின் அனுமதியின்றி வெளியில் கொண்டு செல்கின்றனர். இதற்கு எவர் உடந்தையாக இருக்கின்றார்கள் என்று தெரியவேண்டும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் பதில் கூறவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட அரச அதிபருடைய குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த கிளிநொச்சி மாவட்ட பனை அபிவிருத்திச் சபையினர், பனை மரங்களை நடுவதும், அவற்றைப் பராமரிப்பதுமே தங்களுடைய பணி எனவும் கடத்தப்படும் பனை மரங்களைத் தடுத்து நிறுத்துவதற்கோ, மரம் வெட்டுவதைத் தடுப்பதோ தங்களுடைய பணி அல்ல எனவும் தெரிவித்தனர்.

அத்தோடு இதுவரையில் பனைமரங்களை வெட்டுவதற்கான அனுமதிகளை எவரும் தங்களிடம்பெற்றுக்கொள்ளவில்லை எனவும், ஆனாலும் பனை மரக்காலைகளில் மரங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான அனுமதிகளை வன இலாகத் திணைக் களத்தினரே வழங்கியுள்ளனர். அவர்களைத் தான் இது குறித்துக் கேட்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

வன இலாகத் திணைக் களத்தினரிடம் இது குறித்துக் கேட்டபோது,

மரக்காலைகளில் பனை மரங்கள் விற்பதற்கான அனுமதிகள், மரக்காலைகளுக்குச் சென்று பனை மரங்களைச் சோதனைக்கு உட்படுத்திய பின்னர் வன இலாகத்திணைக் களத்தினரால் அனுமதிகள் வழங்கப்படும்.

அதனை விட பனை மரங்களைத் தறித்து அவர்கள் கொண்டு வரும்போது, உரிய முறையில் பனை மரங்கள் தறிக்கப்படுகின்றதா என்பதைச் சோதித்து அதற்கான ஆதாரங்கள் மரங்களைக் கொண்டுவருபவர்கள் வைத்திருந்தால், அவர்களுக்கு வழி அனுமதிகளையும் வன இலாகத்திணைக்களமே வழங்குகின்றது. சட்ட விரோதமாக எவருக்கும் அனுமதிகள் வழங்கப்படுவதில்லை எனத் தெரிவித்தனர்.

இதனை அடுத்து கருத்து தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், எல்லாம் சரியாக நடந்தால் எவ்வாறு சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுகின்றன, எப்படி மரங்களை கொண்டு செல்கின்றார்கள் என்றும் கேள்வி எழுப்பினார். சட்டவிரோதமாகப் பனை மரங்கள் எவ்வாறு கடத்தப்படுகின்றன என்பதைக் கண்டு பிடிப்பதற்கு வன இலாகத் திணைக் களத்தினர் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதியில் இருந்து மரங்களை வெட்டுவதற்கோ,அவற்றைக் கொண்டு செல்வதற்கோ எந்த அனுமதிகளையும் வழங்க கூடாது. ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் யாவும் இரத்து செய்யப்பட்டுள்ளன. இனிமேல் மரங்களுக்கான அனுமதிகளை பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்களே வழங்க வேண்டும் என்றும் மாவட்ட அபி விருத்திக் குழு இணைத்தலைவர்களால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு வன இலாகத் திணைக்களத்தினரும் ஆதரவளித்தனர். (ற-ஜ-4,21)

## உள்ளூராட்சி அலுவலர்களுக்கு பயிற்சி நெறி

சாவகச்சேரி, பெப்.29

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அலுவலர்களுக்கான நீதிமன்றத் தண்டம், முத்திரைக் கட்டண மீளளிப்பு மற்றும் பயன்பாடு தொடர்பான பயிற்சிநெறி நாளை காலை 9 மணிக்கு யாழ்.பொது நூலக பயிற்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி வகுப்பில் சபைகளின் செயலாளர்கள், கணக்காளர்கள், மேற்குறித்த விடயத்தைக் கையாளும் அலுவலர்களைப் பங்குபற்றுமாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் அறிவித்துள்ளார். (ற-ஜ-9)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் மாணவர்களுக்குச் சான்றிதழ்கள்

சாவகச்சேரி, பெப்.29

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களிடையே நடத்தப்பட்ட 'சமாதானம்' தொடர்பான சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கழகத் தலைவர் லயன் பு.தினேஸ்குமார் தலைமையில் சாவகச் சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் கிறிஸ்ரி நாணயக்கார, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் முதல்மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும், மேலும் 22 மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினர்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி இந்தக் கல்லூரியில் போக்குவரத்து கண்காணிப்பு கடமையில் ஈடுபடும் மாணவர்களுக்கு அதற்கான சீருடைகளும் வழங்கப்பட்டன.

அண்மையில் கழகத்தால் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களுக்கும் போக்குவரத்துக் கண்காணிப்புச் சீருடைகள் வழங்கப்பட்டிருந்தன. (ற-ஜ-9)

ST&S SINCE 1892

LOLC MICRO CREDIT LIMITED

LOLC MICRO CREDIT

மாபெரும் ஏல விற்பனை

03ஆம் திகதி மார்ச் - 2016

புகையிரத நிலைய வீதி, வைரவப் புளியங்குளம், வவுனியாவில்

முற்பகல் 10.00 மணி தொடக்கம்

| | | | |
|---|---|---|---|
| **பஸ்** | | | |
| ASHOK LEYLAND COLOMBO RIDER | 6540CC | 2002 | WP GU XXXX |
| **நான்கு சக்கர உழவியந்திரம்** | | | |
| JOHN DEERE 5047D | 2900CC | 2012 | NC RD XXXX |
| MAHINDRA 575DI | 2730CC | 2014 | NP RD XXXX |
| TAFE 45DI | 2500CC | 2008 | RB XXXX |
| TAFE 45DI | 2500CC | 2010 | NP RB XXXX |
| TAFE 45DI | 2500CC | 2010 | NP RB XXXX |
| TAFE 45DI | 2500CC | 2012 | NP RC XXXX |
| TAFE 45DI | 2500CC | 2013 | NP RD XXXX |
| TAFE 45DI | 2500CC | 2013 | NC RD XXXX |
| TAFE 45DI | 2500CC | 2015 | NP RD XXXX |
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| BAJAJ CT | 100CC | 2014 | NP BAX XXXX |
| BAJAJ DISCOVER | 125CC | 2013 | NP BAI XXXX |
| BAJAJ DISCOVER | 125CC | 2014 | NP BBI XXXX |
| BAJAJ DISCOVER | 145CC | 2015 | NP BCM XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2013 | NP BAR XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2014 | NP BBE XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2014 | NP BBE XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | NP BCG XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | NP BCF XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | NP BCE XXXX |
| BAJAJ PULSER | 135CC | 2013 | NP BAF XXXX |
| HERO DAWN SPOKE | 98CC | 2014 | NP BCC XXXX |
| HERO DAWN | 100CC | 2014 | NP BBO XXXX |
| HERO DAWN | 125CC | 2014 | NP BBQ XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2013 | NC BAO XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2014 | NP BCE XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2015 | NP BCD XXXX |
| HERO HF DELUXE | 98CC | 2014 | NP BBB XXXX |
| HERO HF DELUXE | 98CC | 2015 | NP BCS XXXX |
| HERO HF DELUXE | 98CC | 2015 | NP BCJ XXXX |
| HERO HUNK | 150CC | 2014 | NP BBV XXXX |
| HERO HUNK | 150CC | 2014 | NP BBL XXXX |
| HERO HUNK | 150CC | 2015 | NP BCA XXXX |
| HERO ISMART | 98CC | 2014 | NP BAV XXXX |
| HERO PASSION PRO | 100CC | 2012 | NP BAH XXXX |
| HERO PASSION PRO | 100CC | 2012 | NP BBM XXXX |
| HERO PASSION PRO | 98CC | 2014 | NP BBJ XXXX |
| HERO PLEASURE | 100CC | 2013 | NC BAP XXXX |
| HERO PLEASURE | 100CC | 2014 | NP BBR XXXX |
| HERO PLEASURE | 100CC | 2014 | NP BBT XXXX |

| | | | |
|---|---|---|---|
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| HERO PLEASURE | 100CC | 2015 | NP BBW XXXX |
| HERO PLEASURE | 100CC | 2015 | NP BCL XXXX |
| HERO SPLENDAR I SMART | 98CC | 2014 | NP BAU XXXX |
| HERO SPLENDOR | 98CC | 2015 | NP BCM XXXX |
| HERO XTREME | 150CC | 2013 | NC BAL XXXX |
| HONDA ACTIVA | 109CC | 2014 | NP BBB XXXX |
| HONDA CB TRIGGER | 150CC | 2014 | NP BCA XXXX |
| HONDA DREAM YUGA | 109CC | 2012 | NP BAS XXXX |
| TVS APACHE | 150CC | 2013 | NP BBJ XXXX |
| TVS APACHE | 180CC | 2012 | NP BBA XXXX |
| TVS WOGO | 110CC | 2015 | NP BCQ XXXX |
| **லொறி** | | | |
| NISSAN | 4570CC | 2000 | NP LD XXXX |
| **முச்சக்கர வண்டி** | | | |
| BAJAJ | 174CC | 2009 | NP QU XXXX |
| BAJAJ | 174CC | 2010 | NC QZ XXXX |
| BAJAJ | 174CC | 2010 | NC QZ XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NP YP XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NP YN XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NC YN XXXX |
| BAJAJ | 198CC | 2014 | EP AAP XXXX |
| BAJAJ | 198CC | 2015 | NC AAX XXXX |
| BAJAJ | 199CC | 2011 | NP YI XXXX |
| BAJAJ | 199CC | 2012 | NP AAC XXXX |
| BAJAJ | 199CC | 2012 | NC YX XXXX |
| BAJAJ | 200CC | 2010 | NC YI XXXX |
| BAJAJ | 200CC | 2011 | NW YN XXXX |
| **டிறக்** | | | |
| DFSK EQ1020DR | 1357CC | 2013 | NC PV XXXX |
| FOTON AUMARK | 1809CC | 2013 | NC PW XXXX |
| MAHINDRA MAXXIMA PLUS | 909CC | 2015 | NP DAA XXXX |
| MAHINDRA MAXXIMO PLUS | 909CC | 2013 | NP PV XXXX |
| MAHINDRA MAXXIMO PLUS | 909CC | 2013 | SG PW XXXX |
| MAHINDRA MAXXIMO | 909CC | 2012 | PU XXXX |
| TATA ACE | 702CC | 2010 | NP PP XXXX |
| TATA ACE | 702CC | 2013 | NP PW XXXX |
| TATA ACE | 702CC | 2013 | NP PX XXXX |
| TATA ACE | 702CC | 2015 | NP DAA XXXX |
| TATA SUPER ACE | 1405CC | 2014 | NP PX XXXX |
| **இருசக்கர உழவியந்திரம்** | | | |
| SIFANG | 815CC | 2011 | NC SL XXXX |
| VIKYNO | 624CC | 2011 | NC SM XXXX |

பார்வைக்கு – 01st & 02nd March 2016

Between 9.00 a.m – 5.00 p.m

**Conditions of Sale**

✓Entrance: By a non refundable Ticket of Rs. 500.00 per person & a refundable deposit of Rs. 5,000.00 per personon the day of Auction.

✓Payment: **Non – refundable** initial deposit of 25% in Cash at the fall of the Hammer & Balance 75% &Removal latest by 3:00 pm on Friday 11th March 2016 to be paid to LOLC Micro Credit Limited No.45a, 2nd Cross Street, Vavuniya.

✓The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.

✓The decision of the Auctioneer will be final.

**SCHOKMAN & SAMERAWICKREME**

*One Country. One Auctioneer. Celebrating 124 Years of Service Excellence.*

D,ads

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

SGS UKAS

City Office & Showroom:
290, Havelock Road, Colombo 5.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொழும்புத் துறைமுகத்தில் சீனக் கடற்படைக் கப்பல்

கொழும்பு,பெப்.29
சீனக் கடற்படையின் மிகப்பெரிய மருத்துவமனைக் கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை வந்துள்ளது. சீனக் கடற்படைக் கப்பல் கொழும்புத் துறை முகத்தை வந்தடைந்தபோது, இலங்கைக்கு கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பும் அளித்தனர்.
சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 865 என்ற இலக்கமுடைய இந்த மருத்துவமனைக் கப்பல், சுமார் 30 ஆயிரம் தொன் எடை கொண்டதாகும்.
14 மருத்துவமனை அலகுகளைக் கொண்ட இந்தக் கப்பலில் உலங்குவானூர்தி தளம் மற்றும் கட்டுப்பாட்டுக் கோபுரம் என்பனவும் உள்ளன.
இலங்கையின் புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர், சீனக் கடற்படைக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வருவது இது இரண்டாவது தடவையாகும். (ற-ஐ-5)

# நிதிக்குற்ற விசாரணைப் பிரிவுக்கு இதுவரையில் 222 முறைப்பாடுகள்

கொழும்பு, பெப்.29
பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு நிறுவப்பட்டு ஓராண்டு காலம் கடந்துள்ள நிலையில், பாரதூரமானவைகளாகக் கருதப்படும் நிதிக்குற்றங்கள் தொடர்பாக 222 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.
இந்த முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு 32 நபர்கள் மீது வழக்குத் தொடுப்பதற்கான விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.
இந்தப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள ஏனைய முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸ் துறை தெரிவித்துள்ளது.
இதனிடையே இவ்வாறு வழக்குகள் தொடுக்கப்படவுள்ள தரப்பினரிடையே பிரபலமான அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கடந்த அரசின் காலத்தில் இருந்துள்ள அரச நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்டவர்களும் உள்ளனர் எனப் பொலிஸ்தகவல்மார்க்கங்கள் தெரிவிக்கின்றன.
சட்டமா அதிபரின் பணிப்புரை கிடைத்ததும் உடனடியாகவே இந்தத் தரப்பினர் கைது செய்யப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-22)

> இந்த முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு 32 நபர்கள் மீது வழக்குத் தொடுப்பதற்கான விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

# அமைச்சர்களின் பதிலைப் பெற கட்டளைச் சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, பெப்.29
நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காக, அமைச்சர்கள் கட்டாயம் சபையில் பிரசன்னமாகியிருக்க வேண்டும். இதைக் கட்டாயப்படுத்தும் வகையில் நிலையியல் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும். - இவ்வாறு சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது.
சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று, நிலையியல் கட்டளைச் சட்டத்தின் 23 - 2 ஆம் பிரிவின் கீழான விசேட அறிவிப்பு ஆகியன முடிவடைந்த பின்னர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க சர்ச்சையொன்றை எழுப்பினார்.
அதாவது, 23 - 2 ஆம் பிரிவின் கீழ் நான் கேள்விகளைக் கேட்டிருந்தேன். ஆனால், இன்னும் பதில் வழங்கப்படவில்லை. இந்த நிலைமை மாற வேண்டும் - என்றார்.
இதற்குப் பதிலளித்த சபாநாயகர் வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்று, விசேட அறிக்கை மூலம் எழுப்பப்படும் கேள்விகள் ஆகியவற்றுக்குப் பதிலளிப்பதற்காக அமைச்சர்கள் அல்லது பிரதியமைச்சர்கள் சபையில் இருக்க வேண்டும். இதைக் கட்டாயப்படுத்தும் வகையில் நிலையியல் கட்டளைச் சட்டத்தில் விரைவில் திருத்தம் கொண்டு வரப்படும் - என்றார். (ற-ஐ-5)

# சம்பளக் கொள்கையை அமைப்பதற்கு ஆணைக்குழு நிறுவத் தீர்மானம்

கொழும்பு, பெப்.29
தேசிய சம்பளக் கொள்கையை அமைப்பது தொடர்பாக அரச மற்றும் தனியார் பிரிவுகளின் அனைத்துத் துறைகளும் அங்கத்துவம் பெறும் விதமாக அறிவாற்றலையும், அனுபவங்களையும் கொண்டுள்ள நிபுணர்கள் உள்ளடங்கும் ஆணைக்குழுவொன்றைப் புதிதாக நிறுவுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.
ஒட்டுமொத்த அரச சேவையின் செயற்றிறன் மற்றும் பலாபயனை உச்சப்படுத்தி விடுவதும், அரச ஊழியர்களினது வாழ்க்கைத் தரம் மற்றும் சேவைகளின் திருப்திகரமான தன்மையை மேம்படுத்தி விடுவதையும் நோக்காகக் கொண்டு புதிய சம்பளங்கள் கொள்கையொன்று ஆக்கப்படவுள்ளதோடு அதற்கு அமைச்சரவையின் அனுமதியும் கிடைத்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-ஐ-22)

# தாஜுதீன் கொலை விவகாரம் பொலிஸாருக்கு புதிய தகவல்

கொழும்பு, பெப்.29
ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் விளையாடிய விளையாட்டுக் கழகத்தை மகிந்த அரசில் அங்கம் வகித்த இளம் அரசியல்வாதி ஒருவர் வாங்க முற்பட்ட விவகாரத்தாலேயே, வசீம் தாஜுதீன் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
குறித்த இளம் அரசியல்வாதி ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் விளையாடிய விளையாட்டுக் கழகத்தைத் தனதாக்கிக் கொள்ள முயற்சிகள் மேற்கொண்ட போது, வசீம் தாஜுதீன் அதற்கு எதிராகச் செயற்பட்டுள்ளார். அந்தச் சமயத்தில் குறித்த விளையாட்டுக் கழகத்தில் வலுவான வீரராக வசீம் தாஜுதீன் செயற்பட்டு வந்தார்.
இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு வசீம் தாஜுதீன் மற்றும் இளம் அரசியல்வாதி ஆகியோருக்கு இடையில் கடும் தகராறு ஏற்பட்டுள்ளது.
அதன் பிரதிபலிப்பாகவே வசீம் தாஜுதீன் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதற்கான சாட்சியங்கள் பல பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன என்றும் குறித்த கொழும்பு ஊடகத்தின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, வசீம் தாஜுதீன் திட்டமிட்டே படுகொலை செய்யப்பட்டார் என்றும், சந்தேக நபர்களை உடனடியாகக் கைது செய்யுமாறும், கொழும்பு நீதிமன்றம் அண்மையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.
(ற-ஐ-5)


# றோவுக்கு உதவி செய்யவே இந்திய அம்புலன்ஸ் சேவை

## விமல் வீரவன்ச கூறுகின்றார்



கொழும்பு, பெப்.29
இந்தியாவின் புலனாய்வு முகவர் அமைப்பான 'றோவின்' உளவாளிகள் சுதந்திரமாக நாட்டில் நடமாடித் தகவல்கள் சேகரிப்பதற்கே, இந்தியாவின் அம்புலன்ஸ் சேவையை இலங்கையில் நடத்துவதற்கு இந்த அரசு எத்தனிக்கின்றது.
உலகிலேயே மோசமான சுகாதார சேவையைக் கொண்ட இந்தியா, இலங்கையில் எப்படிச் சிறப்பான சேவையை நடத்தும். - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-
முன்மொழியப்பட்டுள்ள அம்புலன்ஸ் சேவைக்குப் பெரும்பாலும் இந்தியாவுக்குச் சார்பானவர்களே சேர்த்துக் கொள்ளப்படுவர். இது நாடு முழுவதும் செயற்படவுள்ளது. எனவே, 'றோ' உளவாளிகளால், தாம் செயற்படும் பிரதேசங்களில் உள்ளவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்துத் தரவுகளை உருவாக்க முடியும்.
உலகிலேயே இந்தியாவில் தான் மிகமோசமான சுகாதார சேவை காணப்படுகிறது. அங்கே தரமான அம்புலன்ஸ் சேவை கிடையாது. இப்படியான நிலையில், அம்புலன்ஸ் சேவையை இலங்கையில் நடத்த அவர்களை அழைப்பது அபத்தமானதாகும்.
இந்த அம்புலன்ஸ் சேவையை சுகாதார அமைச்சால் கட்டுப்படுத்த முடியாது.
இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காக இலங்கையின் பொருளாதாரத்தைத் தாரைவார்க்க இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது என்பதற்கு இது ஒரு ஆதாரம். இதனை எதிர்ப்பவர்களுக்கு துரோகிகள் என்று முத்திரை குத்தப்படுகிறது.- என்றார். (ற-ஐ-5)

# அமெரிக்கா - இலங்கைக் கூட்டு கலந்துரையாடல் வொசிங்டனில்




கொழும்பு, பெப்.29
அமெரிக்கா - இலங்கைக் கூட்டுக் கலந்துரையாடல் வொசிங்டனில் உள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜோர்ஜ் மார்ஷல் கருத்தரங்கு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற இலங்கைக் குழுவுக்கு, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமை தாங்கினார். அமெரிக்கப் பிரதிநிதிகள் குழுவுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அடிநிலைச் செயலர் தோமஸ் சானொன் தலைமை தாங்கினார்.
வொசிங்டன் நேரப்படி, வெள்ளிக்கிழமை காலை இந்தப் பேச்சு ஆரம்பமாகியது. பேச்சு மதிய போசனத்துடன் தொடர்ந்து பிற்பகல் வரை - நீண்ட நேரம் இடம்பெற்றுள்ளது.
அமெரிக்கத் தரப்பில் தெற்கு மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி உள்ளிட்டோரும் இதில் கலந்து கொண்டனர்.
ஜனநாயக அரசாட்சி, அபிவிருத்தி ஒத்துழைப்பு, மக்களுக்கிடையிலான உறவுகள், பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு ஒத்துழைப்பு, சர்வதேச மற்றும் பிராந்திய விவகாரங்கள், மேலும் பரஸ்பர ஈடுபாடு கொண்டுள்ள விடயங்கள் குறித்து பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்று வோசிங்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுரக்காயின் மீது வைக்கப்பட்ட கை பூசனிக்காய் மீதும் வைக்கப்படும்

## பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கூறுகிறார்

கொழும்பு, பெப்.29

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ச மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் இடையில் ஒப்பந்தங்கள் இருப்பதால், ராஜபக்சவினர் கைது செய்யப்படப் போவதில்லை எனக் கூறப்பட்டது. ஆனால் யோசித ராஜபக்சவின் கைதுடன் அது பொய்ப்பிக்கப்பட்டுள்ளது என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுரக்காய் மீது வைத்த கை பூசணிக்காய் மீது வைக்கப்படும் என்ற கிராமத்துக் கதை ஒன்று உள்ளது. தற்போது பூசனிக்காய் மீது கை வைக்கப்பட்டுள்ளதால், சுரக்காய் மீதும் கை வைக்கப்படும்.

தமது ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட ஊழல், மோசடிகள் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்டோருக்கு ஆணைக் குழுக்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் செல்ல நேர்ந்துள்ளது.

நான் வெளியிட்ட ஊழல் தொடர்பான தகவல்கள் காரணமாக இழப்பீடு கோரி சட்டத்தரணிகள் ஊடாக எனக்கு 28 கடிதங்கள் வந்தன. எனினும் ஒரு வழக்கு மாத்திரமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ஸ செய்துள்ள முறைகேடுகள் காரணமாகவே அவர் ஒழுங்கு குழுவுக்கு அழைக்கப்பட்டார். பத்திரிகையை விரித்து படுத்து உறங்கிய விமல் வீரவன்ஸ, மோசடி செய்த பணத்தின் மூலமே ஹோகந்தர பிரதேசத்தில் மாளிகையைக் கட்டினார். வீரவன்ஸ என்பவர், மில்லியன் கணக்கான அரச பணத்தை மோசடி செய்த நபர்- என்றார். (ந-ஐ-5)

# கல்விக்கான வசதிகளே நாட்டின் சிறந்த முதலீடு

## ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, பெப்.29

கல்விக்காக அதிக வசதிகளை ஏற்படுத்துவதே, நாட்டுக்கான நீண்டகால மற்றும் சிறந்த முதலீடாக அமையும். - இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை களுத்துறை மகளிர் கல்லூரியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் கல்விக் கண்காட்சியை ஆரம்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கல்விக்கு அதிக வசதிகளை பெற்றுக்கொடுப்பது, எமது நாட்டின் எதிர்காலத்துக்கான நீண்ட கால முக்கிய முதலீடாகும். நாட்டு மக்களை கல்வியறிவால் மேம்படுத்துவதன் மூலமே, நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். அதுவே உண்மையான அபிவிருத்தியாகவும் அமையும். மகத்தானவர்களாக உலகில் முன்னோக்கிச் செல்வதற்கு இதுவே சிறந்த முதலீடாகும்.

ஆகவே புதிய அரசு என்ற வகையில், கல்வித் துறைக்கு நாம் கடந்த காலத்தை விட அதிக நிதியை ஒதுக்கியுள்ளோம். இதன் மூலம் சிறந்த கல்வியறிவைக் கொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.-என்றார். (ந-ஐ-4)

> "நாட்டு மக்களை கல்வியறிவால் மேம்படுத்துவதன் மூலமே, நாட்டைக் கட்டியெழுப்பமுடியும். அதுவே உண்மையான அபிவிருத்தியாகவும் அமையும். மகத்தானவர்களாக உலகில்முன்னோக்கிச்செல்வதற்கு இதுவே சிறந்த முதலீடாகும்."

# மீள்குடியமர்ந்தோருக்கு வாழ்வாதார உதவிகள்

## எஸ்.ஏ.எச்.நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம், பெப்.29

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் எஸ்.டி.சி. நிறுவனத்தின் அனுசரணையில் எஸ்.ஏ.எச். நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 26 வருடங்களாக இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்து தற்போது விடுவிக்கப்பட்டு, அண்மையில் மீளக்குடியமர்ந்த பளை வீமன்காமம் வடக்கு, தெற்கு ஜே/236, 237, பலாலி தெற்கு ஜே/252 ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்துக்கான உதவிகள் கடந்த வியாழக் கிழமை வழங்கப்பட்டன.

சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத் தாபனத்தின் நிதியுதவியுடன் எஸ்.ஏ.எச். நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கத்தரின் உத்தியோகபூர்வ மாக இந்த வாழ்வாதார உதவி களை வழங்கினார். இதன்போது வாழ்வாதார உதவிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குத் தையல் இயந்திரம், விவசாய உபகரணம், சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான கடன்வசதி என்பன வழங்கப் பட்டன. மேலும் இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்து சிறு வியாபாரத்தை மேற்கொள்வதற்கு ஒருவருக்குக் கடை ஒன்று அமைத்து உத்தியோகபூர்வமாகத் திறந்து கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தெல்லிப் பழைப் பிரதேச செயலர் கனகராஜா ஸ்ரீமோகனன், சுவிஸ் லேப அசிஸ்ரன் நிறுவனத்தின் வடமாகாண திட்ட இணைப்பாளர் சாந்தாப்பிள்ளை யேசுதாசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (த-ஐ-ரி-107)

# உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பை வெளியிடாவிட்டால் போராட்டம்

## ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எச்சரிக்கை

கொழும்பு,பெப்.29

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் மார்ச் 30 ஆம் திகதி வெளியிடத் தவறினால், பொதுமக்களை இணைத்து நாட்டிலுள்ள பிரதான வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எச்சரித்துள்ளது.

ஹற்றன் கினிகத்தேனை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஆயுள்காலம் நிறைவடைந்து, கலைக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் மார்ச் மாதம் 30ஆம் திகதியன்று வெளியிடுவதற்கு அரசு தவறினால் அதற்கெதிராகப் பொதுமக்களைத் திரட்டி நாடு முழுவதும் பிரதான வீதிகளை இடைமறித்து ஆர்ப்பாட்டங்களை நடத்த எதிர்பார்த்திருக்கின்றோம்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்ற வகையில் நல்லாட்சி அரசால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்ற எத்தனிக்கும் சட்டவரைவுகளையும், பிரேரணைகளையும் தோற்கடிக்க நடவடிக்கை எடுப்போம்- என்றார். (ந-ஐ-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தம்; பிரதமர் அளித்துள்ள வாக்குறுதி

எமக்கு மிகப் பக்கத்திலுள்ள மிகப் பெரிய அண்டை நாடான பாரதம் அல்லது இந்தியா எப்பொழுதெல்லாம், வர்த்தகம், பொருளாதாரம், கலை கலாசாரம் மற்றும் சமயம் போன்ற துறைகளில் உலகம் வியக்கும் நிலைக்கு உச்சமடைகிறதோ, அப்போதெல்லாம் அதன் அண்டை நாடுகளுடனும் அவைகளைப் பகிர்ந்து கொண்டுவந்திருப்பது பழம் கதை அல்ல; வரலாற்று உண்மை. அதற்கு இலங்கை ஓர் உதாரணம் எனலாம்.

இங்கே காணப்படுகின்ற சமய, கலாசார மற்றும் மொழிகளின் வளர்ச்சிக்கு அந்த நாடு அளித்துள்ள பங்கு பணி அளப்பெரியது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தொடர்புகளை விஜயனின் மூதாதைகளின் காலத்துக்கு முன்பிருந்தே கணக்கிட முடியும்.

இப்பொழுது இந்தியா, ஆசியாவில் மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றையும் விட பொருளாதார ரீதியில் உச்ச நிலைக்கு முன்னேறி இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்தியாவின் அண்மைக்கால வளர்ச்சி ஏழுவீதத்தை அண்மித்திருப்பதாகவும், இது சீனாவின் வளர்ச்சி விகிதத்தை மீறுவதாய் இருப்பதாகவும் நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அதனால் தான் அந்த நாட்டுடன் விரிவானதொரு பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. எட்கா (ETCA) என்று அழைக்கப்படும் அந்த ஒப்பந்தமானது இன்னமும் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. ஆனால் இந்த ஒப்பந்தத்தினால் நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் பெரியளவில் பாதிப்புக்கள் ஏற்படப் போவதாக எதிர்த்தரப்பினர் பரப்புரைகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

குறிப்பாக பெரும் எண்ணிக்கையில் இந்தியர்கள் நாட்டுக்குள் வந்து இங்குள்ளவர்களுக்கு வேலை இல்லாமையை அதிகரித்து விடுவார்கள் என்று ஒரு பகுதியினரும், இன்னும் சிலர் அப்படி வருபவர்கள்அபாயகரமான நோய்களைப் பரப்பிவிடுவார்கள் என்றும் கதை விடுகின்றனர். அது உளவுப் பிரிவினருக்கு இன்னும் வசதியாகப் போய்விடும்.

இப்போதே, யாழ்ப்பாணத்தில் இந்திய உளவாளிகள் இருப்பதாகவும் கூறியுள்ளார்கள். இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் ஒரு தரப்பினர் சூளுரைத்துள்ளனர்.

நாட்டின் நலன் கருதி வெளி நாடுகளுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களை, பதவியிலிருக்கும் அரசு அதன் தாரதம்யங்களை, நெளிவுசுழிவுகளை மற்றும் நன்மை தீமைகளை, சீர்தூக்கிப் பாராமல் செய்து விடும் என்று கூறமுடியாது.

முன்னைய அரசு சீனாவுடன் செய்துகொண்ட இவ்வாறான அபிவிருத்தித்திட்டங்களின்போது இவ்வாறான கருத்துக்களெல்லாம் வெளியிடப்பட்டனவா என்பது சந்தேகமே.

அந்த ஒப்பந்தங்களை செயற்படுத்தும் போது நூற்றுக் கணக்கான சீனர்கள் பணிபுரிந்தார்கள், அவர்கள் பெரும்பாலும் சீனச்சிறைக் கைதிகள் என்றும் கூறப்பட்டது. அவர்கள் நோய்களைக்கொண்டுவந்திருக்க மாட்டார்களா, அவர்கள் மத்தியில் சீன உளவாளிகள் இருந்திருக்க மாட்டார்களா என்றவாறு கேள்விகள் எழுந்திருந்தன.

இப்போது கூட கொழும்புத் தெருக்களில் சீனப்பிச்சைக்காரர்கள் காணப்படுகிறார்கள்-இவர்களில் உளவாளிகளும் இருக்கலாம் அல்லவா?

அதனால் தான் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் பேசிய போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எட்கா குறித்து மாயைகளை, புனைகதைகளை வெறுப்புணர்ச்சிகளை மற்றும் பகைமையைப் பரப்பாதீர்கள். அது இன்னமும் முற்று முழுதாக்கப்படவில்லை, என்று எதிர்ப்பாளர்களைச் சாடினார்.

அது மட்டுமன்றி ஒப்பந்தம் தயாரானதும் சபையில் தாக்கல் செய்து எல்லாத் தரப்பினரதும் ஒருமித்த கருத்தை பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

நாங்கள் வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்களை இந்தியாவுடன் மட்டுமன்றி, அமெரிக்கா,சீனா,பாகிஸ்தான், துருக்கி, சிங்கப்பூர் மற்றும் பல ஆசிய மற்றும் சார்க் நாடுகளுடனும் செய்துகொள்ள திட்டமிட்டிருக்கிறோம்.

எனவே வெளிநாட்டவர்கள் உள்நாட்டவர்களுக்கு சவால்விட அனுமதிக்கப்படுவார்கள் என்று எவரும் அஞ்சத்தேவையில்லை. நாட்டையும், எதிர்காலத்தையும் கருத்தில் வைத்தே இவற்றைச் செய்கின்றோம் - என்றார்.

பிரதமர் மேலும் கூறுகையில், குழந்தை பிறக்கும் முன்பே அதன் தீய பலன்கள் எப்படி இருக்கப்போகிறது என்று ஆரூடம் கணிக்க வேண்டாம். நாங்கள் ராஜயோகத்துடனான குழந்தையைப் பிரசவிக்கச் செய்யவே முயல்கிறோம். பொய்யான கதைகளைப் பரப்பி நாட்டைத் தீயில் அமிழ்த்த எவரையும் நாம் அனுமதிக்கப் போவதில்லை - என்றார்.

எட்கா ஒப்பந்தம், பிரதமரின் வாக்குறுதிப்படி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்பது உறுதியாகி விட்டது. அதனால் எதிர்த்தரப்பினர் இப்பொழுதே அவசரப் பட்டு இல்லாத, பொல்லாத கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்காமல் காத்திருப்பதே புத்திசாலித்தனம்.

# ரணிலை வீட்டுக்கு அனுப்ப மகிந்த தரப்பால் இயலுமா?

சிங்கள மூலம்: உப்புல் யோசெப் பெர்னாண்டோ
தமிழில்: வீ.எஸ்.ரீ

2008 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகப் பதவி வகித்த வேளையில் மகிந்த ராஜபக்ச இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின் போது, இலங்கைஇந்திய ஒப்பந்தத்தின் 13ஆவது திருத்தம் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சிறந்ததொரு திட்டமெனத் தெரிவித்திருந்தார். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பொருத்தமான வழி எதுவென இரண்டு தசாப்த காலத்துக்கு முன்னரே ராஜீவ் காந்தி உணர்ந்திருந்தார் என்றும் கூறிய மகிந்த, இந்திய அமைதிப் படையைத் திருப்பி அனுப்புவதென்ற பிரேமதாசவின் முடிவு தவறானது என்றும் கூறியிருந்தார்.

அதே மகிந்த, 1989ஆம் ஆண்டில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவேளையில், இந்திய அமைதிப்படையினர் நாட்டின் வடக்குகிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் கொலை செய்கிறார்கள். தமிழ்ப் பெண்களை வல்லுறவுக்கு உட்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் வடக்குகிழக்குப் பகுதிகளில் இந்தியப்பிரஜைகளை உருவாக்கத்திட்டமிட்டுச் செயற்படுகிறார்கள் போலும் என்றும், தென்பகுதி இளைஞர்கள் அமைதிப்படையின் செயற்பாடுகளுக்கு எதிராகத் திரண்டெழும் போது அவர்கள் மீது அரச படைகள் கடும் தாக்குதல்களை மேற்கொள்கின்றன எனவும் இந்திய அமைதிப் படையைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

> இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பொருத்தமான வழி எதுவென இரண்டு தசாப்த காலத்துக்கு முன்னரே ராஜீவ் காந்தி உணர்ந்திருந்தார் என்றும் கூறிய மகிந்த, இந்திய அமைதிப் படையைத் திருப்பி அனுப்புவதென்ற பிரேமதாசாவின் முடிவு தவறானது என்றும் கூறியிருந்தார்.

அன்று அந்த விதம் இந்திய அமைதிப் படையைக் கடுமையாக விமர்சித்த மகிந்த, தாம் ஜனாதிபதியாக பதவி ஏற்றதும், அமைதிப்படை ஆற்றிய சேவையைப் பாராட்டியது மட்டுமன்றி, விடுதலைப்புலிகளுடனானமோதல்களில் உயிரிழந்த அமைதிப்படை வீரர்களை நினைவுகூரும் வகையில் நினைவுத்தூபி ஒன்றையும் நிறுவிவைத்தார். நாட்டுப் பற்றாளர் தரப்பைச் சேர்ந்த விமல் வீரவன்ச தரப்பினர் கூட அதனை ஏற்றுக் கொண்டனர். இன்று நல்லாட்சி அரசு இந்தியாவுடன் மேற்கொள்ள முயலும் 'எட்கா' ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மகிந்த தரப் பினர், எதிர்காலத்தில் ஒரு நாள் 'எட்கா' ஒப்பந்தம் சிறப்பான தொன்றென பாராட்டுப் பத்திரம் வழங்கவும் கூடும்.

வடபகுதிப் போரை நாட்டின் புற்றுநோய் எனக் கருதிய ஜே.ஆர், அதனை இந்தியாவே உருவாக்கி வைத்ததெனவும், அதனை முடிவுக்குக் கொண்டு வர இந்தியா அனுமதிக்காது என்பதையும் தெளிவாக உணர்ந்திருந்தார். வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன் போர் நடவடிக்கையில் இந்தியா, இலங்கை அரசை மீறி விமானம் மூலம் வட பகுதி மக்களுக்கு உணவுப்பொருள் விநியோகித்ததன் மூலம் ஜே.ஆர் அதனை உறுதிப்படுத்திக் கொண்டார். எவ்வாறாவது இந்தியாவின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்கும்சூட்சுமத்திட்டத்துடனேயே ஜே.ஆர் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை மேற்கொண்டார். அந்த வேளையில், சுதந்திரக் கட்சியினரும், ஜே.வி.பியினரும் ஜே.ஆரின் அந்த சூட்சுமத் திட்டம் குறித்து நன்கு புரிந்து கொண்டிருந்தனர். இந்தியாவின் உதவியுடன் ஜே.ஆர் விடுதலைப் புலிகளை அழித்தொழித்தால், ஜே.ஆரிடம் இருந்து ஆட்சி அதிகாரத்தைத் தம்மால் ஒரு போதுமே கைப்பற்ற இயலாது போய்விடுமென அவர்கள் அஞ்சினர். அதனாலேயே மாகாண சபைகள் முறைமை நாட்டை பிளவுபடுத்தக் காரணம் எனப் பரப்புரை செய்து சிங்கள மக்களை 1988ஆம் ஆண்டின் மாகாணசபைத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு வற்புறுத்தியதோடு, தாமும் அதில் போட்டியிடாது புறக்கணித்தனர். அன்று மாகாணசபைத் தேர்தலைப் புறக்கணித்த சுதந்திரக் கட்சியினர் வெட்கம்கெட்டவகையில் 1993ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டனர். 1999ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தலில் ஜே.வி.பியும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> மாகாண சபைத் தேர்தலை புறக்கணித்த சுதந்திரக் கட்சியினர் வெட்கம் கெட்ட வகையில் 1993ஆம் ஆண்டின் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டனர்.

இவ்விதம் வெட்கம் ரோசம் இன்றிப் போட்டியிட்டது. ஆனால், 1993ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலமே சுதந்திரக் கட்சியும் சந்திரிகாவும் இலங்கை அரசியல் அரங்கில் தமது இருப்பை நிலைப்படுத்த முடிந்தது. அதே போன்று, தாம் விமல் வீரவன்ச உள்ளிட்ட ஜே.வி.பியினரும் அரசியல் அரங்கில் பிரபல்யம் பெற 1999ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தலிலே வழிவகுத்துக் கொடுத்தது.

1987 இலங்கை–இந்திய ஒப்பந்தம் மூலமான இந்தியாவின் தலையீட்டைக் கடுமையாக எதிர்த்த மகிந்த மற்றும் விமல் வீரவன்ச தரப்பினர், 2005ஆம் ஆண்டில் நோர்வேயின் மத்தியஸ்தத்தை நிறுத்திக் கொண்டு இந்தியாவின் மத்தியஸ்தத் துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை முன்னெடுக்கவேண்டும் என்றும் அதற்காக மக்கள் ஆணையைக் கோரியும் நின்றனர்.

2010ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் , மகிந்த சிந்தனை விஞ்ஞாபனத்தில் இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தம் என்ற விடயமும் திட்டமிட்டே உள்ளடக்கப்பட்டிருந்தது.

2008ஆம் ஆண்டில் மகிந்த அரசு இந்தியாவுடன் 'சீபா' வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளும் நோக்கில் இந்திய அரசுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தது. அதற்கான நகல் ஒப்பந்தத்தைத் தயாரித்தது மட்டுமல்லாமல், பேச்சுக்களிலும் பங்கெடுத்தவர் அப்போதைய வர்த்தக அமைச்சரான பேரா சிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆவார். அந்த வேளையில் சீபா ஒப்பந்தத்தால் இலங்கைக்குக் கிட்டவுள்ள நன்மைகள் குறித்து பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பெரிதுபடுத்தி விமர்சித்திருந்தார்.

அன்று சீபா ஒப்பந்தம் குறித்து புகழ்ந்து தள்ளிய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இன்று, சீபா ஒப்பந்தத்தை விட பல்வேறு நன்மைகளை இலங்கைக்கு ஏற்படுத்த வல்ல எட்கா ஒப்பந்தம் இலங்கைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாய் அமையும். அது இந்தியாவுக்கே இலாபகரமானது என விமர்சித்துள்ளார்.

எட்கா ஒப்பந்தத்துக்கு ஜீ.எல்.பீரிஸ் போன்று, கூட்டு எதிரணியினரும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்குக் காரணம் அரசியல் வைராக்கியமே என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அன்று சீபா ஒப்பந்தத் துக்கு ஆதரவாகக் கையுயர்த்திய தரப்பினரே இன்று எட்கா ஒப்பந்தத்துக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். தாம் மட்டுமல்லாது தொழில்துறை சார் தரப்பினரையும் அவர்கள் ஒப்பந்தத்துக்கு எதிராக உசுப்பேத்தி வருகின்றனர்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் 'லங்கா வைத்தியசாலை' முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவின் நிர்வாகத்தின் கீழ் இயங்கியது. அங்கு சேவையாற்றியவர்களில் பெரும்பாலோர் இந்திய வைத்தியர்களும் தாதிமாருமே. இன்று எட்கா ஒப்பந்த யோசனைக்கு எதிராகக் குரலெழுப்பும் வைத்தியர் சங்கம் அன்று எங்கே போயிருந்தது?

அது மட்டுமன்றி மகிந்த அரசு சீனாவு டன் ஆரம்பித்த ஹம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள விமான நிலையம் போன்ற திட்டங்களில் பணியாற்ற வந்தவர்கள் சீனப் பொறியியலாளர்களும் தொழிலாளிகளுமே. அந்தப் பணியை மேற்கொள்ளும் ஆளணி உரிமை, ஒப்பந்தம் மூலம் சீனாவுக்கே வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இன்று எட்கா ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து கூச்சலிடும் உள்ளூர்ப் பொறியியலாளர் தரப்பினர் அன்று எங்கே போயிருந்தனர். இதிலிருந்து எட்கா ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு வெளியிடும் தரப்பினரை பின்னிருந்து தூண்டுவது ராஜபக்ச அவதாரமே என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

மொத்தத்தில் 1987 இலங்கைஇந்திய ஒப்பந்தத்துக்கு எதிராக முதலில் 'தாய் நிலம், இரண்டாவதே தொழில்' என எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட தரப்பினரது நாடகத்தின் இரண்டாவது கட்டமே இந்த எட்கா ஒப்பந்த எதிர்ப்பு. இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புக் காட்டி ஜே.ஆரை வீட்டுக்கு அனுப்பியமை போன்று, ஜே.ஆரின் மருமகன் ரணிலுக்கு எதிராக, எட்கா ஒப்பந்தத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து ரணிலை வீட்டுக்கு அனுப்ப முடியும் என இந்தத் தரப்பினர் எண்ணுகின்றனர் போலும்,

அவர்களால் அதை நிறைவேற்ற இயலுமா என்பது குறித்து தற்போது எதுவும் எதிர்வு கூறிட இயலாது.

## தனியார் துறை ஊழியர்களையும் அரசு கவனிக்க வேண்டும்

அரசு அறிவித்த தனியார் துறை ஊழியர்களுக்கான சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படாததால் அந்தத் துறையைச் சேர்ந்த ஊழியர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தனியார் துறையைப் பொறுத்தவரையில் ஒரு தொகுதியினர் அதிகரித்த வேதனத்தைப் பெற்று வருகின்றனர். ஆனால் அநேகமானவர்கள் மிகவும் குறைந்த வேதனத்தையே பெற முடிகின்றது. குறிப்பாகச் சிறிய நிறுவனங்களில் பணிபுரிகின்ற ஊழியர்களின் நிலை மிகவும் மோசமானது. இவர்களில் பலர் அதிக நேரம் பணியாற்றி வருவதோடு குறைந்த ஊதியத்தையும் பெற்று வருகின்றனர்.

சில தொழில் தருநர்கள் தொழில் திணைக்களத்தின் வழிகாட்டுதல்களைப் புறக்கணித்துவிட்டு தமது இஷ்டம் போன்று நடந்து வருவதால் அங்கு பணியாற்றி வருகின்றவர்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

அரசு தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் ஆகக் குறைந்தது 10 ஆயிரம் ரூபாவாக இருக்கவேண்டுமெனவும் இதற்கு மேலதிகமாக இரண்டாயிரத்து 500 ரூபா சம்பள உயர்வுவழங்கப்பட வேண்டுமெனவும் அறிந்த போதிலும் அது நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லை. மேலும் ஊழியர்கள் தமது முதுமைக் காலத்தில் வருமானம் இன்றிப் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கும் ஏதோ ஒரு வழியில் ஓய்வூதியம் வழங்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். மேலும் இவர்களுக்கான தொழில் பாதுகாப்புக்கு வழிவகை செய்தல் வேண்டும். தனியார் முதலாளிகள் சிலர் தொழிலாளர்களைச் சுரண்டுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவர்கள் இலாபம் ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாகவும் கொண்டுள்ளனர்.

தனியார் துறை ஊழியர்களும் இந்த நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும் பங்கு வகிக்கின்றனர். இவர்களுக்கும் குடும்பம், பிள்ளைகள், உறவுகள் இருக்கின்றன.

ஆகவே அரச துறையைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்காது தனியார் துறை ஊழியர்களையும் கவனிக்க வேண்டும்.

த.மனோகரன், ஈவினை

## இன்னும் முற்றுப்பெறாத வேலையற்ற பட்டதாரிகளின் வேலைதேடும் போராட்டம்

வேலையில்லாத பட்டதாரிகள் தமக்கு வேலை கிடைக்கும் வரை தொடர் போராட்டங்களில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

இவர்களின் கோரிக்கை நியாயமானதுதான். எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் படித்துப் பட்டம் பெற்ற பின்னர் வேலை எதுவும் இல்லாமல் இருப்பதென்பது கவலை தருகின்ற விடயம் தான்.

முன்பெல்லாம் எமது நாட்டில் ஜீ.சி.ஈ.சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு அரச உத்தியோகம் பதிவு செய்யப்பட்டுவிடும். போட்டிப் பரீட்சைகள் ஒழுங்காக அன்று இடம்பெற்று நியமனங்களும் வழங்கப்பட்டன. ஆனால் அந்த நிலை இன்று காணப்படவில்லை. பட்டதாரிகளே வேலை கிடைக்காத நிலையில் போராட வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

முன்னர் இந்தியாவில் இந்த நிலை காணப்பட்டது. எம்.ஏ படித்தவர்கள் கூட தேநீர்க் கடைகளில் பணியாற்றிய அவலமும் அங்கு நிகழ்ந்துள்ளது. மேலும் கல்வி கற்பதற்குரிய வாய்ப்பு அங்கு அதிகமாக இருந்ததால் பெருமளவு பட்டதாரிகளும் அங்கு உருவாகினர்.


இன்று இலங்கையிலும் அந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு எமது நாட்டின் கல்விக் கொள்கையே பிரதானமான காரணமாகும். நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் வகையிலான கல்விக் கொள்கை இன்னமும் இங்கு உருவாக்கப்படவில்லை. எந்தவிதமான நோக்கமும் இன்றி வெறுமனே பட்டங்களை வழங்குகின்ற பணிகளிலே இங்குள்ள உயர்கல்வி நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. மாணவர்களும் எந்த விதமான குறிக்கோளும் இன்றி இலகு வான பாடநெறிகளைத் தெரிவு செய்து பட்டங்களைப் பெறுவதிலேயே குறிப்பாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே பெருமளவு பட்டதாரிகள் தொழில் வாய்ப்பின்றி இருக்கின்றனர்.

ஆகவே உயர் கல்வி நிறுவனங்கள் வெறுமனே பட்டங்களை வழங்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்படாமல் பயனுள்ள வகையிலான பட்டதாரிகளை உருவாக்க வேண்டும். இவ்வாறானதொரு நிலை உருவாகுமானால் பட்டதாரிகள் போராட்டங்களில் ஈடுபட வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காது.

பா.தர்மிலன்
கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைத் தாக்குதலில் ஆப்கானில் 19 பேர் சாவு



குண்டூஸ், பெப்.29
ஆப்கானிஸ்தானின் கிழக்கு மாகாணத்தில் தற்கொலைப் படைத் தாக்குதல் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டதுடன், 40 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.
மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலை தாக்குதல்தாரி அசாதபாத் சந்தையில் குண்டு வெடிப்பை நிகழ்த்தினார் என மாநில ஆளுநரின் ஊடகப் பேச்சாளர் கானி மொசாமன் தெரிவித்தார்.
இதுவரை எந்தப் போராளிக் குழுவினரும் தாக்குதலுக்குப் பொறுப்பேற்கவில்லை. ஆனால் கடந்த 14 வருடங்களாகத் தலிபான்கள் பல தாக்குதல்களை நடத்தியிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது.
எதிர்வரும் நாள்களில் தலிபான்களுடன் பேச்சு இடம்பெறவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இந்தத் தாக்குதல் தலிபான்களுக்கு எதிராகச் செயற்பட்ட ஹஜி-கான்-ஜனைக் குறிவைத்து இடம்பெற்றுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தக் குண்டுவெடிப்பில் அவர் உயிரிழந்துள்ளார்.
இதனிடையே மற்றொரு தாக்குதல் காபூல் நகரில், பாதுகாப்பு அமைச்சுக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இந்தத்தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டதுடன், 13 பேர் காயமடைந்தனர். கிழக்குப் பகுதியில் தாக்குதல் இடம்பெற்று அரை மணி நேரங்கள் கழித்து இந்த தாக்கதல் இடம்பெற்றுள்ளது. தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானோர் பொது மக்கள் என பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.
இந்தத் தாக்குதலுக்குத் தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். (ரி4)



அமெரிக்காவில் லாறன் வசர் எனும் பெண், காலின்றி மொடலின் துறையில் சாதித்து வருகிறார். 28 வயதாகும் இந்த மொடல் அழகி, ரொக்சிக் ஷொக் எனும் நோயினால் அவரின் ஒரு காலை இழந்தார். 2012 ஆம் ஆண்டு மீண்டும் மொடலிங் துறையில் நுழைந்து வெற்றிகரமாக 4 வருடங்களைக் கடந்துள்ளார். அவரது இந்த முயற்சி ஆரம்பத்தில் விமர்சிக்கப்பட்டிருந்தாலும், அவரது துணிவான செயற்பாட்டின் மூலம் அனைவரையும் கவர்ந்துள்ளார். நியூயோர்க்கில் இடம்பெற்ற நீச்சலுடை ஆடைக் காட்சியில் கலந்து கொண்டு தன்னம்பிக்கையை வெளிப்படுத்தி, பலரின் பாராட்டுக்களையும் பெற்றார். அவரது இந்த ஆற்றல் குறித்த நோயினால் பாதிப்படைந்து அங்கவீனமுற்றவர்களுக்கு மிகவும் முன்மாதிரியாக அமைந்துள்ளது. (த-ரி4)

# ஆளில்லா வி
# மேற்குலகை
# ஐ.எஸ். இரக

## பிரிட்டன் உளவுப் பிரி

பரிஸ், பெப்.29
அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் நடைபெற இருக்கும் விளையாட்டு நிகழ்வுகளில் ஆளில்லா விமானம் மூலம் குண்டுவெடிப்புக்களை நடத்த ஐ.எஸ் திட்டமிட்டிருப்பதாகப் பிரிட்டன் உளவுப் பிரிவினர் தகவல்களை வெளியிட்டுள்ளனர்.
மக்கள் அதிகமாகக் கூடும் விளையாட்டு அரங்கு, கேளிக்கை நிகழ்ச்சிகள் என்பவற்றில் குண்டுவெடிப்புக்களை நிகழ்த்துவதன் மூலம் உயிரிழப்புக்களை ஏற்படுத்த ஐ.எஸ் அமைப்பினர் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தாக்குதல்களை ஐ.எஸ். அமைப்பினரைச் சார்ந்த சிலீப்பர் செல்ஸ் மூலம் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
ஏற்கனவே சிரியா, ஈராக்கில் ஆளில்லா விமானங்கள் மூலம் ஐ.எஸ். அமைப்பு தாக்குதல் நடத்தியுள்ளது. எனவே மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு பாதுகாப்புப் பணியக பிரதான நிறைவேற்று அதிகாரி கிறிஸ் அபோட் தெரிவித்துள்ளார்.
மேலும், மேற்குலக நாடுகள் அவர்களின் இலக்காக இருக்கின்றன. இவர்களின் பரப்புரை வீடியோக்களில் ஆளில்லா விமானம் மூலம் இடம்பெற்ற தாக்குதல்களின் வீடியோ பதிவுகளையும் காணக்கூடியதாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.
மேலும், சமிக்ஞைப் பாதுகாப்புகளிலும் ஆளில்லா விமானங்களின் அத்துமீறல்களை உணர முடியவில்லை, அதனை இயக்குபவராலேயே அதன் அமைவிடத்தைத் தீர்மானிக்க முடியும் என அவர் தெரிவித்தார். அத்துடன், இவ்வாறான குண்டு வெடிப்பின் மூலம் ஒரு நகரத்தையோ, விளையாட்டு அரங்கையோ முற்றாகச் சேதப்படுத்த முடியும். சிறிய ரக விமானம் 10 கிலோ வெடிபொருளையோ, தற்கொலைப் படை அணிகலனையோ சுமக்கக் கூடியது. இவ்வாறான தாக்கதல்கள் துல்லியமானதுடன் சக்திவாய்ந்ததாகும்.

## குறைந்து வருகின்றது
## ஜப்பான் சனத்தொகை

டோக்கியோ, பெப்.29
ஜப்பானின் சனத்தொகை வீதம் குறைந்து வருவதாக அந்நாட்டு புள்ளிவிவரவிய
தரவொன்று தெரிவித்துள்ளது.
அங்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிற
அண்மையில், 2010- 2015 ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெ
றுள்ளது. அதில் முன்பு இருந்ததை விட 10 லட்சம் மக்கள் தொகை குறைந்து காண
பட்டுள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டில் ஜப்பானின் மக்கள் தொகை 12 கோடியே
லட்சமாக இருந்துள்ளது.
தற்போதைய கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 12 கோடியே 71 லட்சமாக குறை
துள்ளது. அதாவது முன்னைய கணக்கெடுப்பை விட 9 லட்சத்து 47 ஆயிரம் பேர் குற
வாகப் பதிவாகியுள்ளது.
இந்த தொகை மொத்த சனத்தொகையில் 0.7 சதவீதமாகும். இந்தத் தகவல் ஜப்பான
குப் பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் அளித்துள்ளதாகச் செய்திகள் மேலு
குறிப்பிட்டுள்ளன.


## உலகில் செல்வந்தர்களை
## அதிகம் கொண்டது சீனா

பீஜிங், பெப்.29
உலக அளவில் செல்வந்தர்களைக் கொண்ட நகரமாக பீஜிங் அறிவிக்கப்பட்டுள்ளது. சீனாவில் இருந்து வெளிவரும் வர்த்தக சஞ்சிகையினால் நடத்தப்பட்ட குறன் ஆய்வில் தெரியவந்துள்ளது. உலக அளவில் பில்லியனர்கள் 100 பேரைக் கொண்ட நகராகவும், நியூயோர்க் நகரம் 95 பேரைக் கொண்டுள்ளது எனவும் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பீஜிங்கில் 32 பேர் புதிதாக உலக பில்லியனர்களாக உருவாகியுள்ளனர். அதேவேளை, நியூயோர்க்கில் 4 பேரினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
மொஸ்கோ நகர் 66 பில்லியனர்களுடன் மூன்றாவது இடத்தையும் வகித்துள்ளது.
பொருளாதாரச் சரிவினால் செல்வந்
பட்டியலில் வீழ்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்
ளது. இந்த ஆய்வு பல்வேறு தரப்பட்ட அ
படையில் செய்யப்பட்டுள்ளது.
கடந்த வருடம் சீனா உலகச் செல்வந்தர்
அதிகம் வசிக்கும் நாடு என அறிவிக்கப்ப
ருந்தது. தற்போது வெளியிடப்பட்ட தகவல்
படி 568 பில்லியனர்கள் அங்கு வ
கின்றனர். கடந்த வருட எண்ணிக்கையு
ஒப்பிடுகைளில் 90 பேர் இவ்வருடம்
கரித்துள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்
கையில் 1.4 ரில்லியன் நிகர இலாப அ
ரிப்பு ஏற்பட்டுள்ளது. உலக செல்வந்
களில் 40 சதவீதத்துக்கும் அதிகமானோ
சீனர்களாவர். அமெரிக்காவில் 535
லியனர்கள் வசிக்கின்றனர் என இந்த அ
வில் தகவல் பகிரப்பட்டுள்ளது.
(த-ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத்தால்
# தாக்குவதற்கு
# கசியத் திட்டம்

## ரிவினர் தகவல்



இந்தத் தாக்குதலைத் தடுப்பதற்கு உளவுப் பிரிவினர் கடும் முயற்சி எடுத்து வருகின்றனர். பொதுமக்களில், இவ்வாறான ஆளில்லா விமானம் வைத்திருப்பவர்களை இனம் கண்டு அவர்களிடம் இருந்து அவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

(த-ரி4)



# வறட்சியின் கோரப் பிடிக்குள் சுவாஸிலாந்தில் 3 லட்சம் பேர்

ஜெனிவா, பெப்.29

தென்னாபிரிக்க நாடான சுவாஸிலாந்தில் எல் நினோ தாக்கத்தின் காரணமாக நிலவும் கடும் வறட்சியால், ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகத்தை மேற்கோள்காட்டி, ஐ.நா. சபையின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் கடந்த வெள்ளிக்கிழமை கருத்து தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில்,

சுவாஸிலாந்தில் நிலவும் கடும் வறட்சி காலநிலை காரணமாக, அந்நாட்டுக் குடித்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கை உள்ளடக்கிய குறைந்தது 3 இலட்சம் மக்கள் அவசரமான மனிதாபிமான உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள் எனக் குறிப்பிட்டார்.


மேலும், அங்கு நிலவும் மோசமான வறட்சி காலநிலையால் நீர் மூலம் பரவும் தொற்று நோய்கள் மற்றும் போசாக்கு குறைபாடு போன்றவை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. அங்கு கடுமையான நீர்ப் பற்றாக்குறை மற்றும் சுகாதார நெருக்கடிகளையும் மக்கள் எதிர்கொண்டுள்ளனர் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதேவேளை– சுவாஸிலாந்தில் தற்போது எதிர்நோக்கப்படும் மனிதாபிமான நெருக்கடிகளை குறைத்தல் மற்றும் உயிரிழப்பை தடுத்தல் ஆகியவற்றுக்காக 80.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி தேவைப்படுவதாக சுவாஸிலாந்து அரசு குறிப்பிட்டுள்ளது. (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைபோயிட்டுக் காய்ச்சலும் அதிலிருந்து எம்மைக் காத்தலும்



**கே.எஸ்.சிவஞானராஜா**


உலகையே அச்சுறுத்தும் அணுகுண்டுகள் போல நோய்களும் எம்மை விட்ட பாடில்லை. நாமும் அதை விட்டபாடில்லை. நோய்களால் அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆதலால் அணுகுண்டுக்கும், நோய்களுக்கும் இடமளிக்காத வண்ணம் மனித இனம் பாதுகாக்கப்படவேண்டும். அதையதைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகளும், அரசுகளும்தான் பொறுப்பென்ற நிலையில்லாமல், நாமும் அவற்றில் பொறுப்புக் கூற உரித்துடையோம்.

*மனிதனை மனிதன் முடிப்பது அணுகுண்டு*
*மனிதனைக் கிருமிகள் முடிப்பது நோய்க்குண்டு*

அணுகுண்டையும் செயலிழக்கச் செய்யலாம். நோய்களையும் சுத்தமாக வாழ்வதன் மூலம் ஒழிக்கலாம். இந்த நிலையில் தைபோயிட்டுக் காய்ச்சலை நாம் முற்றாகவே இல்லாதொழிக்கலாம். இந்த நோய்க்கு ஸால்மொனல்லா தைபி என்ற பக்றீரியாவே காரணம் எனக் கூறப்படுகிறது. உயிராபத்தைத் தரவல்ல இந்த நோயை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் இலங்கை வைத்திருந்தபோதும் முழுமையாக அந்த நோயிலிருந்து விடுபட முடியாமலுள்ளது. அது தொடர்பாக நாம் ஆற்ற வேண்டிய பங்கும் பாதுகாப்பும் தொடர்பில் சற்று விழிப்படைவோம்.

**அறிகுறிகள்**

தொடர்காய்ச்சல், வாந்திபேதி, இரத்தம் வெளியேறுதல், இதயத்துடிப்புக் குறைதல், உடம்பு அசதி, வயிற்று வலி, பசி



யின்மை, களைப்பு ஒவ்வாமை, கல்லீரல் வீக்கம், மண்ணீரல் வீக்கம், வயிறு வீக்கம், நாடித்துடிப்புக் குறைவடைதல், சிவப்பு நிறத் தடிப்புக்கள், உணவுக் குழாயில் இரத்தக்கசிவு, நடுக்கம் , மயக்கம், உலாஞ்சல், நரம்பு மண்டலப்பாதிப்பு, நிணநீர் மண்டலப் பாதிப்பு ஆகிய அறிகுறி அடையாங்களைக் கண்கூடாகப் பார்க்கலாம். அல்லது தென்படும்.

**காரணிகள்**

சுத்தமின்மையே பிரதான காரணமாக அவதானிக்கப்படுகிறது. மலம், சிறுநீர், பக்றீரியா கலந்த தண்ணீர், ஈக்கள் மொய்த்த உணவுகள், பைக்கெற் திண்பண்டங்கள், சுகாதாரம் பேணாத ஹோட்டல் உணவுகள், மலத் தொற்றுக்குள்ளான ஐஸ்கிறீம் உணவுகள், பொது மலசல கூடச் செறிவுகள், நெருக்கமாக அமைக்கப்பட்ட மலசலகூடங்கள், கிணறு மலசலகூடங்களின் நெருக்கம், மலசலம் கழித்த பின்னர் கைகள் கழுவாது உணவுண்ணுதல், மலசல கூடங்கள் துப்புரவு செய்யப்படாமை, மல சல கூடங்களுக்குத் தொற்று நீக்கிகள் பாவிக்கப்படாமை, சமையலறையும், மலசலகூடமும் மிக நெருக்கமாக இருத்தல்,சிறுவர்கள் குழந்தைகளின் பம்பஸ் கண்ட கண்ட இடங்களில் வீசுதல், இடப்பெயர்வில் சேர்ந்துவிடும் குப்பைகள், கூளங்கள்,கழிவுகள், திறந்த தண்ணீர்த் தொட்டிகள், திறந்த மலக்குழிகள், கசியும் மலத் தாங்கிகள் கொதிக்க வைக்காத குடி தண்ணீர், பொதுவிடத்து விருந்துகள், அங்கீகரிக்கப்படாத பானங்கள் என பலதும் பத்துமான காரணங்கள் இந்த நோய்க்கு அடிப்படையான காரணங்களாக அமைகின்றன. குறிப்பாக மலசல கூடங்கள் கிணற்றுக்கருகிலே அனுமதியின்றித் தோண்டப்படுகின்றன. இதன் காரணமாகக் கிணற்று நீரில் மலக் கசிவு, மலத்தொற்று ஏற்படுகிறது. ஆகவே நாமே தான் இந்த நோய் விடயத்தில் மிக அவதானமாகச் செயற்பட வேண்டியவர்களாக இருக்கவேண்டும். இந்த நோய் கண்டவர்கள் குறையாத காய்ச்சல் தொடரும்போது வைத்தியரை அணுகியே ஆகவேண்டும். கவனிக்காத பட்சத்தில் இதயம், சிறுநீரகம், மூளை, குடல், காதுகள், நரம்பு மண்டலம் பாதிப்படைந்தே தீரும். நாடித்துடிப்பும் குறையலாம். கட்டுப்படுத்தாதபோது அருமையாகச் சாவுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

**தடுத்தல்**

உணவருந்த முன்னரும் சமைப்பதற்கு முன்னரும், மலசலம் கழித்த பின்னரும், விருந்துகள் பரிமாற முன்னரும், அன்னதான நிகழ்வுகளுக்கு முன்னரும், பிரசாதம் வழங்க முன்னரும், பயணங்களில் சாப்பிட முன்னரும், கண்டிப்பாக ஹோட்டல்களில் சாப்பிட முன்னரும் சவர்க்கார மிட்டுக் கைகளை வடிவாகத் துப்புரவு செய்வதும் கழுவுவதுமே இதற்குரிய சிறந்த தடுப்பு வழியாகும். மேலும் உள்ளுறுப்புகளை ஒரு நாளில் குறைந்தது ஐந்து தடவையாவது பிசிறிக்கழுவுதல் வேண்டும். தயவு செய்து இதில் கவனம் எடுங்கள். மாணவர்கள் பாடு பரிதாபமே!

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்



## மேடம்

எதிலும் முதலிடத்தைப் பிடிக்கவேண்டுமென்று நினைப்பவர்களே! அப்படிப்பட்ட உங்களுக்கு 08.01.2016 முதல் 25.07.2017 வரை உள்ள காலகட்டத்தில் இந்த ராகுவும், கேதுவும் என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

**இராகுவின் பலன்கள்:**

இதுவரை உங்கள் ராசிக்கு ஆறாம் வீட்டில் அமர்ந்து கொண்டு புகழையும், கௌரவத்தையும், ஓரளவு பணப்புழக்கத்தையும் தந்தாலும் மறுபுறம் கடன் பிரச்சினைகள், வீண் பகை என்றெல்லாம் கலங்கடிக்கவும் செய்த ராகு பகவான் இப்போது உங்கள் ராசிக்கு 5 ஆம் வீட்டில் அடியெடுத்து வைக்கிறார். ஐந்தாம் இடம் ராகுவுக்கு உகந்த இடமல்ல. என்றாலும் உங்கள் யோகாதிபதி சூரியனின் வீட்டில் அமர்வதால் கெடுபலன்களைக் குறைத்து நல்லதையே செய்வார். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பங்கள் நீங்கி இனி சந்தோசம் நிலைக்கும். கணவன்–மனைவிக்குள் நிலவி வந்த பனிப்போர் விலகும். அன்யோன்னியம் அதிகரிக்கும்.


புத்தி ஸ்தானமான 5 ஆம் வீட்டில் ராகு அமர்வதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். மற்றவர்களை எப்போதுமே சந்தேகக் கண்ணுடன் பார்க்காதீர்கள். பிள்ளைகள் இன்னும் கொஞ்சம் பொறுப்பாக நடந்துக் கொண்டால் நலமாக இருக்குமே என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள். அவ்வப்போது குறைகளைக் கண்டுபிடித்து வருத்தமடைவீர்கள். நிறைகளையும் பாராட்டத் தயங்காதீர்கள்.

உயர்கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு சிலர் பிள்ளைகளைப் பிரியவேண்டிய சூழ்நிலை உருவாகும். அவர்கள் உங்களுக்கு எதிரானவர்களிடம் சென்று சேராமல் பார்த்துக் கொள்ளுங்கள். பூர்வீக சொத்துப் பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்கப் பாருங்கள். நீதி மன்றம் சென்று நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்காதீர்கள். மகனின் நட்பு வட்டத்தைக் கண்காணிப்பது நல்லது. அவர் தீய பழக்க வழக்கங்களில் சிக்கிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக செல்நெறியில் முதன்மையான ஒப்பீட்டுக் கல்வி



கலாநிதி
பா.தனபாலன்

கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் ஒப்பீட்டுக் கல்வி ஒருபாடமாகப் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது. கல்வியே ஒரு நாட்டின் அபிவிருத்தியைத் தீர்மானிக்கும் முதன்மைக் காரணியாகும்.

இந்த முதன்மைக்காரணியை விருத்தியடையச் செய்ய பல்வேறு செயன் முறைகள் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நடைமுறைப்படுத்தல் கொள்கைச் சட்டங்களை வெற்றிகரமானவையாக்க ஒப்பீட்டுக்கல்வி வழிகாட்டி நிற்கின்றது. வரலாற்று ரீதியாக, சமய பண்பாட்டு ரீதியாக, பொருளாதார அரசியல் ரீதியாக கல்விச் செயலாற்று கைகளின் தன்மைகளை ஒப்பீடு செய்து, பகுத்தாராய்ந்து கல்வியின் பயன்பாடு, தன்மையை உணர்த்தும் செயன் முறையாக ஒப்பீட்டுக்கல்வி அமைந் துள்ளது. இது குறித்த நாடு அல்லது நாடுகள் தொடர்பாக உலகளாவிய ரீதியில் ஒப்பீடுகளைக் கொண்டிருக்கும் கல்விக் கொள்கைகள், கட்டமைப்புக்கள், சட்டங்கள், நடைமுறைகள், அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ள விதம், அண்மைக்கால அபிவிருத்திகள், சாதனைகள், சவால்கள், பிரச்சினைகள் தொடர்பான எண்ணக்கருக்களைக் கொண்டிருக்கும்.

### ஒப்பீட்டுக்கல்வியின் நோக்கங்கள்

1. நாட்டின் கல்விமுறை செயலாற்றுகை தொடர்பான (வரலாறு, அரசியல், பொருளியல், சமூகவியல்) ஆய்வுஒப்பீட்டு ரீதியான சரியான விளக்கத்தைப் பெறல்.
2. வெளிநாட்டுக்கல்வி முறைமைகள் பற்றி சரியான ஒப்பீட்டு ரீதியான ஆய்வுகளினூடாக எமது சொந்த நாட்டுக் கல்வி முறைமையை விளங்கிக் கொள்ளல். அதன் பிழைகளைத் திருத்திக் கொள்ளல்.
3. புள்ளிவிவர ரீதியாக கல்விக்கான மொத்தத் தேசிய எதிர்பார்ப்புக்கள், செலவினம், பாடசாலை பௌதிக வளங்கள், மாணவர்தேர்வு, அடைவுகள் என்பவற்றை தேசிய சர்வதேச ரீதியில் ஒப்பீடு செய்து அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்.
4. கல்வி நடைமுறைகளை ஒப்புநோக்கி ஆய்வு செய்து பிரச்சினைகளை இனம் கண்டு தீர்வுகளுக்கான முடிவுகளை நடைமுறைப்படுத்தல்.
5. ஏனைய நாடுகளின் கல்வி முறைகள் அதனால் ஏற்பட்ட வெற்றிகள் தோல்விகள், அது எமது நாட்டுக்கு எவ்வாறான படிப்பினைகளைத் தருகின்றன என்பவை தொடர்பான அறிவினைப் பெறல்.
6. வெவ்வேறுபட்ட கல்விமுறைகள் உருவாகப் பின்புலமாக அமையும் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு, வரலாற்றுக் காரணிகள் பற்றி அறிதல்.
7. ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகளினூடாக உலகளாவிய ரீதியில் பயன்படுத்தக் கூடிய, பொதுமைப்படுத்தக்கூடிய கொள்கைகளை உருவாக்கல்.
8. ஒரு நாட்டுக்குள்ளே இருக்கும் பிரதேசங்களுக்கிடையேயான கல்வி விருத்தி வேறுபாடுகளை ஒப்பீட்டு ரீதியாக ஆராய்ந்து குறைபாடுகளை இனம் கண்டு தீர்வு காணல்.
9. உலகநாடுகளின் கல்விமுறைகள் குறித்த பெரியதகவல்களஞ்சியம் ஒன்றைப்பெற்றுத் துறைசார் நிபுணத்துவ அறிவைப் பெறல்.
10. தற்காலக் கல்வி முறைகள் கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் இணைக்கின்றன என்ற வகையில் ஒப்பீடு செய்து அபிவிருத்தியை விரைவாக்க ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகள் உதவுகின்றன.

உலகளாவிய ரீதியில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜப்பான், இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, தன்சானியா, தென் கொரியா, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளின் கல்வி வளர்ச்சி அரசியல், பொருளாதாரத் துறையில் விருத்தி சார்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. பல இன சமுதாயங்கள் வாழும் அமெரிக்க நாடு, தன்மயமாக்கல் கல்விக் கொள்கை கள், அமெரிக்க மயமாக்கம் என்பவற்றினூடாக தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட ஒரு நாடாகும். ஜோன் டூயி யின் பயன்பாட்டுவாத கல்வித் தத்துவத்தின் மீது தயாரிக்கப்பட்ட உற்பத்தி அடிப்படையிலான கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்ட நாடாகும். நாட்டின் அரசியல் யாப்பின்மூலம் கல்விப் பொறுப்புக்கள் மாநில இராச்சியங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதுடன், மத்திய அரசு நிதி உதவியை மட்டும் வழங்குகின்றது. அத்துடன் எந்தவித தலையீடும் இன்றி மாநில அரசுகளுக்கு தமது விருப்பப்படியும், தமது இயல்புக்கு ஏற்பவும் கல்வியைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. ஒரு மிகச்சிறிய அலகுகூடத் தமது பிரதேசத்தினுள் கல்வி வசதிகளை ஒழுங்கு செய்து கொள்கின்றது. ஜனநாயகக் கருத்துக்களின் மீது ஒற்றுமைமிக்க பொருத்தமான அரசியல் நடவடிக்கைகளில் பங்களிக்கக்கூடிய அமெரிக்கர்களை உருவாக்குவதை அடிப்படை நோக்கமாகக் கொண்ட ஒரு கல்வி முறையே சகல இடங்களிலும் செயற் படுத் தப்படுகின்றது.

### அமெரிக்க-ஜப்பானிய அணுகுமுறைகள்

அமெரிக்கர்களும், ஜப்பானியர்களும் தத்தம் கல்வி முறைகளை ஒப்பீட்டு ஆய்வுகளுக்கு உட்படுத்தினர். சர்வதேச மதிப்பீட்டுப் பரீட்சைகளில் ஜப்பானிய மாணவர்கள் உயர் சித்தி பெற்றனர். இதற்கு ஜப்பானியப் பாடசாலைகள் ஓர் ஆண்டில் அதிக நாள்கள் இயங்கியமை காரணமானது. எனவே அமெரிக்காவும் தனது பாடசாலை நாள்களை அதிகரித்தது. ஐக்கிய அமெரிக்கக் கல்வி அதிகாரிகள் ஜப்பானிலுள்ள தனியார் போதனை நிலை யங்களை அமெரிக்காவில் ஏற்படுத்துவது சிறந்தது எனப் பரிந்துரை செய்தனர். இதே சந்தர்ப்பத்தில் அமெரிக்கக் கல்வியை ஒப்பீடாய்வு செய்த ஜப்பானிய அதிகாரிகள் பாடசாலை நாள்களைக் குறைப்பது பற்றியும் தனியார் போதனை நிலையங்களைக் கட்டுப்படுத்துவது பற்றியும் ஆலோசித்தார்கள். அமெரிக்கக் கல்வியியலாளர்கள் ஜப்பானில் இருப்பது போன்ற கடுமையான, நெகிழ்ச்சியற்ற பாட ஏற்பாட்டை சில சந்தர்ப்பங்களில் தமது நாட்டில் அறிமுகம் செய்யலாம் எனப் பரிந்துரை செய்ய, ஜப் பானிய கல்வியியலாளர்கள் அமெரிக்காவின் பிள்ளை மைய முற்போக்கு அம்சங்களைத் தமது நாட்டில் அறிமுகம் செய்யலாம் என ஆலோசனை வழங்கினர்.

### ரஷ்ய-சீன கல்விச் செயன்முறைகள்

உலகின் மிகப்பெரிய நாடான சோவியத் பொதுவுடைமைக் குடியரசு 1917 ஆம் ஆண்டு ஒக்ரோபர் புரட்சியின் பின்னர் ஒரு புதிய பொதுவுடைமை வாத கல்விமுறை மூலம் புதிய சமூகத்தைத் தோற்றுவித்த நாடாகும். கல்விக்கும் அரசியலுக்கு மிடையே மிகநெருங்கிய தொடர்பு காரணமாக தெரிவு முறைகளின்றி இடை நிலைப் பாடசாலைகளில் பரந்த பொதுக் கல்வியை வழங்கும் நாடாகும். பல மொழி களைக் கொண்ட பல சமுதாயங்களையுடையதாக இருந்தாலும் மொழிப்பிரச் சினையை வெற்றிகரமாகத் தீர்த்துக் கொண்ட நாடாகும். மாக்சிய பொதுவு டைமைவாத அடிப்படையில் கல்விக் கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன. பொருளாதார அரசியல் தாக் கங்கள் காரணமாக சோவியத் ஒன்றியம் பல நாடுகளாகப் பிரிந்தன. தற்போது ரஷ்யா அரசியல் பொருளாதார கல்விச் செயலாற்றுகைகளை புதிய மாற்றம் வேண்டி சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றது. ஆசியாவின் நோயாளி என ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட சீனாவில் 1949 இல் இருந்து மாக்சியவாத பொதுவுடைமைச் சித்தாந்த அடிப்படையில் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது. 1966 ஆம் ஆண்டில் மாவோ சேதுங் தலைமையில் கலாசாரப் புரட்சி கல்வி முறையில் பெருமாற்றத்தை ஏற்படுத்தியது. சோவியத் ரஷ்ய பொதுவுடைமை மாக்சியலெனின் தத்துவத்தை அப்படியே பிரயோகிக்காது சீன நிலைமைகளுக்கு ஏற்ப வேலை செய்பவர்களை நுண்ணறிவாளர்களாக்குவதும், நுண்ணறிவாளர்களை வேலை செய்பவர்களாக்குவதும் என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் படிப்படியான வளர்ச்சி பொதுவுடைமைக் கருத்துக்களையும் முதலாளித்துவ சிந்தனைகளையும் உள்வாங்கி இன்று சீனா மிகப்பெரிய பொருளாதார வல்லரசாகி யுள்ளது. இதற்குக் கல்வி துணை செய்கின்றது. இந்தியா இந்து சமயக் கல்வியால் அடித்தளமிடப்பட்டு பௌத்தமதக் கல்வியால் மெருகூட்டி, இஸ்லாமியரின் படையெடுப்பால் வீழ்ச்சியடைந்து, பிரித்தானியரின் மிசனரி கல்விப் பரப்பல், 1947 இல் சுதந்திரம், சுதந்திரத்தின் பின் ஜர்காட்டுத் திட்டத்துக்கமைய மத்தியமாநில அரசுகளால் கல்வி தொடர்ச்சியாக விருத்தியாக்கப்பட்டது. சனத்தொகை, படிப்பறிவின்மை, வறுமை, மொழிப் பிரச்சினைகள், அளவு கடந்த சமுதாய வேறுபாடுகள், இனக்கல வரங்கள் ஆகிய பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இந்தியா கல்வியை முன்னேற்றுவதற்கான பிரயத்தனம் போற்றுதலுக்குரியது.

> நாட்டின் அரசியல் யாப்பின் மூலம் கல்விப் பொறுப்புக்கள் மாநில இராச்சியங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதுடன், மத்திய அரசு நிதி உதவியை மட்டும் வழங்குகின்றது. அத்துடன் எந்தவித தலையீடும் இன்றி மாநில அரசுகளுக்குத் தமது விருப்பப்படியும், தமது இயல்புக்கு ஏற்பவும் கல்வியைத் திட்டமிட்டுச் செயற்படுத்து வதற்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. ஒரு மிகச் சிறிய அலகுகூடத் தமது பிரதேசத்தினுள் கல்வி வசதிகளை ஒழுங்கு செய்து கொள்கின்றது.

### கோளமயமாதலும் ஒப்பீட்டுக் கல்வியும்


ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகளில் மற்றொரு பிரதான முக்கியத்துவம், அந்த ஆய்வு உலக சமாதானத்துக்கும், அபிவிருத்திக்கும், புரிந்துணர்வுக்கும் பங்களிப்புச் செய்தல் என்பதாக அமைந்துள்ளது. கோளமயமாதல் செயன்முறையானது உலகளாவிய சக்திகள் மக்களின் நாளாந்த வாழ்வில் ஏற்படுத்திவரும் தாக்கங்கள் பற்றி அவர்களை உணரச் செய்து வருகின்றமையால், கோளமய மாக்கம் ஒப்பீட்டுக் கல்வியில் பிரதான இடத்தை இன்று வகிக்கின்றது. தற்போது உலக நாடுகளிடையே ஏற்பட்டு வரும் இடைத்தொடர்புகள் உலகளாவிய கல்விமுறை பற்றிய பகுப்பாய்வு என் னும் புதிய கருத்தாடலுடன் தொடர்புடையவையாக வுள்ளது. உலகளாவியசூழமைவைக்கருத்திற் கொண்டுகல்விமுறைகளை ஆராயவேண்டியுள்ளது. ஒப்பீட்டுக் கல்வியியல் ஆய்வுகளில் சகல கல்வி நிலையங்களிலும் இடம்பெறும் கற்பித்தல் செயற்பாட்டிலும், சர்வதேசப் பரிணாமங்களை இணைக்க விரும்பும் ஆய்வாளர்கள், ஓர் உலகளாவிய பார்வையைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. கோளமயமாதல் அணுகுமுறையானது பாடசாலை சமூகத் தொடர்பு, தனியாரினதும், சமூகத்தினதும் மேம்பாட்டில் கல்வி முறைகள் கொள்ளும் பங்கு, அதற்கான கல்வி முறை பற்றிய ஆற்றல், மட்டுப்பாடுகள் பற்றிய விளக்கத்துக்கு வழிகோலும் என்பது நவீன ஒப்பீட்டுக் கல்வியியலாளர்களின் கருத்தாகும்.

இந்தக் கோளமயமாக்கம் ஒவ்வொரு நாடும் பிறநாடுகளைப் பற்றிக் கற்றுக் கொள்ள வேண்டிய புதிய தேவையை ஏற்படுத்தி உள்ளது. இவ்வாறான ஒரு வலுவான தேவை இந்த அளவுக்கு முக்கியத்துவம் மிக்கதாக முன்னொரு போதும் ஏற்பட்டதில்லை. இது கல்வி முறைகள் பற்றிய ஒப்பீட்டளவுக்கு மிகவும் பொருத்தமுடையதாகும். இன்று உலகளாவிய கல்விச் செல்நெறியில் முதன்மைத் துறையான ஒப்பீட்டாய்வுக் கல்வி அமைந்துள்ளது.

உலகளாவிய ரீதியில் மட்டுமல்லாது உள்நாடுகளிலும் பல்வேறு பிரதேசங்களின் கல்வி நிலைமைகளை ஆய்வு செய்து அபிவிருத்திகளை இந்த ஒப்பீட்டுக்கல்வி ஆய்வுகள் முக்கியமாக்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பண்புக்கு எப்போதும் மதிப்பு அதிகம்



பல வகையான பொருள்களுடன் ஒரு வியாபாரி சந்தைக்குப் போனான். எல்லாவற்றையும் நல்ல விலைக்கு விற்றான். அதனால் நிறைந்த இலாபம் கிடைத்தது. பணத்தை எல்லாம் ஒரு தோற் பையில் வைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் தன் ஊருக்குத் திரும்பி னான். வழியில் ஒரு கோயிலைக் கண்டான். அதன் உள்ளே நுழைந்து அக்கோயிலில் இருந்த கடவுளுக்கு நன்றி கூறி வணங்கினான். கும்பிடும் போது தன் பக்கத்தில் வைத்த பையை மறந்து விட்டு வெளியேறித் தன் ஊரை நோக்கி நடந்தான்.

கோயிலுக்கு வந்த வேறொருவன் அந்தத் தோல் பையைப் பார்த்தான். அதன் பாரத்தைக் கொண்டு அதில் பெரும் தொகை பணம் இருப்பதை உணர்ந் தான். கடவுளை வணங்கிய பின் அந்தப் பையுடன் வீடு திரும்பினான். அவன் வீடு கோயில் இருந்த தெருவிலேயே இருந்தது.

வீட்டுக்கு வந்ததும் பையைப் பத்திரப்படுத்தினான். "பணப்பையை இழந்தவர் இங்கே விசாரிக்கவும்" என்று எழுதித் தன் வீட்டுக் கதவில் தொங்க விட்டான். கோயிலில் பையைத் தவறவிட்ட வியாபாரி தன் ஊரை நெருங்கிக் கொண்டிருந்தான்.

திடீரென்று அவனுக்கு பையின் நினைவு வந்தது. திடுக்கிட்டு திரும்பிக் கோயிலுக்கு ஓடினான். பையைக் காணாமல் மனம் பதறி அழுதான்.

அங்கிருந்தவர்களை விசாரித்தான். அதைப் பற்றி எவருக்கும் தெரியவில்லை. ஒன்றும் புரியாமல் அழுது கொண்டே தெருவில் நடந்தான்.

ஒரு வீட்டுக் கதவில் தொங்கிக் கொண்டிருந்த அட்டை யொன்றில் ஏதோ எழுதியிருந்ததைப் பார்த்தான். உடனே அந்த வீட்டுக் கதவைத் தட்டினான். வெளியே வந்தவனிடம் தன் பையைப் பற்றி விவரங்களை எல்லாம் கூறிச் சாவியையும் காட்டினான்.

உடனே அவன் வியாபாரியை அமரச் சொல்லிவிட்டு உள்ளே சென்றான். தோற் பையைக் கொண்டு வந்து கொடுத்தான். அதை வாங்கிய வியாபாரி சற்று நேரம் யோசித்து விட்டு, "நேர்மையான உயர்ந்த உள் ளம் படைத்த நீயே இதை வைத்துக் கொள். எனக்கு வேண் டாம்" என்று பையைத் திருப் பிக் கொடுத்தான்.

"உன் உழைப்பில் சம்பாதிக்கப் பட்ட பணம் எனக்கெதற்கு? நீயே எடுத்துப் போ" என்றான் பணத் தைக் கண்டெடுத்தவன்.

"நான் வாங்கவே மாட்டேன். இனி இது உன்னுடையதுதான்" என்று சொல்லிவிட்டு வியாபாரி அங்கிருந்து புறப்பட்டான்.

"திருடன் திருடன் என்று கத்திக் கொண்டே வியாபாரியின் பின் னால் சென்றான் பணத்தை வைத்திருந்தவன். அங்கே இருந்தவர்கள் வியாபாரியைத் தடுத்து நிறுத்தினார்கள். "என்ன திருடினான்?" என்று கேட்டார் கள். "என் நல்ல பெயரையும் இதுவரை நான் காப் பாற்றி வரும் என் மதிப்பையும் திருடிக் கொண்டான்" என்று கூறி நடந்ததை விளக்கினான் பணத்தைக் கண்டெடுத்தவன். எல்லோரும் அந்த வியாபாரியைக் கட்டாயப்படுத்திப் பையை அவனிடம் கொடுத்து அனுப் பினார்கள். வியாபாரியும் மக்களும் பணத்தைத் தி ரும்பிக் கொடுத்தவனின் மிக உயர்ந்த பண்பையும் கண்ணியத்தையும் புகழ்ந்து கொண்டே போனார்கள்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1988 – 84 வயதில் 80 ஆவது திருமணம் புரிந்தார் மலேசிய மருத்துவ மணமகன்.

1988– தமிழ் இளைஞர்கள் 15 பேர் கொழும்பில் கைது

1988 – நிறப்பாகுபாட்டுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தென்ஆபிரிக்க கிறிஸ்தவ ஆயர் டெஸ் மன்ட்டுட்டுவும் மேலும் 100 மதகுருமாரும் கேப் ரவுணில் கைது செய்யப்பட்டனர்.

1995 – 5 ஆண்டுகளாக புலிகளின் காவலில் இருந்த 15 பொலிஸார் மற்றும் சிப்பாய் ஒருவர் சாகும் வரை உண்ணாவிரதத்தில் இறங்கினர்.

1995 – ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதம் லண்டனில் வெளியாகியது.

2002 – மூன்றாம் தரப்புத் தலையீடு நாட்டின் இறைமைக்கு ஆபத்து என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரிக்கை.

2004 – சதிப்புரட்சி ஒன்றின் மூலம் கெயிட்டி ஜனாதிபதி ஜீன் பேர்டான்ட் அறிஸ்ரைட் பதவி விலக்கப்பட்டார்.

## வர்ணம் தீட்டுவோம்... வாங்க....



## பொது அறிவு

- லண்டனிலுள்ள மெழுகுச் சிலை மியூசியத்திற்கு யாது பெயர்?

  **மேடம் ரிஸ்சர்ட்**

- அதிபராகக் குத்துச் சண்டை வீரராக வெற்றிபெற்ற (1908) முதல் கறுப்பின வீரன் யார்?

  **ஜோன் ஆர்தர் ஜோன்சன்**

- ஜோன் லில்லீஸ் பூத் என்பவனால் கொலை செய்யப்பட்ட புகழ்பூத்த மனிதர் யார்?

  **அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன்**

- விமானங்களில் பயண விவரங்களைப் பதிவு செய்து வைத்திருக்கும் சாதனம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

  **கறுப்புப்பெட்டி**

- கொலம்பஸ்ஸின் கடல் பயணத்திற்கு உதவிய அவரின் சகோதரர் யார்?

  **பார்த்தலோமியோ**

- வடதீவு, தென்தீவு என இரண்டு தீவுகளைக் கொண்டிருக்கும் நாடு எது?

  **நியூஸிலாந்து**



## நிலவு

தங்க நிலா ஓடி வா
தவழ்ந்து தவழ்ந்து மேலே வா
எங்கும் ஒளி பாய்ச்ச வா
பாடம் சொல்லிக் கொடுக்க வா
பாடிப் பாடி ஆட வா
பரந்த முகம் காட்ட வா
கோடிப் பூக்கள் பறித்து வா
கொண்டையிலே சூட்ட வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் கைதிகள் விடயத்தில் விரைவான செயற்பாடு தேவை

அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் காலவரையற்றுத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. சிலர் மயங்கி வைத்தியசாலையில் சேர்க்கப்படுவதும் பின்னர் உடல்நிலை தேறிவர மீண்டும் சிறைக்குச் சென்று உணவு தவிர்ப்பில் ஈடுபடுவதும் தொடர்கிறது.

அரசியல் கைதிகளாக 150 இக்கும் மேற்பட்டோர் சிறைச்சாலைகளில் தடுப்பில் உள்ளனர். சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள், குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளவர்கள், தடுப்புக்கு அனுப்பப்பட்டவர்கள் என்ற வகையில் அவர்கள் உள்ளனர்.

அவர்களைவிட குற்றச்சாட்டுப் பத்திரம் எதுவுமே சுமத்தப்படாமல் நீதிமன்றங்களில் குற்றப்பகர்வுப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படாமல் 16 பேர் உள்ளனர். அவர்களில் ஒருவர் கடந்த வாரம் விடுவிக்கப்பட்டுள்ளார். ஏனைய 16 பேரில் அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள குற்றச்சாட்டுச் சுமத்தப்படாமலுள்ள 2 பேர் உணவு தவிர்ப்பைக் கைவிட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக இன்று நீதிமன்றில் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்வதாகக் கடந்த வாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் உறுதியளிக்கப்பட்டதன் அடிப்படையில் அவர்கள் உணவு தவிர்ப்பைக் கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் அவர்களைவிட மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளே குற்றச் சாட்டுப் பத்திரம் எதுவுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு அங்கு தற்போது 14 பேர் உள்ளனர். அவர்களில் ஒருவர் பெண்.

அவர்கள் 2009 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக 2013 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு நீதிமன்றில் நிலுவையில் இருந்த நிலையில் அந்தக் குற்றச்சாட்டுப் பத்திரங்களை பின்னர் சட்டமா அதிபர் திணைக்களம் மீளப் பெற்றுக் கொண்டுள்ளது. தாம் முன்னர் சமர்ப்பித்தவற்றில் சில தவறுகள் உள்ளதாகவும், அதனைத் திருத்தி மீளவும் தாக்கல் செய்வதாகவும் கூறி அவர்கள் அதனை மீளப்பெற்றுக்கொண்டபோதும் இதுவரை அவர்களுக்கு எதிராகப் புதிய குற்றச்சாட்டுப் பத்திரம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த நிலையைத் தடுப்பிலுள்ள கைதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனை ஏற்கும் மனநிலையிலும் அவர்கள் இல்லை. குற்றச்சாட்டுப் பத்திரம் எதுவுமின்றித் தங்களைத் தடுத்து வைத்திருப்பது ஏன் என்ற அவர்களின் கேள்விக்குப் பதில் அரச தரப்பிலிருந்தோ அரசின் எந்தவொரு அரசியல்வாதியிடமிருந்தோ கிடைக்காத நிலையில் கைதிகள் விரக்தி நிலையிலுள்ளனர்.

அரசும் தடுப்பிலுள்ள எத்தனையோ பேருக்கு ஏதோ குற்றச்சாட்டுப் பத்திரங்களைத் தாக்கல் செய்து வருகின்றபோதும் குறித்த 14 பேருக்கும் மட்டும் குற்றச்சாட்டுப் பத்திம் தாக்கல் செய்யாதது ஏன் என்ற கேள்வி நியாயமாகவே உள்ளது.

அவர்கள் உணவு தவிர்ப்பைத் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் அநுராதபுரம் சிறையிலுள்ள 2 பேர் மீதான விடயம் கவனத்தைத் தொட்டுள்ளது. அவர்களை மனித உரிமைகள் இல்லத்தினரும் சென்று பார்வையிட்டு அவர்கள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக் களத்துடன் கலந்துரையாடியே இன்று குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதாகக் கூறப்பட்டுள்ளது.

ஏன் இப்படியான நிலை தொடர்ந்து கொண்டிருக்க அரசு அனுமதியளிக்கிறது? முன்னைய அரசின் காலத்தில் சில தமிழ் கைதிகளின் உயிர்கள் சிறையில் அநியாயமாகப் பறிக்கப்பட்டன.



நல்லாட்சி அரசு அரசியல்கைதிகள் மீது அதிக கவனம் காட்டவில்லை என்ற குற்றச்சாட்டு இப்போது வலுத்து வருகின்றது. எனவே இந்த விடயத்தில் அரசு தனது கவனத்தைச் செலுத்தவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்துகொண்டிருக்கும் உணவு தவிர்ப்பு தற்போதைக்கு நிறுத்தப்படும் என்பதும் தெரியவில்லை. அவர்கள் ஒரு வாரமாகப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டு வருகிறார்கள். ஆயினும் அவர்களின் போராட்டம் முடிவடைவதற்கான சாதகமான நிலை இன்னும் இல்லை என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய தொன்றல்ல. அவர்களுக்குரிய தீர்வை முன்வைக்க வேண்டியது அரசின் கடமை-பொறுப்பு. அரசியல் கைதிகளின் விடயம் பல மட்டங்களில் பேசப்பட்டு வருகின்றபோதும் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்படுவதற்கான சாத்தியங்களைக் காணவில்லை. எனவே தமிழ்க் கூட்டமைப்பும் இந்த இழுபறி நிலையில் வழமையைவிடச் சற்றுக் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே அரசியல் கைதிகள் விடுதலையில் விரைவான ஒரு ஆக்கபூர்வமான செயற்பாடே அவசியம் தேவை.

# சிறுமிகளுக்கு நீதி கிடைக்குமா?



■ உடுவிலூர் கலா

எமது நாட்டில் பெண்களுக்கெதிரான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. குடும்பத்திலும் சரி, பணியிடங்களிலும் சரி, பொது இடங்களிலும் சரி வன்முறைகள் தொடர்கின்றன. ஏன் தொலைக்காட்சி தொடக்கம். இணையங்கள் வரை கூடப் பெண்களுக்கான வன்முறைகள் தாராளமாக இடம்பெறுகின்றன.

பெண்கள் மீதான வன்கொடுமை, வன்புணர்வு என்பன மிகவும் வேதனையானவை. திட்டமிட்டே வன்முறை செய்கின்றனர் ஆண்கள். அப்பாவிப் பெண்களும், சிறுமிகளும் பலிக்கடாவாகி உயிர் விடுகின்றனர். சிறைப்பட்ட பெண்ணினம் தம் அறிவால் சிறைக்கதவை உடைத்துச் சுதந்திரமாக வாழ முற்படும்போது உடலாலும், உள்ளத்தாலும் பல வீனப்படுத்தி மகிழ்கின்றது ஆணினம். சுதந்தரமாகப் பெண்கள் சுவாசிக்க முடியாத நிலையில் வன்புணர்வுகளும், படுகொலைகளும் நிகழ்கின்றன.

இதயத்தைப் பிழிந்த எத்தனையோ வன்புணர்வுகளைக் கண்டோம். பச்சைக் குழந்தை முதல், அப்பாவிப் பெண்கள் உள்ளடங்கலாக வயோதிப மாதுக்கள் வரை வன்புணர்வுகள் இடம்பெற்றுள்ளன. வித்தியாவின் கூட்டு வன்புணர்வு எம்மை நிலைகுலையச் செய்தது. ஆர்ப்பாட்டங்கள், கதவடைப்பு, கருத்துமோதல்கள் தொடர்ந்தன. கூட்டுக் காமுகர்கள் கைதாகினர். ஒன்பது மாதங்களாகியும் தண்டனை கிடைத்ததா? பாலியல் வன்புணர்வுக் கொலைகளுக்கெல்லாம் கைது ஒன்றே தீர்வு என்றால், பெண்கள் பலிக்கடாவாகிக் கொண்டேயிருப்பார்கள். சிறைக்குள்ளே உணவு கிடைக்கிறது.

பெண் படுகொலைகளைச் சந்தித்த குடும்ப உறவுகள் கண்ணீரோடு வாழ்கின்றனர். வித்தியாவின் படுகொலையின் பின் இன மத வேறுபாடுகளைக் கடந்து ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தபோதும். குற்றவாளிகளுக்குத் தண்டனையும் இல்லை. வன்புணர்வுகளும், வன்கொடுமைகளும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

வவுனியா உக்கிளாங்குளம் மாணவச் சிறுமி தனது வீட்டிலேயே வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டுள்ளாள். பதின்மூன்று வயதான பச்சைக் குழந்தையை உண்டு பசியாறித் தூக்கிலிட்ட காமுகர்கள் வாழத்தான் வேண்டுமா? வாழ்வது தான் நியாயமா? பெண்கள் என்றால் கருவிலே தொடங்கும் வன்முறை கல்லறை வரை தொடர்கிறது. ஆண்களால் என்றால் மறுக்க முடியுமா? நாளை கல்விசார் தலைவியாக மலரவேண்டிய அரும்பினை முகர்ந்து கசக்கி எறிந்த காமுகரைச் சட்டம் தண்டிக்காது விடுவதுதான் முறையா? மத்தியகிழக்குநாடுகள், மேலைநாடுகளில் பெண்களுக்கு வழங்கப்படும் சுதந்திரம் எமது நாட்டில் இல்லாமல் போவது ஏன்? போதைப் பொருள் கடத்த லுக்கே சாவுத் தண்டனை என்றால், இங்கு நடக்கின்ற வன்புணர்வுப் படுகொலைகளுக்கு எப்படியான தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதை எமது சட்டம் ஒரு தடவை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சிறுவர் தினம், மகளிர் தினம், பெண்களுக்கெதிரான வன்முறை வாரம் நாம் கொண்டாடலாமா? இந்த நிலை தொடருமானால் சட்டம் தண்டனை வழங்கத் தயங்கினால் எமது நாடு பெண்களின் சாபத்துக்கு ஆளாகிவிடும் என்பதை எவரும் மறந்து விடலாகாது.

பெண்மை போற்றப்படும் நாடுதான் வளர்ச்சியடையும். போராட்ட காலங்களில் கூட, தாயாக, மகளாக, பேத்தியாக ஒவ்வொருபெண்ணும் ராணுவத்துடன் போராடி ஆண்களைப் பாதுகாத்த நன்றியைக் கூட மறந்து விட்டனர். பெண்ணால் வந்து பெண்ணையே அசிங்கப்படுத்தும் இவர்கள் மனிதப்பிறப்பா? மனிதம் மரித்து விட்ட ஜென்மங்கள். சீ இப்படியும் ஒரு ஆண்களா? தமிழன்னையின் புதல்வர்கள் என்று சொல்ல முடியாத அரக்கர்கள். காலம் காலமாகப் பட்ட வேதனைகளையும், துன்பங்களையும் மறக்க முடியாமல் வாழும் நாம் மீண்டும் மீண்டும் கண்ணீரோடு வாழும் அவலம்.

சட்டம் என்பது சந்தையில் விற்பனையாகும் பொருள் அல்ல. சட்டங்கள் நீதிக்காகவே இயற்றப்பட்டவை. பெண்களின் படுகொலைக்காகச் சட்டத்தரணிகள் சரியான வாதங்களை முன்னெடுத்து நீதியை நிலை நாட்டவேண்டும். வறுமைப்பட்ட குடும்பங்களில் ஏற்படும் பெண் படுகொலைகளுக்கு வாதிட சட்டத்தரணிகள் முன்வரவேண்டும். பக்கம் சாராது சட்டத்தை கையில் எடுக்கவேண்டும். ஒரு வழக்கில் இருசட்டத்தரணிகள் முன்வந்து தமது வாதத்திறமைகளை நிலைநாட்டி உண்மைகள் கூட பொய்யாகின்றன. சட்டத்தரணிகள் எமது நாடு, எமது பெண்கள் என்கிற மனநிலையோடு வாதிட வேண்டும்

ஆக, பாலியல் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை ஒன்றே தக்க பாடம். ஒரு குற்றவாளிக்குச் சாவுத் தண்டனை நிறைவேற்றினால் போதும். பாலியல் வன்முறை மாயமாகிவிடும் சாவுத்தண்டனை நிறைவேற்றாத வரை பாலியல் வன்கொடுமைகள் ஓயப்போவதில்லை. ஆர்ப்பாட்டம், நடத்துவதாலோ, பணிப்புறக்கணிப்பாலோ காமுகர்கள் திருந்தப் போவதில்லை. சட்டத்தின் தூசுகள் தட்டப்பட்டு தண்டனை துரிதப்படுத்தப்பட்டால் ஒழிய, பெண்கள் இந்த நாட்டில் சுயமாக வாழ முடியாது. அப்பாவிச் சிறுமிகள் அரைகுறை வயதில் கொடுமையாக அழிந்தொழிந்து போகாது வாழவேண்டும்மெனில் காமதாரிகளை இல்லா தொழிப்பதைவிட வேறோன்றும் செய்யமுடியாது. சட்டம் நீதிக்காகவே நீதி ஒன்றே பெண்ணினத்தை வாழ வைக்கும்.

## நன்றி நலன்களைக் கூட்டும்

எமது அன்றாடத் தேவைகள், விண்ணப்பங்கள், மனச்சுமைகள், நோய்கள், இடர்களை கண்ணீர் சிந்தி இறைவனிடம் எடுத்துக்கூறி நாள்தோறும் ஆலயம் சென்று மன்றாடுகின்றோம் அவரது கருணைமிகு இரக்கத்தால் வேண்டுதல்கள் கேட்கப்பட்டு நிறைவு பெறுகிறோம். ஆனால், கேட்டவை கிடைத்ததும் கடவுளை மறந்து தற்புகழ் பேசுகின்றோம். ஆலயம் செல்வதைக் குறைத்துக் கொள்கிறோம்.




நன்றியற்ற வாழ்க்கை நரம்பில்லா வீணைக்கு ஒப்பாகும். கணப்பொழுது கூட எம்மை மறவாது தேவைகள் அனைத்தையும் வழங்கிப் பாதுகாத்து வரும் இறவனுக்கு நன்றி கூறும் பழக்கம் ஏன் எம்மில் வளரவில்லை. அனைவருக்காகவும் மன்றாடுங்கள், இறைவனிடம் வேண்டுங்கள்; பரிந்து பேசுங்கள்; நன்றி செலுத்துங்கள்; (1திமொத் 2:1)

நோய் நீங்கப்பெற்ற பத்து தொழுநோயாளார் களுள் ஏனைய ஒன்பது பேரும் எங்கே? நன்றி கூற வரவில்லையா என்ற கேட்ட இயேசு இறைவனுக்கு நன்றி கூறி வாழுமாறு அழைப்பு விடுக்கின்றார்.

உணவு, உடை, உறையுள், அறிவு, ஆற்றல், பாதுகாப்பு, நல்லுறவுகள், பிறர் அன்பு, வாழ்நாள்களைத் தந்து எம் தேவைகளைப் பலர் வழியாக நிறைவு செய்து வரும் இறைவனின் ஒப்பற்ற அன்புக்காக எந்நேரமும் நன்றி கூறுவது கடமையாகும்.

இன்பத்துக்கு மட்டுமல்லாது துன்ப வேளையிலும் நன்றி கூறுவோம். ஏனென்றால் நிகழவிருந்த பேராபத்தைத்தவிர்த்து சிறு துன்பத்தை தந்திருக்கலாம் நன்றிப் புகழ் பாடும்போது இறைவன் பூரிப்படைந்து மேலும், பல நன்மைகளைப் பொழியும் அன்புள்ளவர். பொன், பொருள், காணிக்கைகளை விட நன்றித் தனத்தையே இறைவன் முதலில் ஏற்றுக்கொள்வார். வல்லவரின் புகழ்பாடி தொல்லைகள் நீங்கி நலமுடன் வாழ்வோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

சிறையிலிருந்து வெளியான சிறிது நேரத்துக்குள் தனது அடுத்த பட வாய்ப்பைப் பெற்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கிறார் நடிகர் சஞ்சய் தத்.

இந்தித் திரை உலகில் 1980 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரையில் உச்ச நட்சத்திரமாக திகழ்ந்த சஞ்சய் தத், மும்பையில் நடந்த சங்கிலி தொடர் குண்டுவெடிப்பில் சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருந்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டார். அவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இந்த நிலையில், நன்னடத்தை காரணமாக தண்டனை காலம் முடிவடைவதற்கு முன்னரே சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட 56 வயதான நடிகர் சஞ்சய் தத் ஒரு அக்ஷன் படத்தில் நடிக்கும் வாய்ப்பை உடனடியாகப் பெற்றிருக்கிறார்.

இயக்குநர் சித்தார்த் ஆனந்த் இயக்கத்தில் அதிரடி காட்சிகளுடன் உருவாகும் இந்தப்படத்தின் படப்பிடிப்பு, விரைவில் தொடங்கவுள்ளது.




## படித்ததில் பிடித்தது

ஓர் ஊரில் ஒரு கோடீஸ்வரன் இருந்தான். அவனுக்குக் கடுமையான தலைவலி ஏற்பட்டது.

பல ஊர்களிலிருந்து மிகப்பெரிய வைத்தியர்கள் வந்து பார்த்தும், வண்டி வண்டியாக மருந்துகள் சாப்பிட்டும் அந்தத் தலைவலி குணமாகவில்லை. ஒருநாள் அந்த ஊருக்கு ஒரு சன்னியாசி வந்தார். அவர் பணக்காரனை வந்து பார்த்தார். பார்த்துவிட்டு, அவருக்கு ஏற்பட்ட தலைவலிக்குக் கண்ணில் இருக்கும் ஒரு நோயே காரணம் என்று கூறினார். அந்தக் கண்ணைக் குணப்படுத்த ஒரே ஒரு வழிதான். அந்தப் பணக்காரன் பச்சை நிறத்தைத் தவிர வேறெதையும் பார்க்கக் கூடாது என்று கூறிவிட்டுப் போய் விட்டார். பணக்காரன் முதலில் தனது வீட்டில் இருக்கும் எல்லாவற்றையும் பச்சையாக மாற்றினான்.

தலைவலி குணமாகி விட்டது.

சன்னியாசி கூறியது சரி தான். உடம்பு சரியாகவே வீட்டை விட்டு வெளியே போகத் தொடங்கினான். வெளியே போனால், இயற்கை எல்லா வண்ணங்களையும் அள்ளித் தெளித்திருந்தது. ஆனால், அவற்றைத்தான் அவன் பார்க்கக்கூடாதே!

நிறையப் பச்சைப் பெயின்ரையும், பிரஷ்ஷையும் கொடுத்து சில ஆள்களை நியமித்தான். அவன் போகும் வழியில் இருக்கும் ஆடு, மாடு, மனிதர், குடிசை, வண்டி, மேசை, நாற்காலி எல்லாவற்றுக்கும் பச்சை நிறத்தை அடிப்பது அவர்களுடைய வேலை. அவர்களும் முதலாளி சொன்னபடியே செய்து வந்தார்கள். சில மாதம் கழித்து மீண்டும் சன்னியாசி அதே ஊருக்கு வந்தார். வேலையாள்கள் அவரைத் தடுத்து நிறுத்தி, அவர் மீதும் பச்சை வண்ணம் அடிக்கப் போனார்கள். சன்னியாசிக்கு ஆச்சரியமாகிவிட்டது. காரணம் கேட்டார். அவர்கள் ''தங்கள் முதலாளியின் கட்டளை இது'' என்று கூறினார்கள்.

சன்னியாசி அதற்கு, "என்னை உங்கள் முதலாளியிடம் அழைத்துப் போங்கள்" என்றார்.

பணக்காரனுக்குத் தனது நோயைக் குணப்படுத்திய சன்னியாசி மீண்டும் வந்ததைக் கண்டு ஒரே மகிழ்ச்சி. வணங்கி அவரை உபசரித்தான்.

"இந்த ஊரில் எல்லாவற்றுக்கும் ஏன் பச்சைப் பெயிண்ட் அடிக்கிறீர்கள்?" என்று சன்னியாசி கேட்டார். "ஐயா, நீங்கள் சொன்னபடிதான் நான் செய்கிறேன்" என்றான் அவன் மிகப்பணிவோடு. "நான் என்ன சொன்னேன்?" என்றார் சன்னியாசி.

"பச்சைநிறத்தைத் தவிர வேறெதையும் நான் பார்க்கக்கூடாது என்று கூறினீர்களே ஐயா" என்றான். "மகனே! நீ லட்ச லட்சமாகப் பணத்தைச் செலவழித்திருக்க வேண்டாம். ஒரு நூறு ரூபாய் கொடுத்து பச்சைக் கண்ணாடி வாங்கியிருந்தால், உன்னைச் சுற்றியிருக்கும் பொருள்களெல்லாம் பிழைத்திருக்கும். உனது பணமும் வீணாகி இராது.

உன்னால் இந்த உலகம் முழுமைக்கும் பச்சைப் பெயிண்ட் அடிக்கமுடியுமா?" என்று கேட்டார் சன்னியாசி. நம்மில் பலரும் இந்தக் கதையில் வரும் பணக்காரனைப் போலத்தான் இருக்கிறோம். நம்மைத் திருத்தி அமைத்துக் கொள்வதற்கு பதிலாக, உலகத்தை எப்படியாவது மாற்றியமைத்து விடுவது என்று மிகவும் முயற்சிக்கிறோம். அது சாத்தியமல்ல. மிகுந்த காலமும், உழைப்பும் விரயமான பிறகு தான் "திருந்த வேண்டியது நாம்தான்" என்பது புரிகிறது.

WhatsApp




♥தோழி_கலை♥
எங்கவீட்ல
மாப்பிள்ளை பார்த்தா
இனி ஜாதகம்
பார்க்க வேண்டாம்
டிவிட்டர்
பேஸ்புக்
வாட்சப்
யூஸ் பண்ணாத
மாப்பிள்ளையைத் தான்
பார்க்கச் சொல்லனும்

அலெர்ட் ஆறுமுகம்
"ஈதல்அறம் தீவினை விட்டு ஈட்டல்
பொருள் காதலிருவாகருத்தொருமித்து ஆதரவுபட்டது
இன்பம்" வரிகளில் வள்ளுவரின் மொத்த குறள்களையும்
அடக்கியவர் அவ்வையே

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | | | | | | 8 | 4 |
| 4 | | | | 7 | 9 | 6 | | 2 |
| | | | | | | | | |
| 2 | | 8 | | | | | | |
| | | | 7 | 6 | 5 | | | |
| | | | | | | 4 | | 6 |
| | | | | | | | | |
| 7 | | 3 | 2 | 5 | | | | 9 |
| 5 | 4 | | | | | | 7 | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 4 | 7 | 5 | 9 | 1 | 6 | 3 |
| 5 | 9 | 1 | 3 | 8 | 6 | 4 | 7 | 2 |
| 6 | 7 | 3 | 1 | 4 | 2 | 8 | 5 | 9 |
| 1 | 5 | 9 | 4 | 6 | 7 | 2 | 3 | 8 |
| 8 | 6 | 7 | 2 | 3 | 1 | 9 | 4 | 5 |
| 4 | 3 | 2 | 8 | 9 | 5 | 7 | 1 | 6 |
| 9 | 1 | 6 | 5 | 7 | 8 | 3 | 2 | 4 |
| 3 | 2 | 5 | 9 | 1 | 4 | 6 | 8 | 7 |
| 7 | 4 | 8 | 6 | 2 | 3 | 5 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.









**மேடம்:** திறந்த மனதுடன் நண்பரிடம் பழகுவீர்கள். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். தொழிலில் விற்பனை சிறந்து இலாபம் அதிகரிக்கும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**இடபம்:** சுய நலத்துக்காக சிலர் உங்களைப் பயன்படுத்த முயற்சிப்பர். கூடுதல் உழைப்பினால் தொழிலில் வருமானம் சீராகும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும்.

**மிதுனம்:** நிதானித்து பேசுவதால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். தொழிலில் உருவாகிற இடையூறு சரிசெய்ய முயல்வீர்கள். இலாபம் சுமார். பாதுகாப்பு குறைவான இடத்துக்குச் செல்ல வேண்டாம். தாயின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும்.

**கடகம்:** நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**சிங்கம்:** நீண்ட நாள் திட்டம் செயல் வடிவம் பெறும். தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெற்றோரின் தேவை அறிந்து பூர்த்தி செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**கன்னி:** விடாமுயற்சியுடன் செயல்படுவது நல்லது. தொழிலில் மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**துலாம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. தொழிலில் மிதமான இலாபம் கிடைக்கும். வீண் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. பெண்கள் நகை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மனைவி விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** எதிலும் முன் யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழிலில் வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பார்த்த சுப செய்தி வரத் தாமதமாகலாம்.

**மகரம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர்.

**கும்பம்:** நண்பர்களின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழிலில் வருமானம் சராசரி அளவில் இருக்கும். சுய கௌரவம் பாதுகாக்க செலவு செய்ய நேரிடும். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவர்.

**மீனம்:** சவால்களை ஏற்று சாதனை படைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## நடைபழகும் வண்டில்

குழந்தைகளுக்கான நடை பழகும் வண்டில் அறிமுகமாகியுள்ளது. கையால் பற்றிப்பிடித்துக்கொண்டு வண்டிலை முன்னோக்கி நகர்த்துவதன் மூலம் சுயமாக நடை பழக முடியும். இது 3000 ரூபா முதல் 4000 ரூபா வரையாகும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 600 | 650 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 200 | – |
| கணவாய் | 550 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 500 | 700 | 450 |
| சுறா | 400 | 600 | 600 | 800 | 650 | – | – |
| சீலா | 250 | 500 | 400 | 600 | 400 | 500 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 600 | 600 | – | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 450 | 400 | 600 | – |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 300 | 400 | – | – | 450 | – | 400 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 300 | 200 | 350 |
| நகரை | 150 | 300 | – | 250 | 400 | – | 400 |
| சூடை | 100 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஓட்டி | 250 | 200 | 150 | 250 | 300 | – | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 200 | 150 |
| மதனம் | 100 | 300 | 180 | 300 | 250 | 300 | 200 |
| கொய் | 80 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 300 | 250 | 250 | 400 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | 300 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 40 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 80 | 60 | 90 | 80 | 60 | 60 | 65 | 45 |
| கரட் | 150 | 200 | 150–200 | 180 | 170–200 | 200 | 130 | 160 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 70 | 100 | 80 | 80 | 90 | 120 |
| பாகல் | 70 | 80 | 80 | 100 | 80 | 140 | 80 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 60 | 50 | 60 | – | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 60 | 60 | 70 | 70 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 50 | 80 | 70 | 80 | 70 | 60 |
| பூசணி | 80 | 50 | 60 | 50 | 50 | 80 | 65 | 60 |
| தக்காளி | 40 | 50 | 40 | 30 | 30–40 | 60 | 50 | 45 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 50–60 | 50 | 45 | 40 |
| கீரை | 30 | 50 | 30 | 10 | 20 | 30 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 120 | 110 | 100 | 120 | 140 | 100 | 150 |
| புடோல் | 60 | 60 | 50 | 40 | 60 | 60 | 40 | 60 |
| கோவா | 80 | 80 | 60 | 60 | 60 | 100 | 80 | 55 |
| வெண்டி | 100 | 80 | 60 | 60 | 100 | 80 | 70 | 120 |
| போஞ்சி | 100 | 100 | 60 | 80 | 80 | 140 | 30 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 100 | 120 | 140 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 30–45 | 33 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 65 | 70 | 60–70 | 60 | 50 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 50 | 60 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 120 | 120 | 140 | 120 | 200 | 130 | 120 |
| இராசவள்ளி | 150 | 120 | 150 | 120 | 140 | 150 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 200 | 350 | 600 | 600 | 400 | 450 |
| பனங்கிழங்கு | 05 | 02.50 | 05 | 02 | 03 | 03 | 02.50 | – |

## மிக்சர் வடை

**செய்முறை:**

- முந்திரிப்பருப்பைப் பொடியாக நறுக்கிக் கொண்டு தேங்காயைத் துருவிக் கொள்ளுங்கள்.
- பிறகு இரண்டையும் சிறிதளவு நெய்யில் வறுத்துக் கொள்ளுங்கள்.
- பச்சரிசி, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, உளுந்தம்பருப்பு ஆகியவற்றைத் தனித்தனிப் பாத்திரத்தில் போட்டு நீர் விட்டு ஊற வைக்க வேண்டும்.
- அவை நன்கு ஊறியதும் எடுத்து அவற்றுடன் மிளகாய் வற்றலையும் உப்பையும் சேர்த்து சிறிதளவு தண்ணீர் விட்டு வடை பதத்துக்குக் கெட்டியாக அரைத்துக் கொள்ளுங்கள்.
- பிறகு அந்த மாவுக் கலவையை ஒரு பாத்திரத்தில் கொட்டி வறுத்த முந்திரிப்பருப்பு, தேங்காய்த் துருவல், கறிவேப்பிலை ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகப் பிசைந்து கொள்ள வேண்டும்.
- அதன் பின் அடுப்பில் சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றி அது காய்ந்ததும் பிசைந்து வைத்திருக்கும் மாவுக் கலவையை வடைகளாகத் தட்டி அதில் போட்டுச்சிவக்க வேகவைத்து எடுத்துக் கொள்ளுங்கள்.



**தேவையானவை:**

பச்சரிசி - 100 கிராம்
துவரம்பருப்பு - 400 கிராம்
கடலைப்பருப்பு - 200 கிராம்
உளுந்தம் பருப்பு - 150 கிராம்
மிளகாய் வற்றல் - 10
தேங்காய் - 1 மூடி
முந்திரிப்பருப்பு - 10
நெய் - 20 கிராம்
எண்ணெய் - 1 லீற்றர்
கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு

## பாயாசம் செய்யும் போது



- பாயாசம் செய்யும் முன்பு சவ்வரிசியை சிறிது நேரம் தண்ணீரில் ஊற வைக்கலாம்.
- சேமியாவை சட்டியில் போட்டு லேசாக வறுத்து எடுத்துக் கொள்ளவும்.
- அவல் பாயாசம் செய்யும்போது ஒரு கப் பாலும், ஒரு கப் தேங்காய் பாலும் சேர்த்து செய்தால் சுவை அருமையாக இருக்கும்.
- ஏலக்காயின் மேல் பகுதிகள் சில குழந்தைகளுக்குப் பிடிக்காமல் போகலாம். எனவே பாயாசத்தில் ஏலக்காயின் விதைகளை மட்டும் தட்டிப் போட்டால் போதும்.



### நாளை

மாசி-18
செவ்வாய்க்கிழமை 01.03.2016
திதி: ஸப்தமி பி.ப.12.53 வரை
நட்சத்திரம்: அனுஷம் மு.ப.11.42 வரை
ராகுகாலம்: 03.27-04.57 வரை
சுபநேரம்: 10.57-12.27 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நுட்பம்



## பொது வை-பையில் அவதானம் தேவை

இணைய தொடர்பாடலின் நவீன தொழில்நுட்ப மான வை-பை ஆனது வேகம் கூடியதாக இருப்பதுடன், இன்று பல பொது இடங்களில் இலவசமாகவும் வழங்கப்படுகின்றது.
இதன் இலகு தன்மை, இலவசம் மற்றும் வேகம் காரணமாக பெருமளவானவர்கள் இந்த வலை யமைப்பு தொழில்நுட்பத்தையே அதிகளவில் பயன்படுத்த ஆர்வம் காட்டுகின்றனர்.
இந்த ஆர்வம் ஆனது பல சமயங்களில் அதனைப் பயன்படுத்துபவர்களுக்கு ஆபத்தாக அமை வதாக ஆய்வு ஒன்றின் ஊடாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
விமான நிலையம் ஒன்றில் மேற்கொண்ட ஆய் வின் அடிப்படையில் 4 மணிநேரத்தில் சுமார் 2,000 பேர் வரை வை-பை வலையமைப்பை பயன்படுத்தியிருந்ததுடன் 8 மில்லியன் டேட்டா பக்கெட்களை பரிமாற்றம் செய்திருந்தனர்.
இந்த டேட்டாக்களை தனி நபர் நலன் கருதி வை-பை சேவையை வழங்கிய நிறுவனம் சேமிப் பது இல்லையெனினும் இந்த வலையமைப்பில் இணைந்துகொண்டு தனி நபர்களின் தரவுகளை கையகப்படுத்துவதற்கான சாத்தியம் ஹேக்கர் களுக்கு அதிகம் இருக்கின்றது என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



## சற்றிஈ நிறுவனத்தின் புதிய இரு கைபேசிகள்

சற்றிஈ நிறுவனம் தனது புத்தம் புதிய இரு தொடு திரைக் கைபேசிகளை அறிமுகம் செய்யவுள்ளது என்று அறிவித்துள்ளது.
இதன்படி சற்றிஈ பிளட் வி7 மற்றும் பிளற் வி7 லைற் ஆகிய இரு கைபேசிகளையே அந்த நிறுவனம் வெளியிடவுள்ளது.
இவற்றில் சற்றிஈ பிளட் வி7 ஆனது 5.2 அங்குல அளவு, 1920 X 1080 பிக்சல் தீர்மானம் உடைய தொடுதிரையைக் கொண்டதாகவும், ஒக்ராகோர் பிரஸசர், பிரதான நினைவகமாக 2ஜிபி ரம், 16 ரம் சேமிப்பு நினைவகம் என்பவற்றுடன், 13 மெகா பிக்சல்களை உடைய பிரதான கமரா, 5 மெகா பிக் சல்களை உடைய வீடியோ அழைப்பை ஏற்படுத்து வதற்கான கமரா என்பவற்றையும் கொண்டுள்ளது.
இதேவேளை-பிளற் வி7 லைற் ஆனது 5 அங்குல அளவு, 1280 X 720 பிக்சல் தீர்மானம் உடைய எச்டி தொடுதிரையையும், தலா 8 மெகா பிக்சல்களை உடைய பிரதான மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றையும் ஏனை யவை சற்றிஈ பிளட் வி7 கைப்பேசிக்கு நிகரான அம்சங்களைக் கொண்டதாகவும் காணப்படு கின்றது.

# காக்கைதீவு இறங்குதுறையில் ஓய்வு மண்டபம் அமைக்குக

## கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.29
தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் ஆடைகளை மாற்றுவதற்கு வசதியாக காக்கைதீவு இறங்குதுறையில் ஓய்வு மண்டபத்தை அமைத்துத் தருமாறு யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம் மேளனத் தலைவர் என்.பொன்னம்பலம் கோரிக்கை விடுத்துள்ளார்.
அத்துடன் கடல் அரிப்பிலிருந்து கரை ஓரத்தைப் பாது காக்கும் வகையில் சிமெந்தினாலான அணையை அமைத்துத் தருமாறு கேட்டுள்ளார்.
வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள காக்கைதீவு இறங் குதுறையை ஆனைக்கோட்டை, மானிப்பாய், சாவல் கட்டு, உயரப்புலம், காக்கைதீவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் பயன் படுத்தி வருகின்றனர்.
குடாநாட்டிலுள்ள ஏனைய இறங்கு துறைகளைப் போலல்லாமல் காக்கைதீவு இறங்குதுறையைப் பயன்படுத்தும் மீனவர்கள் 3கிலோ மீற்றர் தூரத்தி லிருந்து தொழிலுக்கு வருகிறார்கள். இவர்கள் தொழி லுக்குச் செல்லும் போது திரும்பிவரும் போதும் ஆடை களை மாற்றவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதற்கான வசதிகள் இந்தத் துறையில் இல்லாததால் திறந்த வெளியில் நின்று ஆடைமாற்ற வேண்டிய நிலையிலுள்ளனர்.
எனவே, அவசரமாக ஓய்வு மண்டபத்தை அமைத்துத் தருமாறு அமைச்சரைக் கோரியுள்ள சம்மேளனத் தலை வர், தொழிலாளர் வீடு செல்லும் போது உடலைச் சுத் தம் செய்வதற்கு வசதியாக நீர் வசதியையும் ஏற்படுத் தித் தருமாறு தெரிவித்துள்ளதுடன், கடல் அரிப்பினால் சேதமடைந்து வரும் கரையோரத்தைப் பாது காக்கும் வகையில் சிமெந்தினாலான அணையை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-115)

### 6 ஆவது

சிறைகளிலுள்ள 50 இற்கும் மேற்பட்ட கைதிகள் இன்று ஒரு நாள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன.
மகசின் சிறைச்சாலையின் 'ஜே' பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரமசகாயம் உதயகுமார், சிவசுப் பிரமணியம் தில்லராஜ், நடேஸ் குகநாதன், மு.சிவ நாதன், மா.நீதிநாதன், க.வேதநாயகம், ந.தர்மராஜா, சு.ஞானசீலன், தயாபரன், செல்லத்துரை கிருபானந் தன், தி.மனோகரன், யோசப் செபஸ்ரியான், சுப்பிரமணி யன் கபிலன், இராசதுரை திருவருள், இரவீந்திரன் மதனி ஆகிய 15 கைதிகள் உணவு தவிர்ப்பு போராட் டத்தை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்திருந்தனர். இவர்களில் செல்லத்துரை கிருபானந்தன் என்ற கைதி மறுநாள் புதன்கிழமை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட் டார்.
இந்த நிலையில், தமது கோரிக்கைகளுக்கு நியாய மான தீர்வொன்று கிட்டாத வரை போராட்டத்தைக் கைவி டப்போவதில்லையென்பதில் உறுதியாகவிருப்பதாகத் தெரிவித்து ஏனைய 14 கைதிகளும் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். இவர்களில் ஒருவர் நேற்று மயங்கிய நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனால் 14 பேரும் உடல்நிலை பாதிக்கப்பட்டு சோர்வடைந்தி ருப்பதாகச் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன.
இதேவேளை, அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான வழக்கு விசாரணையை வவுனியா நீதி வான் நீதிமன்றம் ஊடாக இன்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்படுமெனச் சட்டமா அதிபர் திணைக் களம் சம்பந்தப்பட்ட தரப்புகளூடாக அறிவித்துள்ள தையடுத்து, கைதிகள் இருவரும் நேற்றுமுன்தினம் உணவு தவிர்ப்பை நிறைவுக்குக் கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
(த-வ-4)

### கோத்தா

கூறுகையில்,
எனது தலைமைப் பாதுகாப்பு அதிகாரியாக இருந்த வரின் தோட்டத்தில் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. தங்கத் தைக் குறிவைத்துத் திடீர்த் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. இறுதியில் 'பொலித்தீன்' பையொன்றுதான் கிடைத்தது. நான் எங்கு சென்றாலும் அந்த இடத்தைத் தோண்டு கின்றனர்.
இன்று நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. வெளிநாட்டு ஒதுக்கீடுகள் குறைவடைந்துள்ளன. இவற்றை மூடி மறைப்பதற்காகவே கடந்த காலம் பற்றி பேசப்படுகின்றது. பழிவாங்கல்கள் இடம்பெறுகின்றன. அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி குறித்தும் என் னைப் பற்றியும் சந்திரிகா முன்வைக்கும் கருத்து களுக்குப் பதிலளிக்க வேண்டிய தேவைப்பாடு எனக்கு இல்லை. பதிலடி கொடுப்பதற்கு டலஸ் அழகப்பெரும இருக்கின்றார்.
மேலும், புதிய அரசியல் கட்சி என்பது மக்களின் கருத் தாகும். நான் சுதந்திரக் கட்சியைவிட்டு வெளியேறமாட் டேன். என்னை அவ்வளவு இலகுவில் வெளியேற்றி விடவும் முடியாது. நான்தான் கட்சியை வளர்த் தெடுத்தவன்.
தற்போது கைதுவேட்டை தொடர்கின்றது. அடுத்ததாக நாமல், கோத்தா, பசில் போன்றோர் கைது செய்யப் படலாம். ஏன் விமல், மகிந்தானந்த அளுத்கமே போன் றவர்களும் கைதுப் பட்டியலில் இருக்கலாம். இறுதியில் என்னையும் கைதுசெய்வார்கள் - என்றார். (த-வ-5)

### பலாலி ஆசிரியர்

பட்டது. இதன்போது பலாலி ஆசிரியர் கலாசாலையில் தற்போதைய அதிபரினால் பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்டன.
1947 ஆம் ஆண்டு பலாலியில் ஆசிரியர் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டு போர் நட வடிக்கை காரணமாகக் கலாசாலை அங்கிருந்து இடம் பெயர்ந்தது. பல்வேறு இடங்களில் இயங்கி தற்போது, திருநெல்வேலி முத்துத்தம்பி ஆரம்பப் பாடசாலையில் அநாதரவாக இயங்குகின்றது. ஆரம்பத்தில் 13 பாட நெறிகள் எமது கல்லூரியில் இருந்தன. தற்போது அவை ஒவ்வொன்றாகக் குறைக்கப்பட்டு எதுவுமே இல்லாத நிலையில்தான் உள்ளது.
அதிபர் என்ற வகையில் நானும், இன்னொரு அலு வலரும், காவலாளியும்தான் தற்போது இருக்கின்றோம். இப்படியே சென்றால், பலாலி ஆசிரியர் கலாசாலை விரைவில் மூடப்படும். எனவே உடனே அதனை இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.
இதனை ஏற்றுக் கொண்ட, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுவின் இணைத் தலைவர்கள், மத்திய அரசுடன் பேச்சு நடத்தி நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானித் தனர்.
இதற்கமைய, பலாலி ஆசிரியர் கலாசாலையை உடன டியாக தற்காலிகமாவது இயக்குவது என்றும், பலாலி ஆசிரியர் கலாசாலையின் சொந்த நிலத்தை இராணு வத்தினர் விடுவிக்க வேண்டும் எனவும் கோரி தீர் மானம் நிறைவேற்றப்பட்டது.
(த-வ-5-ரி5)

### வீரகெட்டியில்

ரையை அண்மித்து இந் தச் சம்பவம் இடம்பெற்றது. கொல்லப்பட்ட நபர் உட்படச் சிலர் வாகனம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது, பிறிதொரு வாகனத் தில் சென்ற துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். காயம டைந்த நபர் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
(த-வ-4)

### விரைவில்

சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பான தேர்தல் பரப்புரை விளம்பரங்களுக்கு கட் டணம் செலுத்த வில்லை என குற்றம் சுமத்தப்பட்டு, நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணைகளை மேற் கொண்டு வந்தது.
குறித்த விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார். இந்த நிலையில் முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட ஐவருக்கு எதிராக வழக் குத் தொடரப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது என அதில் கூறப்பட் டுள்ளது.
(த-வ-4)

### வடக்குக்கு

அவர் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் அஸ்கிரிய, மல்வத்து பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசிபெறவுள்ளார். அதன்பின்னர் மாவட்டரீதியில் பயணம் மேற்கொள் வதற்கு அவர் உத்தேசித்துள்ளார். இதன் ஓர் அங்கமா கவே வடக்கு, கிழக்கு மாகா ணங்களுக்கு அவர் வருகைதரவுள்ளார்.
(த-வ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொப்பேக்கடுவ வும்

என்ற தாயார் மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

இதன்போது, அவர் தனது சாட்சியத்தில்:-

அல்லைப்பிட்டியில் 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதியன்று கொப்பேக்கடுவவும் ஈ.பி.டி.பி கட்சியைச் சேர்ந்த டக்ளஸ்தேவானந்தாவும்இணைந்து கைது செய்த 600 பேரில் இருந்த எனது மூன்று பிள்ளைகளான யேசுரட்ணம் விஜயரட்ணம், யேசுரட்ணம் சுகிர்தரட்ணம், யேசுரட்ணம் பிறேமரட்ணம் ஆகிய மூவரையும் எனது பெறாமக்கள் மூவரையும் கைதுசெய்து கொண்டு சென்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் சுகிர்தரட்ணம் மற்றும் பிறேமரட்ணம் ஆகியோர் மூன்று நாள்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். இதன்பின்பு சில தினத்தில் மண்கும்பானில் இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் கொப்பேக்கடுவ உரையாற்றும் போது, உங்கள் பிள்ளைகளை உங்கள் தலைவர் டக்ளஸ் தேவானந்தா விடுதலை செய்வார் என்றார். இதன்போது, டக்ளஸ் தேவானந்தாவும் உடன் இருந்தார்.

தொடர்ந்து உரையாற்றிய டக்ளஸ் தேவானந்தா, இனிவரும் காலங்களில் சுற்றிவளைப்பு இடம்பெற்றால் நாமும் இருப்போம், அதனால் நீங்கள் அச்சமடையத் தேவையில்லை என்றார்.

பின்னர், 1990 செப்ரம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று மண்கும்பான் பாடசாலைப் பகுதி சுற்றிவளைப்பு இடம்பெற்றது. அதிலும் பலர் கைது செய்யப்பட்ட வேளையில், விடுதலை செய்யப்பட்ட எனது இரு மகன்களும் மீண்டும் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதனால் 1981 ஆம் ஆண்டு ஜீன் மாதம் முதல் வாரத்தில் டக்ளஸை நான் சந்தித்து எனது பிள்ளைகள் தொடர்பில் கேட்டேன். உங்களது மூன்று பிள்ளைகளுக்கும் ஒன்றும் நடந்திராது எனத் தெரிவித்தார். பிள்ளைகள் தொடர்பான ஆவணங்களையும் அவரிடம் கையளித்தேன்.

பின்பு கொப்பேக்கடுவவை நேரில் சந்தித்துப் பிள்ளைகள் தொடர்பில் கேட்டேன். அதற்குஅவர்அளித்தபதில், உங்கள் பிள்ளைகளை டக்ளஸ் விடுவார் என்பது. இதன் பின்பு கொழும்பில் டக்ளஸைச் சந்தித்தேன். எனது பிள்ளைகள் தொடர்பில் கேட்டேன். நீங்கள் தீவுப் பகுதிக்குப்போங்கள், உங்கள் பிள்ளைகளை கொப்பேக்கடுவ விடுவார் என டக்ளஸ் கூறினார். இவ்வாறு மாறி மாறி அலைக்கழிக்கப்பட்டேன். இந்தக் காலப் பகுதியில் தான் எமக்கு ஓர் இராணுவத்தினரின் உதவி கிடைத்தது. குறித்த இராணுவத்தினர் கூறினார், 80 இளைஞர்கள் கப்பலில் ஏற்றப்பட்டு, திருகோணமலை கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்– என்றார்.

இதனால் எனது பிள்ளைகளின் புகைப்படத்தைக் காட்டி அதில் இவர்களும் இருந்தனரா என அவரிடம் கேட்டேன். அதற்கு இவர்களை ஒத்த வயதினரே இருந்தனர் இருப்பினும் என்னால் அடையாளம் கூற முடியவில்லை–என்றார்.

பின்பு ஒரு தடவை அவர் திருகோணமலைக்குச் சென்ற சமயம், அங்கிருந்த உணவுப் பதிவேட்டைப் பார்வையிட்டு அதில் எனது மூன்று பிள்ளைகளினதும் பெயர் உள்ளது என எனக்குக் கடிதம் அனுப்பினார்.

இதன்பின்பு 1996 ஆம் ஆண்டு மே 26 ஆம் திகதி சந்திரிகா அம்மையாரின் காலத்தில் இடம்பெற்ற ஆணைக்குழுவில் இவற்றைத் தெரிவித்தேன். அப்போது அவர்கள் டக்ளஸிடம் இவை தொடர்பில் கேட்கவேண்டும் என்றனர்.

தொடர்ந்து 2001 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சட்டத்தரணி மகேஸ்வரியைச் சந்தித்து இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரினேன். அதற்கு இவர்களில் பாதிப்பேர் இராணுவத்தினரிடமும் மிகுதிப்பேர் தம்மிடமும் பணியாற்றுகின்றனர். இது தொடர்பில் டக்ளஸிடம் கேட்டுச் சொல்லுகின்றேன் எனப் பதிலளித்தார்.

அதன் பின்பு டக்ளஸைச் சந்திக்கப் பல முறை கேட்டும் சந்திக்கவில்லை. ஓர் ஐந்து நிமிடம் உரையாடக் கூட அனுமதிக்கவில்லை. இந்த ஈ.பி.டி.பி யினரால் இவ்வாறு மாறி மாறி ஏமாற்றப்பட்டோம். எனவே எனது பிள்ளையை மீட்டுத்தாருங்கள் எனக் கதறினார். (த–வ–101)

## குடி தண்ணீரால்

தொடர்பில் ஆராயப்பட்ட குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அந்த அறிக்கையை நான் படித்தேன். அதில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்துக்கு அதிகளவிலான பணம் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதனைத் தற்காலிகத் தீர்வாக வைத்துக் கொண்டு, வேறு நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும்

இதற்காகத்தான் ஆரம்பத்தில் நாம், இரணைமடுக் குளத்தைப் புனரமைத்தல் என்பதுடன், யாழ். நகருக்கான குடிதண்ணீர்த் தேவைக்கானவழிமூலங்களைக் கண்டறியவேண்டும் எனவும், அதற்கு ஆறுமுகம் திட்டத்தையும் பரிசீலிக்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தோம் என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த பொறியியலாளர் பாரதிதாசன், ஆறுமுகம் திட்டம் உடனடியாகப் பயன் தராது. மூன்று திட்டமாக்கப்பட்ட இரணைமடுக் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தில், இரணைமடுக் குளம் புனரமைப்பு மட்டும் நடைபெறுகின்றது. யாழ்ப்பாணத்துக்கான தண்ணீர் விநியோகம் எங்கிருந்து எவ்வாறு செய்வது என்பது இன்னமும் முடிவாகவில்லை. யாழ்.நகருக்கான கழிவகற்றல் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு இல்லாத நிலைமை இருக்கின்றது. எனவே இது தொடர்பில் விரைவாக முடிவு எடுக்கப்படவேண்டும் என்றார்.

மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில், மாகாண சபையில் இரணைமடுத் திட்டத்தை மூன்றாக மாற்றுவது தொடர்பில் எடுத்த நடவடிக்கை பிழையானது. ஒரு சிலரின் நலனுக்காக, அது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரணைமடுக் குளத்திலிருந்து கடலுக்குச் செல்லும் நீரையாவது யாழ்ப்பாணத்துக்கு தாருங்கள். சர்வதேசரீதியில் 2020 ஆம் ஆண்டு சகலருக்கும் சுத்தமான குடிதண்ணீர் கிடைக்கவேண்டும் என்று சொல்கின்றார்கள். ஆனால் இங்கே கிடைக்காது போலிருக்கின்றது. வடக்கு மாகாணம் தவிர ஏனைய இடங்களில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இதனையடுத்து பொறியியலாளர் பாரதிதாசன் தெரிவிக்கையில், சர்வதேச தரத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குடிதண்ணீர் தரத்தை விடக் குறைவான தரத்தை உடைய குடிதண்ணீரையே யாழ். மாவட்ட மக்கள் பயன்படுத்துகின்றனர். யாழ். மாநகர சபைப் பகுதி, சுன்னாகம் பகுதிகளில் மலம் கலந்த குடிதண்ணீரையே பயன்படுத்துகின்றனர் என்றார்.

இறுதியில் கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்களுள் ஒருவரான மாவை.சேனாதிராசா, இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சினையில் எமது இனத்தை நாமே அழித்துக் கொண்டிருக்கின்றோம். இதனை ஒவ்வொருவரும் உணரவேண்டும். நான் போத்தல் தண்ணீர் குடிக்கின்றேன். இங்குள்ள எல்லா மக்களாலும் அது முடியுமா ? எனவே யாழ்ப்பாணக் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும்.

இரண்டு வாரங்களுக்குள், யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபையினர் மற்றும் இதனோடு தொடர்புடைய அரச அதிகாரிகள் அழைக்கப்பட்டுக் கலந்துரையாடல் நடத்தப்பட்டு முடிவு எடுக்கப்படவேண்டும் என்றார்.

இந்த விடயம் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்ட போது, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனோ, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனோ சபையில் இருக்கவில்லை. (த–வ–5,ரி5)

## ஐ.நா

வரவுள்ளனர்.

இவர்கள், ஏப்ரல் 29ஆம் திகதிக்கும், மே 7ஆம் திகதிக்கும் இடையில் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

இவர்களின் பயணத்துக்கு இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளது.

இவ்வாறு வருகை தருபவர்களில் சிறப்பு அறிக்கையாளர் மொனிக்கா பின்ரோ, இலங்கையிலுள்ள நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் குறித்து விசேட ஆய்வொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அத்துடன், சிறப்பு அறிக்கையாளர் ஜுவன் மெண்டிஸ், நாட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஆள்கடத்தல், அச்சுறுத்தல்கள் குறித்து ஆராயவுள்ளார். இவர்களினால் தயாரிக்கப்படும் இறுதி அறிக்கை, ஐ.நாவின் பொதுச் செயலாளரிடம் முன்வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 31 ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இதில் எதிர்வரும் மார்ச் மாதம் 7, 10,14 மற்றும் 16 ஆம் திகதிகளில், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இலங்கை தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த–வ–5)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் செல்லத்துரை

(முன்னாள் அரச ஒப்பந்தகாரர்)



மலர்வு 10 . 02 . 1933

உதிர்வு 28 . 02 . 2016

வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் செல்லத்துரை நேற்று (28.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வராணி, விஜயேஸ்வரி, மகேந்திரநாதன், இரத்தினேஸ்வரி இரஞ்சினி, சிவா (கிராமசேவையாளர், J/26 புங்குடுதீவு தெற்கு), காலஞ்சென்ற சந்திரவதனி, ஜெயா (குடும்பநல உத்தியோகத்தர் - நீர்வேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரசேகரம், காலஞ்சென்ற சண்முகராசா, நிர்மலாதேவி, திருஞானசம்பந்தர், விஸ்னுதாசன், கஸ்தூரி, சின்றிமோகன் (பொது சுகாதார பரிசோதகர் - தொழுவ) ஆகியோரின் அன்பு மாமனும், சர்மிளா, காலஞ்சென்றவர்களான துஸ்யந்தன், கிந்துசன் , மயூரி மற்றும் மதிவதனி, மதிவதனன், மதிவண்ணன், கேதுசன், கிந்துசா, திலீபனா, ஜெனோசன், இலட்சிகன், சாம்பவி, சாறுமதி, ஜெனனி, நிதோசன், தர்மிசன், அப்சனா, சீராளன், அட்சயன், லேஷவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2016) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப.2.00 மணியளவில் வாதரவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வாதரவத்தை**
**புத்தூர்.**

(69697) (15.18)

தகவல்:
**செ.சிவா (மகன் - கிராம சேவையாளர்)**
**077 055 8956**

## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி வல்லிபுரம்



வளர்மதி, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பூமணி 27.02.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் - ஆழ்வி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் செல்வரஞ்சினி, யோகேஸ்வரன்(இ.போ.ச - யாழ்ப்பாணம்), ரஞ்சிதமலர், ஜெயமலர், சுதாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வேலுப்பிள்ளை(யாழ் போதனாவைத்தியசாலை), உமாபதி, கிருஷ்ணகுமார், ஜெயக்குமார், ரோகினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்லத்தம்பி, மீனாட்சி, வீரசிங்கம், புனிதவதி, பொன்னுத்துரை, தங்கராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் முகுந்தன்(பிரான்ஸ்), குமுதினி, துஷ்யந்தினி, சுதர்சன், கிருஷாந்தினி, கிருஷாந்தன், கௌசல்யா, நிரோஜா, ஜானுசன், பானுஜன், கேசவப்பிரியன், சஹானா, சுபீட்சன், றேனுசன், பவிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(01.03.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வளர்மதி,**
**கரவெட்டி கிழக்கு,**
**கரவெட்டி.**


(89604) (14.16.20)

தகவல்:
**வ.யோகேஸ்வரன்**
**(மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
25 • 01 • 1941



ஆண்டவர் நிழலில்
28 • 02 • 2016

"சாகித்ய ரத்னா"

## கலாநிதி கந்தையா குணராசா

**(செங்கையாழியான்) SLAS - I**

**(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் - நல்லூர், பதிவாளர்-யாழ். பல்கலைக்கழகம் ஆணையாளர் - யாழ் மாநகரசபை)**

யாழ். கலட்டி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பிறவுண்வீதி, நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட கலாநிதி. கந்தையா குணராசா நேற்று (28.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தென்னிந்தியாவில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கோவில்கொண்டருளியிருக்கும் ஆறுமுகசாமி அவர்களின் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான விஜயரெட்ணம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் (ஓய்வுபெற்ற அதிபர்-நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) அன்புக் கணவரும், Dr. ரேணுகா (National Ayurveda Hospital of Srilanka-Co-08) பிரியா (ஆசிரியை-கொழும்பு இந்துக் கல்லூரி-இரத்மலானை) ஹம்சா (கணினி ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. பிரதீப்குமார் (Lady Ridgeway Hospital Colombo-08), பாலேந்திரன் (பொறியியலாளர், Sierra Telecom-Colombo) உதயகுமார் (Operational Manager - New UthayanPublication (Pvt) Ltd ) ஆகியோரின் அன்பு மாமனும், யதுர்ஷன், பிரணவி, விதுர்ஷன், நிலாணி, ஜருணி, ருத்ரேஷ், ஷாத்விக் ஆகியோரின் பேரன்புமிக்க அம்மப்பாவும், காலஞ்சென்றவர்களான யோகரெத்தினம், மகேஸ்வரி, கந்தசாமி (புதுமைலோலன்) தங்கேஸ்வரி, ஜெயராசசிங்கம் ஆகியோரின் அருமை சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, சபாரத்தினம் மற்றும் கனகமணி (கனடா), ரத்தினம் (கனடா), சிவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான ராஜரெட்ணம், சண்முகநாதன், அசலாம்பிகை, மகாலிங்கம் மற்றும் ஞானாம்பிகை (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற யோகவதி மற்றும் தெய்வானைபிள்ளை (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ராஜகுலசிங்கம் மற்றும் லலிதாதேவி (கொழும்பு), பத்மநாதன் (இந்தியா) ஆகியோரின் அன்பு சகோதரனும், பெறாமகள் ஜெயராணியின் (யாழ்ப்பாணம்) சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.03.2016 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

75/10A, **பிறவுண்வீதி,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**

021 222 2337

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

(C/29558)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமந்திரனின்

(கடந்த வெள்ளிக்கிழமை) யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உலக வங்கிக் குழுவினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒரு யோசனை முன்வைக்கப்பட்டது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபையினரைத் தனித் தனியே சந்தித்துக் கலந்துரையாடிக் கொண்டிருக்காமல், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபையினர், உள்ளூராட்சி மன்றத்தினர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவை, மாவட்ட அபிவிருத்திக் குழுவில் தெரிவு செய்து அவர்களுடன் கலந்துரையாடல் நடத்தலாம் என்ற யோசனையே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இது தொடர்பிலான ஒரு குழுவைத் தெரிவு செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்துத் தெரிவித்தபோது, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபையின் தலைமையில் செயற்படுத்தலாம். உள்ளூராட்சி மன்றங்களும் வடக்கு மாகாண சபைக்குள்ளேயே வருகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுமானால் உங்கள் கருத்துக்களை எங்களிடம் முன்வைத்தால் அதனையும் ஆலோசிப்போம்–என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைகளை உலக வங்கியிடம் நேரடியாக முன்வைக்கலாம். ஆனால், நகர அபிவிருத்தித் திட்டத்தை இலகுவாகவும் விரைவாகவும் முன்கொண்டு செல்வதற்கு இந்தக் குழுவை நியமிப்பது பொருத்தமானது–என்றார்.

இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நீங்கள் அவ்வாறு தனியாகச் செய்வது என்றால் செய்யுங்கள். வடக்கு மாகாண சபையின் தலைமையில்தான் செயற்படுத்தலாம்–என்றார். இதனால் ஆலோசனைக் குழு அமைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

(த-வ-5-ரி5)


### மரண அறிவித்தல்

**திருமதி பரமேஸ்வரி முருகையா**



36, பூநாறி லேன், கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி முருகையா நேற்று (28.02.2016) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-இரத்தினம் தம்பதியரின் மகளும், முருகையாவின் அன்பு மனைவியும் வரதராஜன், ரஞ்சிதகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்.

(69708)(10.17)

### மரண அறிவித்தல்

**கணபதிப்பிள்ளை வடிவேலு**

(உதவி பொலிஸ் பரிசோதகர்)

பிறப்பு:- 21.05.1958 இறப்பு:- 28.02.2016



வெல்லிக்கந்தோட்டம், துன்னாலை கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், பண்டாரிக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வடிவேலு (உதவிப் பொலிஸ் பரிசோதகர், வவுனியா) நேற்று (28.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் யோகேஸ்வரியின்(ஆசிரியை) அன்புக் கணவரும், ரஜீவ் பிரகாஷ், சஞ்சீவ் பிரகாஷ், குபேஜி பிரகாஷ், வேஜிபிரகாஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கருணநந்தம் (பொலிஸ்) மற்றும் சிதம்பரப்பிள்ளை காலஞ்சென்ற வர்களான வெங்கடசலம், இராசன் மற்றும் ஞானேஸ்வரி, மங்களேஸ்வரி, காலஞ்சென்ற செல்லம்மா பொன் னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.03.2016 செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்டாரிக்குளம்,
வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.
0775705984

(69699)(10.17)

### மரண அறிவித்தல்

**நாகலிங்கம் சிங்கராசா**



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிங்கராசா நேற்று (28.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-விசாலாட்சி தம்பதியரின் மருமகனும், சாந்தினியின் அன்புக் கணவரும், சிவானியின் (தபாலதிபர், கோப்பாய்) பாசமிகு தந்தையும், கௌரிதாசனின் (விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்-தென்மராட்சி) அன்பு மாமனும், கௌதமி (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) சிவானுஜன் (யாழ். பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசாமி அன்னம்மா, சுப்பிரமணியம், லங்காதேவி மற்றும் சிவ லிங்கராசா, பரமேஸ்வரி, புஸ்பராணி, சரோஜினிதேவி, மகாலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, இரத்தினம், சிவநாயகம் மற்றும் செல்வராசா, அரிய ராணி ஸ்ரீ ரமணி, சிவகோசாரியார் பேரின்பலிங்கம், தயா (சுவிஸ்) சாந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும், இராம தாசனின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2016) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்: குடும்பத்தினர்.
0776279804

(69699)(10.17)

### மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 11 . 1946



இறப்பு
27 . 02 . 2016

**தம்பித்துரை இராசதுரை (ராஜா)**

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், அரசடி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை இராசதுரை (ராஜா) 27.02.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நளினாசனியின் (பாடசாலை பற்சிகிச்சையாளர்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் மற்றும் ஜெயமலர் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கிருஸ்ணவேணி மற்றும் பத்மலோஜினி, தவத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாஸ்கரன், கமலாசனி மற்றும் யமுனா, பகீரதன் ஆகியோரின் மைத்துனரும், உமையாள், காலஞ்சென்ற உதிஸ்ரா மற்றும் றுக்கேஸ், பிரியங்கா, சயந்திரன், தவப்பிரியா, சபிதரன் ஆகியோரின் மாமனும், நர்மிலா, காண்டீபன், கீர்த்தனா, சஞ்சீவன், பிரணவன், அனுஸ்கன், மிதுனன், ஆரணன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2016) காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி, ஆனைக்கோட்டை.
021 225 5543

தகவல்:
குடும்பத்தினர்.

(69705) (10.17)

### மரண அறிவித்தல்

தோற்றம்:
18 . 03 . 1956



மறைவு:
28 . 02 . 2016

**ஜனககுமாரி குணரட்ணம்**

(சங்கீத ஆசிரியை -கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை)

வதிரி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜனககுமாரி குணரட்ணம் நேற்று (28.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை (ஆசிரியர்), தவமணிதேவி தம்பதியரின் சிரேஷ்ர புத்திரியும், குணரட்ணத்தின் (முன்னாள் மேற்பார்வையாளர் - சீநோர் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும்,காலஞ்சென்ற சின்னத்துரை - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், குணஜீவன், துஷ்யந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெனித்தா (முகாமைத்துவ உதவியாளர் - வலயக்கல்வி அலுவலகம் , வவுனியா), கௌசிகன் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆருக்ஷனின் அன்புப் பேர்த்தியும், ஜனககுமார் (நோர்வே), ஸ்ரீஜனககுமார் (சுவிஸ்), ஜனகராணி (மருத்துவமாது - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை), ஜனகநளினி (கொழும்பு), ஜனக மாலினி (ஆசிரியர் - பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வதிரி ஆலங் கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவமனை,
கலாநிலையம், வதிரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/29559) (11,18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைப் பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் உடுவில் மகளிர் கல்லூரி அணி சம்பியனானது. (ம-23)




மன்னார் தோட்டவெளி ஜோசவாஸ்நகர் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆயர் இராயப்பு ஜோசேப் விளையாட்டு மைதானத்தை இளைப்பாறிச் சென்ற மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகை கடந்த சனிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். (ம-23)

# வடக்கை விட்டு திசைமாறுகிறதா தேசிய விளையாட்டுப் போட்டிகள்

கிளிநொச்சி, பெப். 29

நடப்பு வருடத்துக்கான தேசிய விளையாட்டுப் போட்டிகள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் நடைபெறத் திட்டமிட்டிருந்த நிலையில் மைதானக் கட்டுமானங்கள் இன்னமும் முழுமை பெறவில்லை என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. குறித்த அமர்வில், தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்ட வேளையிலேயே மைதானக் கட்டுமானங்களின் துரிதத்தன்மை தொடர்பாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. வடமாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் மைதானங்கள், நீச்சல் தடாகம், உள்ளரங்கள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை அவையின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடப்பு வருடத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் நடைபெறவுள்ள நிலையில் கட்டுமானங்கள் முழுமையடையாததைச் சுட்டிக்காட்டி உரிய நேரத்தில் பூர்த்தி செய்து தருமாறு இணைத் தலைவர்களிடம் கோரிக்கையை முன் வைத்தார்.



ரவீந்திரனையடுத்து கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மைதானக் கட்டுமானங்கள் காலங்கடத்தப்படுவதற்கு அதிருப்தி தெரிவித்தார். கட்டுமானங்கள் முழுமைபெறாதவிடத்து தேசிய விளையாட்டுப் போட்டிகள் வடக்கை விட்டு வேறு பிரதேசங்களுக்குச் செல்லக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக, அரச அதிபர்கள் மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்டதைச் சுட்டிக் காட்டி, நடப்பு வருடத்தில் தேசிய விளையாட்டுப்போட்டிகளை நடத்துவதில், விளை யாட்டு அமைச்சிடம் இரண்டாம் தெரிவுகள் உள்ளதாகவும் வெளிப்படுத்தினார். மேலும், தொடர்கையில், நீச்சல் தடாகம் 85 வீதமும், தடகள மைதானம் 60 சதவீதமும், பார்வையாளர்கள் அரங்கு 65 சதவீமும், கிரிக்கெட் மைதானமும் அரங்கமும் (தேசிய தரத்திலானது அல்ல) 70 வீதமும் மட்டுமே முழுமை அடைந்துள்ளதாகத் தெரிவித்து உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுத்துத் தருமாறு இணைத்தலைவர்களிடம் கோரிக்கையை முன்வைத்தார்.

அரச அதிபரின் கோரிக்கை அடுத்து கருத்துத் தெரிவித்த முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், குறித்த விடயங்களை எழுத்தின் மூலம் ஒப்படைக்குமாறும் உரிய நடவடிக்கைகளை எடுத்துத் தருவதாகவும் தெரிவித்தார். (ம-21)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 29

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

**குணபாலசிங்கம் ஞாபகார்த்தத்தொடர்**

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து குணபாலசிங்கம் கிண்ணத்துக்காக 40 வயதுக்கு மேற்பட்டவர்களின் அணிகளுக்கு இடையில் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து அல் இக்பால் அணி மோதவுள்ளது. (ம-23)

## வடமராட்சி கோட்டப்பாடசாலைகளின் பெருவிளையாட்டுப் போட்டிகளில் இன்று

வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்கள் சில இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன.

இதன்படி 15 வயது மற்றும் 19 வயது பெண்களுக்கான வலயமட்ட பூப்பந்தாட்டத் தொடர்கள் நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கிலும், 19 வயதுப் பெண்களுக்கான எல்லே தொடர்கள் நெல்லியடி மத்திய கல்லூரியின் மைதானத்திலும், கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடர் இமையாணன் அ.த.க. பாடசாலை மைதானத்திலும், பருத்தித்துறைக் கோட்டப் பாடசாலைகளுக்கான துடுப்பாட்டத் தொடர் திக்கம் விளையாட்டுக் கழக மைதானத்திலும் மருதங்கேணி கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான போட்டிகள் செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை மைதானத்தலும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, பருத்தித்துறைக் கோட்டத்துக்குட்பட்ட பாடசலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் கரவெட்டிக் கோட்டப் பாடசலைகளுக்கு இடையிலான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமைநெல்லியடிமத்தியகல்லூரிமைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ம-108)

## கரைச்சிக் கோட்ட கபடி

யாழ்ப்பாணம், பெப். 29

கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான கபடிப் போட்டி இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி அ.த.க.பாடசாலை மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-422)

## நல்லூர் கோட்ட துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 29

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

## நெடுங்கேணி கோட்ட மெய்வன்மை

மாங்குளம், பெப், 29

நெடுங்கேணி கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் காலை 8 மணி முதல் புளியங்குளம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. 11வயது, 13வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் இன்றும் 15, 17, 19, 21 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் நாளையும் நடைபெறவுள்ளன. (ம-422)

## தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலைகளின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 29

தெல்லிப்பழை கல்வி கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 3ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இதில் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் மகாஜனக்கல்லூரி மைதானத்திலும், 15வயதுப்பிரிவு, 19வயதுப்பிரிவு அணிகளுக்கான கால்பந்தாட்டத் தொடர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுனைற்ரெட், ஐக்கிய அணிகள் வென்றன மன்னார் கால்பந்தில்

யாழ்ப்பாணம், பெப். 29

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் யுனைற்ரெட், ஐக்கிய அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 6.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது. இதில் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகம் 1:0 ன்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் விடத்தல் நீவு ஐக்கிய அணியை எதிர்த்து றீகன்ஸ்ரார் அணி மோதிக்கொண்டது. இதில் விடத்தல்தீவு ஐக்கிய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



சங்கானை பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட எல்லே தொடரில் மூளாய் விக்ரோரி அணி கிண்ணம் வென்றுள்ளது. 7 அணிகள் பங்குபற்றிய குறித்த தொடரின் இறுதி ஆட்டத்துக்கு சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகம் தகுதி பெற்றிருந்தது. (ம-23)

# யங்ஸ்ராருக்கு வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 29

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யங்ஸ்ரார் அணி வெற்றி பெற்றுள்ளது.

சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் 'ஏ' அணியை எதிர்த்து அல் மதீனா அணிமோதிக்கொண்டது. இதில் யங்ஸ்ரார் 'ஏ' அணி 3:0 என்ற கோல் கணக்கல் வெற்றி பெற்றது. (ம-23)

# தென்றல் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப். 29

புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் தென்றல் அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 6.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இணுவில் அண்ணா அணியை எதிர்த்து நவாலி தென்றல் அணி மோதிக் கொண்டது. இதில் நவாலி தென்றல் அணி 10:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# கமலாவதி ஞாபகார்த்த கிண்ணத்தை வென்றது இளவாலை சென்.ஹென்றிஸ்



யாழ்ப்பாணம், பெப். 29

கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம், குறித்த வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியரும் பிரதி அதிபருமான திருமதி சந்திரகாந்தன் கமலாவதி ஞபகார்த்த கிண்ணத்துக்காக வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மன்னார் சென்.லூட்சியா மாகா வித்தியாலய அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. முதல் பத்து நிமிடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சில வாய்ப்புக்கள் சென்.லூட்சியாவுக்கு கிடைத்த போதிலும் எந்தவொரு வாய்ப்பும் கோலாக மாற்றம் பெறவில்லை. 18ஆவது நிமிடத்தில் சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியின் மதுசன் முதல் கோலைப் பதிவுசெய்தார். அக்கோலே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது.

பெரிதான மாற்றங்கள் இல்லாமல் நகர்ந்தது இரண்டாம் பாதி. 15ஆவது நிமிடத்தில் இளவாலை சென்.ஹென்றிஸின் அனோசன் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய ஹென்றிஸின் ஆதிக்கம் மிகையானது. பழிதீர்த்திட படாதபாடு பட்டது சென்.லூட்சியா. எதுவும் பயனளிக்கவில்லை. முடிவில் 2:0 என்ற கோல்கணக்கில் மற்றொரு கிண்ணம் வென்றது சென்.ஹென்றிஸ். சிறந்த கோல் காப்பாளராக இளவாலை சென். ஹென்றிஸின் அமல்ராஜ்தெரிவானார். தொடர்நாயகனாக ஹென் றிஸின் கிருசாந் தெரிவானார். ஆட்ட நாயகனாக மன்னார் சென்.லூட்சியா மாகா வித்தியாலய அணியின் வில்லியம் ஜேம்ஸ் தெரிவானார். (ம-23)

# கிண்ணம் வென்றது விக்ரோறியன்ஸ் அணி

யாழ்ப்பாணம், பெப். 29

சங்கானை பிரதேச செயலக பரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகம் கிண்ணம் வென்றுள்ளது.

வட்டுக்கோட்டை இளைய நட்சத்திர விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்ரோறி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

# தெல்லிப்பழை கோட்ட கால்பந்தாட்டம்

மாங்குளம், பெப், 28

தெல்லிப்பழை கோட்டமட்டப் பாடசாலைகளின் ஆண்கள் அணியினருக்கான கால்பந்தாட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.30மணிக்கு நடைபெறவுள்ளது. இதன்படி 15வயது, 19வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் அருணோதயக் கல்லூரி மைதானத்திலும், 17வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் மகாஜனக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளது. (ம-422)



# வலிகாமம் தெரிவு அணியை வீழ்த்தியது வடமராட்சி தெரிவு அணி

கரணவாய், பெப். 29

இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளத்தினால் நடத்தப்படும் சிரேஷ்ட பிரிவினருக்கான தொடரில் வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் தெரிவு அணியைப் பந்தாடியது வடமராட்சி கால்பந்தாட்ட தெரிவு அணி.

குறித்த ஆட்டம் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவடைந்தது முதல் பாதி.



இரண்டாம் பாதியிலும் பெரிதான மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை. 13 ஆவது நிமிடத்தில் துசி மூலம் முதல் கோலைப் பதிவு செய்தது வடமராட்சி கால்பந்தாட்ட அணி. பழிதீர்க்கும் முனைப்பில் தற்காப்பு ஆட்டத்தை கைவிட்டது வலிகாமம். இது வடமராட்சிக்கு மேலும் சாதகமாக அமைய அந்த அணியின் பிராகாஸ் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். கிட்டத்தட்ட உறுதியானது வடமராட்சியின் வெற்றி. துஸி மேலும் இரண்டு கோல்களையும் பிராகாஸ் மற்றொரு கோலையும் பதிவுசெய்ய முடிவில் 5:0 என பெரும் வெற்றிபெற்றது வடமராட்சி லீக்கின் கால்பந்தாட்டத் தெரிவு அணி. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை நொறுக்கியது பங்களாதேஷ்



ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இலங்கை-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 23 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது பங்களாதேஷ்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் முதலில் துடுப்பெடுத்தாடுவதென்பது சற்று வித்தியாசமான முடிவுதான். ஓர் ஓட்டத்தைத்தானும் பெறாமல் ஆட்டமிழந்தனர் ஆரம்ப வீரர்களான மிதுனும் சர்கரும். ரகிமையும் ரண்அவுட் செய்துவிட்டு துள்ளிக் குதித்தார் மத்தியூஸ். இலங்கையின் கொண்டாட்டங்களை அடியோடு இல்லாமல் செய்தார் ரகுமான். நெருக்கடிகளை உணராது ரகுமான் அடித்தாட மறுமுனையில் இலக்குச் சரிவை ஏற்படாமல் பார்த்துக்கொண்டார் சகிப் அல்கசன்.

இணைப்பாட்டம் 50 ஓட்டங்களைத் தாண்டியது. அவ்வப்பொழுது தொடர்ச்சியான பவுண்டரிகளை விளாசி அரைச்சதம் கடந்தார் ரகுமான். பலம் பெற்றது பங்களாதேஷ். 80 ஓட் டங்களுடன் முடிவு கண்டது ரகுமானின் ஆட்டம். இருப்பினும் பங்களாதேஷ் பலமான நிலையில் தான். பின்வரிசையில் முகமதுல்லா 12 பந்துகளை எதிர்கொண்டு 23 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் பங்களாதேஷ் 7 இலக்குகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு களமிறங்கிய இலங்கைக்கு, சில பிடியெடுப்புக்கள் தவறவிட ஆரம்பம் இலக்கை எட்டும் படியாகவே அமைந்தது. 15 ஓட் டங்களுடன் வீழ்ந்தார் டில்சான். சந்திமல், ஜெய சூரிய இணை மேலதிக இலக்குகளை இழப்பில்லா மல் 50 ஓட்டங்களுக்கு அப்பாலும் தாக்குப் பிடித்தது. சந்திமல்லின் ஆட்டம் திருப்திதரும் வகையில் அமையவில்லை. 37 பந்துகளில் 37 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். அவ்வப்பொழுது சில சிக்சர்களை விளாசி மிரட்டினார் ஜெயசூரிய. விட்டுவைக்கவில்லை சகிப்அல்கசன். டெஸ்ட் பாணியில் இன்னிங்ஸை கட்டமைத்தார் மத்தியூஸ். பந்துகள் வீணடிக்கப்பட்டும் நெருக்கடி ஏற்பட்டது. பின் வரிசை வீரர்களாலும் பங்களாதேஷின் பந்து வீச்சை எதிர்கொண்டு எதையும் சாதிக்க முடியவில்லை. முடிவில் 23 ஓட்டங்களால் மண்ணைக் கௌவியது இலங்கை.

பந்துவீச்சில் பங்களாதேஷின் சார்பாக அல் அமின் 3 இலக்குகளையும், சகிப் அல்கசன் 2 இலக்குகளையும், முஸ்தபிர் ரகுமான், மோர்ரசா, முகமதுல்லா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள். ரகுமான் ஆட்ட நாயகனானார். (ம)




## கனிஷ்ட மெய்வன்மையில் யாழ். மத்தி ஆதிக்கம்



யாழ்ப்பாணம், பெப். 29

யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வன்மைப் போட்டிகள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றும் நேற்றுமுன்தினமும் நடைபெற்றன. இதில் ஆண்கள் பிரிவிலும், ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையிலும் யாழ்.மத்திய கல்லூரி முதலிடத்தைப் பிடித்தது. பெண்கள் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பிடித்தது.

ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி 143 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் சென். ஜோன்ஸ் கல்லூரி 63 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தையும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 61 புள்ளிகளைப்பெற்று 3 ஆம் இடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி 70 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், மகாஜனக் கல்லூரி 48 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்தையும்,சாவகச்சேரி இந்துக்கல்லூரி 41 புள்ளிகளைப்பெற்று 3ஆம் இடத்தையும் பெற்றன.

ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் (இருபால்) யாழ்.மத்திய கல்லூரி 143 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், யாழ். பல்கலைக் கழகம் 89 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தையும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி 79 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்தையும் பெற்றன. நிகழ்வுக்கு விருந்தினராக யாழ். கல்வி வலய ஓய்வு பெற்ற உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே . குமாரசாமி கலந்து கொண்டார். (ம-422)

A/L தொழினுட்பப்பிரிவிற்கு வடக்கு,கிழக்கு மாகாணங்களில் தனித்துவமான ஓரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்
விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
2016
பொறியியற் தொழில்நுட்பம்
உயிர்முறமைகள் தொழில்நுட்பம்
தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்
வினாத்தாள் வகுப்புக்கள் ஆரம்பம்
2016.03.01
AL குடிசார் தொழினுட்பவியல் (14) பாடத்திற்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றன
ஆசிரியர் P.சண்முகதாசன்.
0772487774

சென்றல் பினான்ஸ்
மாபெரும் வாகன சந்தை
யாழ்ப்பாணம்
மாநகரசபை மைதானம்
(சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாக)
உட்செல்லல் இலவசம்
2016 பங்குனி 3 ஆம் 4 ஆம் 5 ஆம் திகதிகளில்



பிரபல்யமான வாகனங்களின் தெரிவு மற்றும் கவர்ச்சிகரமான நிதி அல்லது குத்தகை வசதியினை எளிதாகவும் உச்ச வாய்ப்பை அளிக்கும் நிபந்தனைகளுடன் பெற்றுக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
இந்த மதிப்பு மிக்க வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.
நிபந்தனைகளுக்குட்பட்டது. (69656) (14,18)
சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
கிளை - 364, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
077 210 6324, 077 210 8780, 077 739 3881

ES Printers
Poster / Notice
Lable / Wedding
Card / Bag Print /
Award / Frame Item /
Batch / Vehicle Brand /
T-Shirt / Cap
ID Card / Key Tag
Book Mark /
Pen Print /
Book Printing /
Woodent Print
GiftZ
உங்கள் உறவினர்களுக்கு அன்பளிப்பு பொருள்களை எம் இணையத்தளம் ஊடாக அனுப்பி மகிழுங்கள்
www.esgiftz.com
info@esgiftz.com



சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.



#357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.